




2024 ஒக்டோபர் 11 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 243 | Friday 11, October, 2024 | 28 பக்கங்கள் | 50/-






CALIN BABY Soap

# கெலீன் பேபி சவர்க்காரம் SLS தரச் சான்றிதழை வென்றுள்ளது..!




## இலங்கையின் சுகாதார பாதுகாப்பு மிக்க பேபி சவர்க்காரம் தற்போது 15 விலங்குகளின் உருவ வடிவங்களில்



கெலீன் பேபி, ஆமண்டி, பிளோரல், வேம்பு ஆகிய சவர்க்காரம் மற்றும் 15 விலங்குகளின் உருவ வடிவங்களில் வருகின்றன மில்கி, கிரீம், ஒலிவ் ஆகிய அனைத்து கெலீன் பேபி சவர்க்காரங்களும் SLS தரச் சான்றிதழை வென்றுள்ளன. கெலீன் பேபி சவர்க்காரங்களை ரூபா 90/- விலை தொடக்கம் பாவனையாளர்களாகிய உங்களுக்கு கடைகளில் இருந்து வாங்க முடியும்.

- SLS Certified (இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் SLS 547 தரச் சான்றிதழ் கிடைக்கப்பெற்றுள்ளது.)
- Total Fatty Matter (TFM) அளவு நூற்றுக்கு 78% இற்கு மேல்.
- ISO 9001 : 2015 Certified Company.
- ISO GMP 22716 : 2007 Certified Company.
- NMRA (தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை) தரச் சான்றிதழைப் பெற்ற உற்பத்தி நிறுவனமாகும்.
- IFRA Approved Perfumes. (சர்வதேச வாசனைத் திரவியங்கள் சங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட வாசனை திரவியங்கள் மாத்திரம் பயன்படுத்தப்படுகின்றன.)
- ISO EMS 14001 Certified.
- HACCP Certified.
- பாதகமான இரசாயனப் பொருட்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை..

தோல்வியுற்ற வர்த்தகர்களின் பொய்யான சேறு பூசும் பிரசாரங்களுக்கு ஏமாறாது இலங்கை கட்டளைகள் நிறுவனத்தின் SLS 547 தரச் சான்றிதழைப் பெற்ற கெலீன் பேபி சவர்க்காரத்தை பயன்படுத்துங்கள். விசாரணைக்கு 077 078 9263

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஒக்டோபர் 11 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN

**தொழுகை நேரம்**
10 முதல் 13 வரை
சுபஹ் - 05.04
ளுஹர் - 12.22
அஸர் - 03.38
மஃரிப் - 06.22
இஷா - 07.32

**இன்றைய சுபதினம்**
குரோதி வருடம் புரட்டாதி 25
ராகுகாலம் : காலை : 10.32 - 12.02வரை
சுபநேரம் : காலை : 06.02 - 07.32வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

பாகிஸ்தான், சவூதி, பலஸ்தீனம், பங்களாதேஷ்

# தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் ஜனாதிபதி அனுரவுடன் சந்திப்பு






இரண்டு தூதுவர்கள், மூன்று உயர்ஸ்தானிகர்கள் மற்றும் ஆறு நாடுகளின் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று(10) உயர்மட்ட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

இந்த இராஜதந்திர சந்திப்புகள், இலங்கையின் சர்வதேச உறவுகளை வலுப்படுத்துவதற்கும் பரஸ்பர அபிவிருத்தி மற்றும் செழுமைக்கான பகிரப்பட்ட வாய்ப்புகளை பின்பற்றுவதற்குமான அர்ப்பணிப்பை பிரதிபலிப்பதாக அமைந்தது.

இலங்கை மற்றும் அந்த நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது மற்றும் உலகளாவிய கூட்டுச் செயற்பாடுகளை மேம்படுத்துவது என்ற தற்போதைய அரசாங்கத்தின் கொள்கைக்கு இணங்க இந்த சந்திப்புகள் முன்னெடுக்கப்பட்டன.

சவூதி அரேபியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், துருக்கி, பலஸ்தீனம் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளின் தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் பிரதிநிதிகள் பல்வேறு துறைகளில் இலங்கைக்கும் தமது நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடினர்.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை சந்தித்த முக்கிய பிரமுகர்களில், இலங்கைக்கான சவூதி அரேபியாவின் தூதுவர் காலித் ஹமூத் நாசர் அல்தாசம் அல்கஹ்தானி துருக்கி குடியரசின் தூதுவர் செமிஹ் லுட்ஃபு துர்குட் பாகிஸ்தான் இஸ்லாமிய குடியரசின் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் (ஓய்வு) பஹீம் உல் அஸீஸ் ஹி( இலங்கைக்கான பங்களாதேஷ் உயர்ஸ்தானிகர் அந்தலிப் எலியாஸ் மற்றும் தற்போது இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள நான்கு நட்சத்திர அமெரிக்க கடற்படை அட்மிரல் மற்றும் அமெரிக்க பசுபிக் கடற்படையின் தளபதி அட்மிரல் ஸ்டீவ் கோஹ்லர்(*Admiral Steve Koehler, a 4star U.S. Navy Admiral and Commander of the U.S. Pacific Fleet*) ஆகியோர் அடங்குவர்.



தினகரன் THINAKARAN

**92**

வருடங்களுக்கு முன்
## தினகரன்
இன்று 11 ஒக்டோபர் 1932



## மீண்டும் மழை

மேலும் பெய்வதற்குரிய அறிகுறிகள்

கொழும்பில் இடி முழக்கங்கள் மீண்டும் ஆரம்பித்திருக்கின்றன. நேற்று முன்தினம் இரவு கோட்டையில் 6.03 அங்குல மழை பெய்ததாகக் கணக்கிடப்பட்டது. கொழும்பு அப்ஸர்வேட்டரியில் அதே நேரத்தில் 5.08 அங்குல மழை பெய்ததாகக் கணக்கிடப்பட்டது.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# இராணுவத்தின் 75 வருட நிறைவு: 1,412 வீரர்களுக்கு பதவி உயர்வுகள்

இராணுவத்தின் 75 ஆவது வருட நிறைவையிட்டு, நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளைச் சேர்ந்த 139 அதிகாரிகள் மற்றும் 1,273 ஏனைய தரங்களில் உள்ளவர்க ளுக்கு அடுத்த தர நிலை உயர்வு வழங்கப்பட்டுள்ளது. 131 லெப்டினன்கள், கெப்டன் நிலைக்கும் (உபகரண பொறுப்பாளர்கள் உட்பட) மற்றும் லெப்டினன்கள் எட்டுப்பேர்,லெப்டினன் நிலைக்கும் (நிரந்தர மற்றும் தொண்டர் படைகளின்) பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

இராணுவத்தின் 75ஆவது ஆண்டு நிறைவு (1949 – 2024) நேற்று வியாழக்கிழமை (10) கொண்டாடப்பட்டது. இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகேயின் பரிந்துரையின் பேரில், முப்படைகளின் சேனாதிபதி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் இலங்கை இராணுவத்தினருக்கு பதவி உயர்வுகள் வழங்கப்பட்டன.

மேலும் 99 அதிகாரவாணையற்ற அதிகாரிகள் II, அதிகாரவாணையற்ற அதிகாரிகள் I நிலைக்கும், 185 பணிநிலை சார்ஜெண்ட்கள் அதிகாரவாணையற்ற அதிகாரிகள் II நிலைக்கும், 380 சார்ஜெண்ட்கள் பணிநிலை சார்ஜெண்ட் நிலைக்கும், 346 கோப்ரல்கள் சார்ஜெண்ட் நிலைக்கும், 111 லான்ஸ் கோப்ரல்கள் கோப்ரல் நிலைக்கும், 152 சிப்பாய்கள் லான்ஸ் கோப்ரல் நிலைக்கும் நிரந்தர மற்றும் தொண்டர் படையணிகளில் பதவி உயர்வு பெற்றுள்ளனர்.

# பதில் பிரதம நீதியரசராக பதவிப்பிரமாணம்



பதில் பிரதம நீதியரசராக உயர் நீதிமன்ற நீதியரசர் முர்து நிரூபா பிதுஷினீ பெர்னாண்டோ நேற்று (10) ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

# தபால்மூல வாக்களிப்புக்கள் அக்,30 முதல் நவம்பர் 04 வரை

மேலதிகமாக நவ,07,08ஆம் திகதிகள்

பொதுத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு தினங்களை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. விசேட செய்தியாளர் சந்திப்பில் பங்கேற்றிருந்த ஆணைக்குழுவின் தலைவர், ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க இத்தினங்களை அறிவித்தார் .இதன் பிரகாரம்,எதிர்வரும் 30 முதல் நவம்பர் 04 வரைக்குமான நாட்கள்,தபால் வாக்களிப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளன.

அதேநேரம், இத்தினங்களில் அஞ்சல் மூல வாக்குகளைப் பதிவுசெய்ய முடியாதவர்களுக்காக எதிர்வரும் நவம்பர் (07) மற்றும் (08 ) ஆம் திகதிகள் மேலதிக நாட்களாக ஒதுக்கப்பட்டுள்ளன.

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுகள் எதிர்வரும் (23) தபால் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படும் எனவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் அட்டைகள் எதிர்வரும் (26) தபால் திணைக்களத்திடம் கையளிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் 27 மற்றும் 31 இன்னும், நவம்பர் 03ஆம் திகதிள் விசேட நாட்களாகக் கருதப்பட்டு, வாக்காளர் அட்டைகள் விநியோகிக்கப்பட உள்ளதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழு தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து விலகுவதாக பாட்லி அறிவிப்பு

உடன்படிக்கையில் இணக்கப்பாடுகள் ஏற்படவில்லை

பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாக ஐக்கிய மக்கள் சக்கியிலிலிருந்து விலகிக் கொள்வதாக பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் ஐக்கிய குடியரசு முன்னணி கட்சி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்கியின் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டாராவுக்கு ஐக்கிய குடியரசு முன்னணியின் செயலாளர் பந்துல சந்திரசேகர இதுதொடர்பாக நேற்று (10) கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

'உங்கள் கூட்டணியுடன் செய்துக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக ஐக்கிய மக்கள் சக்தியயின் தலைவர் சஜித் பிரேமதாவை ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறச் செய்ய,



06

# சர்வஜன அதிகாரக் கூட்டணியில் திலித் ஜயவீர கம்பஹாவில் போட்டி

(லோரன்ஸ்செல்வநாயகம்)

சர்வஜன அதிகாரக் கூட்டணியில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக, தாயக மக்கள் கட்சியின் தலைவர் திலித் ஜயவீர வேட்பு மனுவில் கையொப்பமிட்டுள்ளார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் தாயக மக்கள் கட்சியின் உப தலைவருமான சன்ன ஜயசுமன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மிலான் ஜயதிலக ஆகியோரும் சர்வஜன அதிகார கூட்டணியின் சார்பில் கம்பஹா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்பு மனுவில் கையெழுத்திட்டுள்ளனர்.தாயக மக்கள் கட்சியின் தலைமையகத்தில் இந்த நிகழ்வு நேற்றுக் காலை நடைபெற்றுள்ளது.

06




# ஆறு கோடி ரூபா போதைப் பொருளுடன் பொரளைப் பகுதியில் ஒருவர் கைது

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஆறு கோடி ரூபா பெறுமதி வாய்ந்த போதைப் பொருட்களுடன் நபர் ஒருவர், பொரளைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர்களை இலக்கு வைத்து போதை மாத்திரைகளை இவர், விற்பனை செய்ய திட்டமிட்டிருந்ததாக சந்தேகத்தின் பேரில் பொரளை பகுதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

44 வயதுடைய நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். கைதான சந்தேகநபரிடமிருந்து 5,99,000 போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைப்பற்றப்பட்ட போதை மாத்திரைகளின் பெறுமதி சுமார் 6 கோடி ரூபாவாகும்.

06

# நீதிமன்ற உத்தரவின் பேரில் வங்கிக் கணக்குகள் முடக்கம்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் அனுப பஸ்குவல் மீதும் விசாரணை

அனுப பஸ்குவலின் இரண்டு வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு கொழும்பு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.இலஞ்ச ஊழல் ஆணைக்குழு மேற்கொள்ளும் விசாரணைக்கு அமைவாக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊழல் ஒழிப்பு சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் விசாரணைகள் தொடர்பில், கொக்கல மற்றும் மத்துகம வங்கிகளில் உள்ள முன்னாள் இராஜாங்க அமைச்சரான அனுப பஸ்குலவின் இரண்டு வங்கிக் கணக்குகளை மூன்று மாதங்களுக்கு தடை செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.இலஞ்சஊழல் ஆணைக்குழுவின் அதிகாரிகள் கொழும்பு மேல் நீதிமன்றில் நேற்று (10) இதுபற்றி கோரிக்கை விடுத்தனர். இந்த கோரிக்கைக்கு இணங்கவே,கொழும்பு மேல் நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

# ஓடிக்கொண்டிருந்த பஸ்ஸில் திடீர் தீ: பயணிகள் தப்பினர்



(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

எம்பிலிப்பிட்டியவிலிருந்து இரத்தினபுரி நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ்வண்டி,நேற்று (10) திடீரெனத் தீப்பிடித்தது.பஸ்ஸின் பெரும் பகுதி தீயில் எரிந்தபோதும்,பயணிகள் எவருக்கும் எவ்வித காயங்களும் ஏற்படவில்லை.

தீ, ஏற்பட்டதை அறிந்த பஸ் ஊழியர்கள் பயணிகளை உடனடியாக இறக்கி வேறு பயண ஒழுங்குகளைச் செய்தனர். பஸ் ஊழியர்கள், பயணிகள், பொலிஸார் மற்றம் பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தினர்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணை இடம்பெற்று வருகின்றன.

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஒக்டோபர் 11 வெள்ளிக்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினகரன்

வரு. 92 இல. 243 | Friday 11, October, 2024 | 28பக்கங்கள் | 50/-

### விவசாயிகளுக்கான உர மானியம்: வங்கிகளில் வைப்பிலிட ஏற்பாடு



புதிய அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு வழங்க திட்டமிடப்பட்டுள்ள உர மானியம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமைக்குள்
அம்பாறை 06

# பொருளாதார நிலைப்படுத்தலில் பூரண திருப்தி

**எதிர்வு கூறல்களை விஞ்சிவிட்டதாக உலக வங்கி தெரிவிப்பு**

- ஏற்றுமதி ஊக்குவிப்பு, முதலீடுகளை கவர தொடர் மறுசீரமைப்புகள் அவசியம்
- Sri Lanka Development Update உலக வங்கியின் வெளியீட்டில் தெரிவிப்பு

இலங்கையில், தற்போது பொருளாதாரம் நிலைப்படுத்தப்பட்டுள்ளதால், 2024 இல் பொருளாதார வளர்ச்சி 4.4 சதவீதத்தை அடையுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், முன்னைய எதிர்வுகூறல்களை இது விஞ்சிவிட்டதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.




முக்கிய கட்டமைப்பு மற்றும் கொள்கை மறுசீரமைப்புகள் ஆகியவற்றின் உதவியின் பிரகாரம், கைத்தொழில் மற்றும் சுற்றுலாத் துறையில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக, நான்கு காலாண்டுப் பகுதியில் இந்த சாதகத் தோற்றப்பாடு தொடர்ந்துள்ளதாகவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

உலக வங்கியின் ஆண்டுக்கு இரு முறையான வெளியீடான இலங்கை அபிவிருத்தி இற்றைப்படுத்தலில் (Sri Lanka Development Update SLDU), எதிர்கால வாய்ப்புகளென தலைப்பிடப்பட்ட வெளியீட்டில், அறவிடல் எளிதில் பாதிக்கப்படக்கூடியதாக காணப்படுவதாகவும் பேரினப் பொருளியல் நிலைபெறும் தன்மையை பாதிக்கக்கூடியதாக உள்ளதாகவும் எச்சரிக்கப்பட்டுள்ளது.

அத்தோடு கடனை வெற்றிகரமாக மீள்கட்டமைத்தல், மத்தியகால வளர்ச்சி மற்றும் வறுமையை குறைத்தல் ஆகியவற்றை அதிகரிப்பதற்கு தொடர்ச்சியான கட்டமைப்பு மறுசீரமைப்புகள் அவசியமாகும்.

ஏற்றுமதிகளை ஊக்குவித்தல், வெளிநாட்டு முதலீடுகளை கவர்தல், பெண்கள் தொழிற்படைகளின் பங்களிப்புகளை மேம்படுத்துதல், உற்பத்தியை மேம்படுத்தல், மற்றும் வறுமை, உணவு பாதுகாப்பின்மை, நிதித் துறையில் காணப்படும் பாதிப்புறும் தன்மைகள் ஆகியவற்றை பிரதான மறுசீரமைப்புக்களாக கொண்டு, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலைபேறான வளர்ச்சி அடைவது அவசியமாகும்.

வியாபாரம் மூலம் உயர்வான மற்றும் நிலைபேறான வளர்ச்சியை அடைவதற்கான ஆற்றல்கள் நாட்டில் காணப்படுவதாகவும் அவ்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

வருடாந்தம் 10 பில்லியன் டொலர் மதிப்பிடப்பட்ட பயன்படுத்தப்படாத ஏற்றுமதி சார் ஆற்றல்கள், இலங்கையிடம் காணப்படுவதாகவும் இதன் மூலம் சுமார் 1,42,500 புதிய தொழில்களை 06

**கடல்சார் பாதுகாப்பை உறுதிப்படுத்த**

# இலங்கை விமானப் படைக்கு அமெரிக்க விமானம் அன்பளிப்பு

இந்து சமுத்திரத்தில் இலங்கையின் கடல்சார் பாதுகாப்பையும் இறையாண்மையையும் பலப்படுத்துவதற்காக, *Beechcraft King Air 360ER* என்ற உயர்ரக விமானமொன்றை அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கியுள்ளது.



அமெரிக்காவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இந்த *Beech craft King Air 360ER* விமானம், கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தில் வைத்து நேற்று உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

அமெரிக்க பசுபிக் கப்பற்படையின் கட்டளைத் தளபதியான அமெரிக்க கடற்படை அட்மிரல் ஸ்டீவ் கேலர் உத்தியோகபூர்வமாக இவ் விமானத்தை கையளித்தார். அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பாதுகாப்பமைச்சின் செயலாளர் எயார் வைஸ் மாஷல் சம்பத் துயகொந்த (ஓய்வு பெற்ற), இலங்கை விமானப்படையின் கட்டளைத் தளபதி எயார் மாஷல் உதேனி ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொண்ட இந்நிகழ்வில், இவ் விமானம் கையளிக்கப்பட்டது.

# TATA குழுமத் தலைவர் ரத்தன் டாடா மறைவு



இந்தியத் தொழில் அதிபரும், டாட்டா குழுமத்தின் முன்னாள் தலைவருமான ரத்தன் டாடா, நேற்று முன்தினமிரவு (09) உயிரிழந்தார்.

உடல்நலக்குறைவால் மும்பையில் உள்ள தனியார் வைத்தியசாலை தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார். தன்னம்பிக்கை, உழைப்பு, அறிவு, தொழிற்றிறன், அறச் சிந்தனைக்காக அறியப்பட்டவர் ரத்தன் டாடா. திருமணமாகாத 86 வயதான ரத்தன் டாடா, வெற்றிகர வணிகர்.

நாட்டின் முன்னணி தொழிலதிபரான ரத்தன் டாடா தன்னம்பிக்கையால் தொழில் சாம்ராஜ்ஜியத்தை நிறுவியவர். டாடா குழுமத்தின் தலைவராக 1991ஆம் 06

## தரம் 05 புலமைப்பரிசில் பரீட்சை; சுயாதீன குழு அறிக்கை சமர்ப்பிப்பு

தரம் ஐந்து, புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாள்களில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை, பிரதமரிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையின் மதிப்பீட்டைத் தற்காலிகமாக நிறுத்தி, முறையான விசாரணையை நடத்துமாறு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அண்மையில் உத்தரவிட்டார்.

புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடாத்துமாறு பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம் மேற்கொண்டதால், ஜனாதிபதி இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

எவ்வாறாயினும், புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்துவதில்லையென்ற, நிபுணர் குழுவின் தீர்மானத்தில் மாற்றம் ஏற்படாதென, பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர முன்னதாக தெரிவித்தார்.

எனினும், இக்குழுவின் பரிந்துரைகளை ஆராய்வதற்காக மற்றுமொரு சுயாதீன குழுவைப் பிரதமர் அண்மையில் நியமித்திருந்தார்.

இக்குழுவின் அறிக்கையே பிரதமரிடம் தற்சமயம் கையளிக்கப்பட்டுள்ளது. புலமைப்பரிசில் பரீட்சையின் மதிப்பீட்டை மேற்கொள்வதா, இல்லையா 06

# தேர்தல் கடமைகளுக்கு சமுகமளிக்காதவர்களுக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டம்

**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



தேர்தல் கடமைகளுக்கு சமுகமளிக்குமாறு நியமனக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ள சகல அதிகாரிகளும் கடமைகளுக்கு கண்டிப்பாக வருகை தருவது அவசியம் என, தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் தேர்தல் கடமைகளுக்காக நியமனக் கடிதத்தை பெற்றுக் கொண்டுள்ள அதிகாரிகள், கடமைக்கு வருகை தரத் தவறும் பட்சத்தில், ஒரு இலட்சம் ரூபா தண்டப் பணம் அறவிடப்படுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அவர்களுக்கு இத்தண்டனை வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தபால் மூல வாக்களிப்புக்கு விண்ணப்பித்திருக்காமை, மற்றும் விண்ணப்பத்தை நிராகரித்திருந்தமை என்பவை தேர்தல் கடமைகளிலிருந்து விடுவிப்பதற்கான காரணமல்ல என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தாம், தேர்தல் கடமைகளில் ஈடுபடும் சேவை நிலையத்திற்கு வருகை தந்த பின்னர் வருகைக்கான சான்றிதழை நிறுவனத்தின் தலைவருக்கு சமர்ப்பிப்பது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் கடமைகளுக்கு சமுகமளிக்காத அதிகாரிகள் நாட்டின் அரசியலமைப்புக்கு இணங்க, தேர்தல் ஆணைக்குழுவுடன் ஒத்துழைப்புடன் செயல்படுவதை நிராகரித்துள்ளதாக அல்லது அதற்கு தகுதி இல்லாத நபர் எனக் கணிக்கப்படுவார் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஆசாபாசங்களுக்கும் பதவிகளுக்கும் சோரம் போயுள்ள TNA

**சுக்கு நூறாகி சிதைவடைந்துள்ளது - கருணா**



ஆசாபாசங்கள் மற்றும் பதவிகளுக்காக சோரம் போனதால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தற்போது சிதைந்து சுக்கு நூறாகியுள்ளதாக முன்னாள் பிரதி அமைச்சரான விநாயகமூர்த்தி முரளீதரன் (கருணா) தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு மொறக்கொட்டான்சேனையில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ் விடயத்தை, குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஆசாபாசங்கள், பதவிகளுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சோரம் போய், கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில், தமிழர்களின் உரிமையை காப்பாற்றுவதற்காகவே தேசிய ஜனநாயக முன்னணி கட்சியான எமது கட்சி, வடக்கு கிழக்கில் போட்டியிடுகிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேஷங்கள் தற்போது வெளியே வரத்தொடங்கியுள்ளன.

மக்களை இவ்வளவு காலமும் ஏமாற்றி தேசியம் 06

## அரசுக்கு 1.8 பில். நஷ்டம்; கப்ராலுக்கு எதிராக குற்றப்பத்திரிகை



**ரூ. 10 மில்லியன் பிணையில் விடுதலை; வெளிநாடு செல்லவும் தடை**

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் உள்ளிட்ட நால்வருக்கு எதிராக, கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நேற்று (10) குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 2012 இல், கிரேக்கத்தில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது, இலங்கை அரசுக்குச் சொந்தமான பணத்தை கிரேக்க அரசின் பத்திரங்களில் முதலீடு செய்த ஊழலுக்கு எதிராகவே இந்தக்குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இதனால், அரசாங்கத்துக்கு 18 பில்லியன் ரூபாவுக்கு மேல் நஷ்டம் ஏற்படுத்தியதாகவும் நம்பப்படுகிறது.

இது குறித்து இலஞ்ச ஊழல் ஆணைக்குழு குற்றப்பத்திரிகைகளை கையளித்துள்ளதால், பிரதிவாதிகளில் ஒருவரை தலா 10 மில்லியன் ரூபா பிணையில் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் வெளிநாடு செல்வதற்கு தடை விதித்த நீதிமன்றம், அவர்களது கடவுச்சீட்டை நீதிமன்றில் 06

## மானிய விலையில் வழங்குவதாக கூறி அதிக விலைக்கு உர விற்பனை

**03 நிறுவனங்களுக்கு எதிராக வழக்கு; வங்கி அறிக்கைகளை சமர்ப்பிக்கவும் உத்தரவு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**



மானிய விலையில் விநியோகிப்பதற்காக அரசாங்கத்தின் அனுமதியுடன் இறக்குமதி செய்யப்பட்ட உரத்தை, விவசாயிகளுக்கு வழங்காது, வேறு நிறுவனங்களுக்கு விற்பனை செய்த உரக்கம்பனிகளுக்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. இவ்வாறு விற்றதால், கோடிக்கணக்கில் நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது.

இதனால், இவ்வாறு சந்தேகிக்கப்படும் மூன்று உரக் கம்பெனிகளின் வங்கிக் கணக்கு அறிக்கைகளை, நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்குமாறு கொழும்பு பிரதம மாஜிஸ்திரேட் நீதவான் திலின கமகே நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை, கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறும் குற்றத் தடுப்பு விசாரணை திணைக்களத்தின் நிதி 06

**யாழில் தமிழரசுக் கட்சி**

# சர்ச்சைகளுக்கு மத்தியில் ஸ்ரீதரன் தலைமையில் வேட்புமனு தாக்கல்



**யாழ். விசேட நிருபர்**

போட்டியிடுவதற்காக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் ஸ்ரீதரன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோர் போட்டியிடவுள்ளனர். இதற்கான வேட்புமனுக்கள் நேற்று ஸ்ரீதரன் தலைமையில், யாழ். மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது. 06

தினகரன்
THINAKARAN தினகரன்

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ்: 2429270, 2429329, விளம்பர முகாமையாளர்: 2429321

குரோதி வருடம் புரட்டாதி மாதம் 25ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் ஆகிர் பிறை 07

**குறள் தரும் சிந்தனை**

அஃகாமை செல்வத்திற்கு யாதெனின் வெஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்

தன்னுடைய செல்வச் செழிப்பு குறையாமலி ருக்க வேண்டுமென்றால், பிறருடைய பொருளையும் தானே அடைய வேண்டுமென்று ஆசைப்படாமலிருக்க வேண்டும்.

# மக்கள் எதிர்பார்க்கின்ற தன்னலமற்ற அரசியல்

நாட்டின் பத்தாவது பாராளுமன்றத்திற்கான பொதுத்தேர்தல் எதிர்வரும் நவம்பர் 14 ஆம் திகதி நடைபெற இருக்கிறது. இத்தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 70 இலட்சம் பேர் தகுதி பெற்றுள்ளனர்,

அதேநேரம் இத்தேர்தலில் நாட்டின் பிரதான அரசியல் கட்சிகள் உள்ளிட்ட 25 க்கும் மேற்பட்ட அரசியல் கட்சிகள் களமிறங்கக்கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன. அத்தோடு 250 க்கும் மேற்பட்ட சுயேச்சைக்குழுக்களும் கட்டுப்பணங்களை செலுத்தியுள்ளன. என்றாலும் இன்று நண்பகலின் பின்னர் இத்தேர்தலில் போட்டியிடும் கட்சிகளதும் சுயேச்சைக் குழுக்களதும் எண்ணிக்கையையும் விபரங்களையும் தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடும்.

என்றாலும் இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்பு மனு ஏற்கப்படும் இறுதி தினம் இன்றாகும். இன்று நண்பகல் 11.30 வரையும் வேட்பு மனுக்களை ஏற்கப்படுவதோடு அதனைத் தொடர்ந்த அரை மணி நேர காலம் இத்தேர்தலுக்காக தாக்கல் செய்யப்படும் வேட்பு மனுக்கள் தொடர்பில் ஆட்சேபனை தெரிவிக்க சந்தர்ப்பம் அளிக்கப்படும். அதனைத் தொடர்ந்து வேட்பு மனுக்கள் அங்கீகரிக்கப்படும்.

அதனால் வேட்பு மனுக்களை ஏற்பதற்கான இறுதி தினமாக இன்றைய தினம் விளங்குவதால் மாவட்ட மட்ட தெரிவத்தாட்சி அலுவலகங்கள் மட்டத்தில் அனைத்து ஏற்பாடுகளையும் தேர்தல்கள் ஆணைக்குழு மேற்கொண்டுள்ளது. அத்தோடு தெரிவத்தாட்சி அலுவலகப் பகுதிகளில் விஷேட பாதுகாப்பு ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்மைக் காலத்தில் இடம்பெற்ற பொதுத்தேர்தல்களை விடவும் இத்தேர்தலில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் அதிகூடிய கவனம் செலுத்தியுள்ளன. குறிப்பாக சில கட்சிகள் கூட்டணி அமைத்து இத்தேர்தலை எதிர்கொள்ளவென இறுதிக்கட்டம் வரையும் கடுமையான உழைப்பில் ஈடுபட்டன. இதன் நிமித்தம் இன்று காலையும் கூட ஒரிரு கட்சிகளுக்கு இடையில் பேச்சுவார்த்தைகளும் சந்திப்புகளும் இடம்பெற்றுள்ளன.

ஏனெனில் கட்சிகளுக்கு மத்தியில் அபேட்சகர்களுக்கான ஆசனப் பங்கீடு தொடர்பில் முக்கியமாக இழுபறி நிலவி வந்ததே அதற்கான காரணமாகும். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தி கட்சியுடன் கூட்டணி அமைத்துள்ள ஒரிரு கட்சிகள் மத்தியில் இத்தகைய நிலை காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. அதேநேரம் இன்னும் சில கட்சிகள் எவ்வித இழுபறிகளும் இன்றி கடந்த சில தினங்களாக தங்கள் அபேட்சகர் பட்டியல்களை இறுதி செய்து வேட்பு மனுக்களை சமர்ப்பித்துள்ளன.

இவை இவ்வாறிருக்க, ஊழல் மோசடி, அதிகாரத் துஷ்பிரயோகம், பொதுச்சொத்து வீண்விரயம், போதைப்பொருள் விற்பனை உள்ளிட்ட குற்றச் செயல்களில் சம்பந்தப்பட்டவர்கள் போன்றோருக்கு தேர்தலில் போட்டியிட அனுமதி அளிக்கக்கூடாது என்ற கோரிக்கை மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. அதேநேரம் கற்றறிந்தவர்களையும், நற்பண்புகள் மிக்கவர்களையும் வன்முறைகளுக்கு துணை போகாதவர்களையும் அபேட்சகர்களாக களமிறக்குமாறு சிவில் அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன.

இந்நிலையில் மக்களின் கோரிக்கைகளுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் அமைய அபேட்சகர்களை தெரிவு செய்வதில் சில கட்சிகள் கவனம் எடுத்துக் கொண்டன. இன்னும் சில கட்சிகள் பொருளாதார வசதி படைத்தவர்களை அபேட்சகர்களாகக் களமிறக்குவதில் கூடுதல் கவனம் செலுத்தியுள்ளன. அத்தகைய கட்சிகள் கற்றறிந்தவர்கள், நற்பண்பு மிக்கவர்ககள் குறித்து அதிக கவனம் செலுத்தியதாகத் தெரியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

என்றாலும் மக்கள் தெளிவாக நிலைப்பாட்டில் உள்ளனர். நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை பயப்பவர்களைத் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து கொள்வதில் அவர்கள் உறுதியாக இருக்கின்றனர். ஏனெனில் நாடு இரு வருடங்களுக்கு முன்னர் கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான போது நாடும் மக்களும் பல்வேறுவிதமான நெருக்கடிகளுக்கும் பாதிப்புக்களுக்கும் முகம் கொடுத்தார்ககள். அச்சமயம் அன்றைய ஆட்சியாளர்கள் மக்களை நிர்க்கதி நிலைக்கு தள்ளினர். எதிர்க்கட்சித் தலைவரும் அவருடன் இணைந்திருந்த கட்சிகளும் அந்த பொருளாதார வீழ்ச்சியினால் மக்கள் அனுபவித்த துன்பங்களையும் நெருக்கடிகளையும் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர். அவர்களது துன்பத்தில் அற்ப அரசியல் இலாபம் அடைந்து கொள்ள முயற்சி செய்தனர். ஆனால் அவர்களுக்கு மக்கள் தெளிவான பதிலை கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அளித்துள்ளனர். அதேபோன்று இத் தேர்தலிலும் மக்கள் சரியான பதிலை அளிக்கத் தயாராகவே இருக்கின்றனர். ஏனெனில் தங்களது நலன்கள் மீது குறித்த அக்கரை கொள்ளாதவர்களைத் தங்கள் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்து கொள்ள மக்கள் தயாரில்லை. அதனால் தான் கடந்த காலங்களில் இடம்பெற்ற பொதுத்தேர்தல்களை விடவும் இத்தேர்தல் குறித்து மக்கள் அதிகம் கவனம் செலுத்தும் நிலை ஏற்பட்டிருக்கிறது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமிருக்க முடியாது.

editor.tkn@lakehouse.lk

# சிறந்ததொரு அணியை தேர்தலில் நிறுத்துவோம்!

## ஜனதா விமுக்தி பெரமுன பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கூறுகிறார்



ஏனைய அரசியல் கட்சிகளுடன் ஒப்பிடும் போது தேசிய மக்கள் சக்தி சிறந்த அணியை எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கு முன்வைக்கும் என ஜனதா விமுக்தி பெரமுனவின் பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

எதிர்வரும் பொதுத்தேர்தலில் போட்டியிடும் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் வேட்புமனுவில் கையொப்பம் இடும் நிகழ்வு பத்தரமுல்லை பெலவத்தையில் அமைந்துள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற வேளையில் ரில்வின் சில்வா இக்கருத்தைத் தெரிவித்தார்.

"எதிர்காலத்தில் தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்தில் நான் வாக்கு கேட்கமாட்டேன். எந்தவொரு பதவியையும் ஏற்கமாட்டேன். இந்த ஆண்டு பாராளுமன்றத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் வேட்புமனுக்கள் இன்று கையெழுத்தாகின்றன. நாங்கள் சீரான மற்றும் வலுவான வேட்பாளர் பட்டியலைத் தயாரித்துள்ளோம்.

தமிழ், முஸ்லிம் புதிய வேட்பாளர்கள் உள்ளனர். பெண்களும் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அறிவும் திறமையும் கல்வியும் இருக்கின்றன. இதில் ஊழல் வாதிகள் யாரையும் நாங்கள் ஈடுபடுத்தவில்லை.

ஊழல்வாதிகள் மாத்திரமன்றி, அங்கும் இங்கும் தாவுபவர்களும் இல்லை. அரசியல் கலாசாரத்தை அழித்தவர்கள் இல்லை. நாட்டுக்காக தொண்டாற்றக் கூடிய குழுவே உருவாகியுள்ளது.

நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்று பொதுத்தேர்தலுக்குச் செல்கிறோம், இந்த நாட்டு மக்கள் எம்மை நம்பி ஜனாதிபதித் தேர்தலில் எமக்கு வாக்களித்தனர், நாங்கள் மக்களுக்கு அளித்த கொள்கைகளின் தொகுப்பு எம்மிடம் உள்ளது. நாம் அதையே செயல்படுத்துகிறோம். அதற்கு பாராளுமன்றத்தின் பலமான அதிகாரம் தேவை. இம்முறை பாராளுமன்றத்தில் பலமான அதிகாரத்தைப் பெற்றுத்தருமாறு வேண்டுகோள் விடுக்கிறோம். நாம் அது குறித்து நம்பிக்கை கொண்டுள்ளோம்" என்று ரில்வின் சில்வா குறிப்பிட்டார். "ஐக்கிய தேசியக் கட்சி, சமகி ஜன பலவேகய, மொட்டு கட்சி போன்ற அனைத்துக் கட்சிகளும் வீழ்ச்சியடைந்த தருணம் இது. எமது நாட்டைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். மக்கள் எம்மீது வைத்துள்ள நம்பிக்கையை முன்னெடுத்துச் செல்வதற்கு வலுவான பாராளுமன்ற அதிகாரம் தேவை. அதை எமக்கு அளியுங்கள்.

நாங்கள் முன்வைக்கும் அணிக்கு நாங்களே பொறுப்பு. எங்கள் குழுவில் நாட்டை அறிந்தவர்கள், முன்பு பாராளுமன்றத்தில் இருந்தவர்கள் உள்ளனர். பழைய திருடர்கள் குழுவைப் போலல்லாமல், நாங்கள் ஒரு புதிய குழுவை வழங்குகிறோம். இத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக ஜே.வி.பியின் பொதுச் செயலாளராக அக்கட்சியுடன் இணைந்து செயற்படுகின்றேன். நான் வாக்கு கேட்கவில்லை. இத்தேர்தலின் வெற்றிக்கு தோழர் அநுர பங்களிப்பு வழங்குகிறார்.

எங்களிடம் ஒரு தற்காலிக அரசாங்கம் உள்ளது. இரண்டு வாரங்களில் நம் நாட்டின் அரசியல் கலாசாரத்தை மாற்ற பல நடவடிக்கைகளை எடுத்துள்ளோம். வீண்செலவுகள் நிறுத்தப்பட்டுள்ளன. தோழர் அநுர ஜனாதிபதி பதவியை தலைக்கு மேல் சுமப்பவர் அல்ல. அடுத்த அரசாங்கத்தில் நான் பதவிகளை ஏற்கமாட்டேன்.

22 மாவட்டங்களுக்கு வலுவான அணிகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்று அனைத்து மாவட்டங்களின் வேட்புமனுக்களிலும் கையெழுத்திடுகிறோம். இம்முறை பெரும்பான்மை பலத்துடன் வலுவான அரசாங்கத்தை அமைப்போம் என நம்புகின்றோம். வளமான நாடு அழகான வாழ்க்கையை நம் மக்களுக்கு வழங்குகிறோம்" என்று ரில்வின் சில்வா மேலும் கூறினார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட தேசிய மக்கள் சக்தியின் பதுளை மாவட்ட தலைவர் சமந்த வித்யாரத்ன, இந்த தருணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு பெரும் அதிகாரத்தை வழங்க மக்கள் தயாராக உள்ளதாக தெரிவித்தார்.

சில அரசியல் கட்சிகள் தங்களுக்குரிய வேட்பாளரை கண்டுபிடிக்க முடியாமல் தவிக்கின்றன என்றார் அவர்.

கடந்த காலங்களில் பாராளுமன்றத்தில் இருந்த பலர் இந்த பொதுத்தேர்தலில் அடித்துச் செலலப்படுவார்கள் என்றும் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

(தமிழில்: வயலட்)

# இந்திய மக்களின் உள்ளத்தில் நிறைந்த எளிமைமிகு தொழிலதிபர் ரத்தன் டாடா





## சாதாரண குடிமக்கள் மீதும் காருண்யம் கொண்ட செல்வந்தரின் துயரம் தரும் மறைவு!

இந்தியாவின் புகழ்பெற்ற தொழிலதிபரும், டாடா குழுமத்தின் தலைவராகவிருந்தவருமான ரத்தன் டாடா நேற்றுக்காலை காலமானார். அவருக்கு வயது 86.

டாடா குழுமத்தின் தலைவராக ரத்தன் டாடா இருந்த காலத்தில், ஆங்கிலோ டச்சு இரும்பு உற்பத்தியாளர் கோரஸ், பிரிட்டனைச் சேர்ந்த கார் பிராண்டுகளான ஜாகுவார், லேண்ட் ரோவர், மற்றும் உலகின் இரண்டாவது பெரிய தேயிலை நிறுவனமான டெட்லி ஆகியவை உட்பட பல பெரிய நிறுவனங்களை டாடா குழுமம் தன்வசப்படுத்தியது.

இன்று டாடா குழுமத்தின் ஆண்டு வருமானம் 100 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் மேலாக உள்ளது.

ரத்தன் டாடாவின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக நேற்று மும்பையின் தேசிய கலை மையத்தில் வைக்கப்பட்டிருந்தது. அவரது மறைவையொட்டி மகாராஷ்டிர அரசு அனைத்து நிகழ்ச்சிகளையும் ரத்து செய்துள்ளது.

அவரது உடல் நேற்றுக் காலை 10 மணி முதல் மாலை 3:30 மணி வரை பொதுமக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. அவரது மறைவுக்கு ஜார்கண்ட் மாநில அரசும் ஒருநாள் துக்கம் அறிவித்தது. அவருக்கு அரசு மரியாதையுடன் இறுதிப் பிரியாவிடை அளிக்கப்படுகிறது.

இந்தியத் தொழிற்துறைக்கு அவரது சேவைகளை அங்கீகரிக்கும் விதமாக 2008ஆம் ஆண்டு அவருக்கு இந்திய அரசு 'பத்ம பூஷன்' விருது வழங்கியது.

ரத்தன் டாடா 1937ஆம் ஆண்டு மும்பையில் பிறந்தார். கடந்த 1955ஆம் ஆண்டு ரத்தன் டாடாவுக்கு 17 வயதானபோது, கட்டுமானமும் பொறியியலும் கற்க அவர் அமெரிக்காவின் கார்னெல் பல்கலைக்கழகத்திற்குச் சென்றார்.

உயர்கல்விக்குப் பிறகு, 1962ஆம் ஆண்டு டாடா நிறுவனத்தில் உதவியாளரகச் சேர்ந்தார். அதில் பல பதவிகளை வகித்த பின் 1974இல் டாடா நிறுவனத்தின் இயக்குநரானார்.

கடந்த 1975ஆம் ஆண்டு அமெரிக்காவின் ஹார்வார்ட் பல்கலைக்கழகத்தில் மேம்பட்ட வணிக மேலாண்மைப் பட்டம் பெற்றார். பின்னர் 1981ஆம் ஆண்டு டாடா நிறுவனங்களின் தலைவராக நியமிகப்பட்டார் ரத்தன் டாடா.

அதன்பின் 1991ஆம் ஆண்டு டாடா சன்ஸ் மற்றும் டாடா அறக்கட்டளைகளுக்குத் தலைவரனார். அந்த பதவியில், டாடா நிறுவனத்தை மறுசீரமைப்பு செய்யத் தொடங்கினார்.

கடந்த 2008ஆம் ஆண்டு 'டாடா நனோ' என்ற சிறிய காரை அறிமுகப்படுத்தியது அவரது பெரும் திட்டங்களில் ஒன்றாகப் பார்க்கப்பட்டது.

கடந்த 2012ஆம் ஆண்டு, 50 ஆண்டுகள் டாடா குழுமத்தின் தலைவராக இருந்த பின்னர், அவர் அப்பதவியிலிருந்து ஓய்வு பெற்றார். அதன்பின்னர் டாடா சன்ஸ்இன் கௌரவத் தலைவராக நியமிக்கப்பட்டார்.

இந்தியாவின் பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தவராக ரத்தன் டாடா போற்றப்படுகின்றார். சாதாரண மக்கள் தொடங்கி கோடீஸ்வரர்கள் வரை அனைவரின் உள்ளங்களிலும் நீக்கமற இடம்பிடித்திருக்கிறார் ரத்தன் டாடா. அவரின் தொழில் வாழ்க்கையைப் போலவே, தனிப்பட்ட வாழ்க்கையும் சற்று சுவாரஸ்யமாகத்தான் இருக்கிறது.

அவர் திருமணமே செய்து கொள்ளாமல் வாழ்ந்திருக்கிறார். அதே வேளையில், 2020 ஆம் ஆண்டு, ஒரு பேட்டியில் ரத்தன் டாடா, தனது குழந்தைப் பருவம், காதல் தோல்வி, பெற்றோரின் விவாகரத்து குறித்தும் வெளிப்படையாக பேசியிருக்கிறார். அது தற்போது அவரது மறைவுக்குப் பின்னர் அதிகம் பகிரப்பட்டு வருகிறது.

"என்னுடைய குழந்தைப் பருவம் மகிழ்ச்சியாகத்தான் அமைந்திருந்தது. ஆனால் எங்கள் பெற்றோர் விவாகரத்து பெற்றுக் கொண்டதன் காரணமாக நானும், என் சகோதரனும் பல்வேறு கேலிகளுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளானோம். என் அம்மா மறுமணம் செய்து கொண்ட பிறகு, பாடசாலையில் உள்ள சக மாணவர்கள், நண்பர்கள் அனைவரும் எங்களைப் பற்றி மோசமாக பேசத் தொடங்கினார்கள். அது எங்களுக்கு மிகப்பெரிய வருத்தத்தை அளித்தது. ஆனால் எங்களுடைய பாட்டி எங்களை நன்றாக வளர்த்தார். எந்தச் சூழல் வந்தாலும், கண்ணியத்துடன் எப்படி வாழ வேண்டும் என கற்றுக் கொடுத்தார்" என டாடா தெரிவித்துள்ளார்.

"கல்லூரி முடித்ததற்கு பிறகு, அமெரிக்காவுக்கு (லொஸ் ஏஞ்சல்ஸ்) படிக்கச் சென்றேன். அங்கு ஒரு கட்டக்கலை நிறுவனத்தில் வேலைக்குச் சேர்ந்தேன், இரண்டு ஆண்டுகள் வேலை செய்தேன். எனக்குச் சொந்தமாக ஒரு கார் இருந்தது. எனது வேலையை நான் விரும்பிச் செய்தேன். அத்தோடு ஒரு பெண்ணைக் காதலித்தேன். ஆனால், சுமார் 7 ஆண்டுகளாக பாட்டியின் உடல்நிலை மோசமாக இருந்ததால், அவருக்காக இந்தியாவுக்குத் திரும்ப வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்தியாவுக்குச் சென்றேன். பின்னர் நான் விரும்பிய பெண்ணை பார்க்க மீண்டும் அமெரிக்காவுக்கு வந்தேன், எனது காதலியும் என்னுடன் இந்தியா வருவார் என்று எண்ணினேன். ஆனால் அந்த நேரத்தில் இந்தியா_சீனா போர் வெடித்தது. இதனால் எனது காதலியின் பெற்றோர் அவரை இந்தியாவுக்கு அனுப்ப மறுத்துவிட்டனர். அப்படியே எங்களுடைய உறவும் முடிந்தது" என்று டாடா கூறியுள்ளார். கிட்டத்தட்ட அப்பெண்ணை டாடா மனதளவில் திருமணம் செய்துவிட்டதாகவே அப்பேட்டியில் விபரித்திருந்தார்.

இந்தச் சம்பவம்தான் ரத்தன் டாடாவின் வாழ்க்கையை முற்றிலும் மாற்றியது. ரத்தன் டாடாவின் குடும்பத்தினர் அவரை பல முறை திருமணம் செய்துகொள்ளுமாறு வற்புறுத்தினர் ஆனால் அவர் யாரையும் திருமணம் செய்துகொள்ளவில்லை. பின்னர் தொழிலுக்காகவே தனது வாழ்க்கையை அர்ப்பணித்தார். காதல் தோல்வியில் இருந்து மீண்டு, தனது வாழ்க்கையை எப்படி மாற்றிக்கொண்டார் என்பது அனைவருக்கும் ஒரு பாடமாகவே இருக்கிறது.

செல்லப்பிராணிகள் மீது அலாதியான பிரியம் வைத்திருந்த ரத்தன் டாடா, நாய்கள் மீது அளவு கடந்த அன்பைக் கொண்டிருந்தார்.

இந்தியா தனது தலைசிறந்த மகன்களில் ஒருவரை இழந்து தவிக்கும் நிலையில், ரத்தன் டாடாவின் வாழ்க்கை தலைமைத்துவம், பணிவு மற்றும் ஒரு பெரிய நோக்கத்திற்காக செய்யப்பட்ட தியாகங்கள் உள்ளிட்டவை நீடித்த சான்றாக நிற்கிறது. அவரது மேம்பட்ட தியாக உணர்வு எதிர்வரும் தலைமுறைகளுக்கு ஊக்கமளிக்கும்.

பங்குச் சந்தையில் மிக அதிக சந்தை முதலீடு கொண்டதாக டாடா குழுமம் திகழ்கிறது.

நடுத்தரக் குடும்பத்தினர் ஒரு மோட்டார்சைக்கிளில் 4 பேராக கஷ்டப்பட்டுப் போவதைப் பார்க்கும்போதெல்லாம், குறைந்த விலையில் சிறிய கார் தயாரிக்க வேண்டும் என்ற உந்துதல் இவரிடம் ஏற்பட்டது. இந்த கனவு, 'டாடா இண்டிகா' வடிவில் 1998 இல் நிஜமானது. உலகிலேயே மலிவாக ரூபா 1 இலட்சத்துக்கு கார் வெளியிடுவதாக அறிவித்தார். 'டாடா நனோ' கார் 2008 இல் உற்பத்தியாகி வந்தபோது அதன் செலவு அதிகரித்துவிட்டது. ஆனாலும், விலையை உயர்த்த மறுத்து விட்டார்.

இந்தியாவின் மோட்டார் வாகனத் தொழில் துறையில் மாபெரும் மாற்றம் ஏற்படுத்திய தொழிலதிபர் இவர். பிரதமரின் வணிகம் மற்றும் தொழில்கள் தொடர்பான குழுவில் உறுப்பினராக இருந்தவர். பல்வேறு வெளிநாட்டு அறக்கட்டளைகளுக்கு அறங்காவலர் குழு உறுப்பினராக இருந்தவர். பில்கேட்ஸ் நிறுவனத்தின் இந்திய எய்ட்ஸ் திட்டக் குழுவிலும் இருந்தவர்.

கடந்த 2021 இல் ரத்தன் டாடாவுக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டுமென சமூக வலைதளத்தில் நெட்டிசன்கள் தெரிவித்தபோது, அதை தவிர்க்குமாறு தனது பதிவின் மூலம் கேட்டுக் கொண்டார். 'விருதுகளை காட்டிலும் இந்தியனாக இருப்பதே எனது அதிர்ஷ்டம்' என அப்போது அவர் சொல்லி இருந்தார்.

வீதிகளில் பயணிக்கும் ஒவ்வொருவரும் டாடா நிறுவன வாகனங்களை கடந்தே பயணிக்க வேண்டி உள்ளது. அது டாடாவை நினைவு கூர்ந்து கொண்டேயிருக்கும்.



# களுத்துறை மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்தம் தொடர்பில் கலந்துரையாடல்

பாணந்துறை மத்திய குறூப் நிருபர்



களுத்துறை மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்த நிலைமைகள் தொடர்பில் முன்னோடி எச்சரிக்கை தெரிவிக்கும் செயற்திட்டங்கள் சம்பந்தமாக உலகளாவிய RIMES அமைப்பின் பிரதிநிதிகளுக்கும் மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவின் அதிகாரிகளுக்கிடையிலான கலந்துரையாடல் மாவட்ட செயலாளர் பணிமனையில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் மேற்படி அமைப்பின் பிரதிநிதிகளாக சிரேஷ்ட முன்னோடி அனர்த்த எச்சரிக்கை தொடர்பிலான நிபுணரும் திட்ட முகாமையாளருமான மர்க் மார்க்கஸ், திட்ட அதிகாரி மிசேல் சந்தோஷ், நீரியல்வள நிபுணரும் மேற்படி அமைப்பின் இலங்கை பிரதிநிதியுமான எஸ்.சுமணசேகரவும் களுத்துறை மாவட்ட செயலகம் சார்பில் மாவட்ட செயலாளர், ஜனக கே குணவர்தன, மேலதிக செயலாளர், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

களுத்துறை மாவட்டத்தில் ஏற்படும் அனர்த்த நிலவரங்கள் சம்பந்தமாக சர்வதேச அமைப்பின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்குமுகமாக மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளரினால் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. இதனையடுத்து அமைப்பின் பிரதிநிதிகள் களுத்துறை மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள அடுத்த வேலைத் திட்டங்கள் சம்பந்தமாக செயல்முறை விளக்கமொன்றை சமர்ப்பித்தனர்.

மாவட்ட செயலாளரும் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய பிரதிநிதிகளும் மாவட்டத்தின் குறிப்பிட்ட துறைசார்ந்த தேவைப்பாடுகள் சம்பந்தமாக சர்வதேச அமைப்பின் பிரதிநிதிகளுக்கு விளக்கமளித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட மக்கள்

# ஜனாதிபதி அநுர குமாரவின் கரங்களைப் பலப்படுத்த இன்று தயாராகிவிட்டனர்

## வேட்பாளர் ஏ.பீ.எம். பிர்தௌஸ்



மட்டக்களப்பு மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி அமோக வெற்றியீட்டும் என அதன் வேட்பாளர்களில் ஒருவரான அஷ்ஷெய்க் எம்.பி.எம். பிர்தௌஸ் நளீமி தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று வேட்புமனு தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அமோக வெற்றியீட்டியதன் மூலம் நாட்டில் மக்களுக்கு விசுவாசமானதொரு ஆட்சி உருவாக்கப்பட்டுள்ளது. அந்த ஆட்சியை பாராளுமன்றம் ஊடாக பலப்படுத்த வேண்டிய பொறுப்பு அனைவருக்கும் உள்ளது. அதற்கான சந்தர்ப்பமாகவே இந்த பொதுத் தேர்தல் அமைந்துள்ளது.

இன,மத வேறுபாடுகளைக் கடந்து இலங்கையர் என்ற அடையாளத்தின் கீழ் மக்களை ஒன்றுதிரட்டுதல், அமையப் போகின்ற பாராளுமன்றத்தின் ஊடாக நாட்டில் சமூக நீதியையும் சட்டத்தின் ஆட்சியையும் நிலைநாட்டுதல், சட்டத்திக்கு முன் அனைவரும் சமம், சட்டத்திலிருந்து எவருக்கும் விதிவிலக்களிக்க முடியாது, சட்டம் யார் மீதும் பாரபட்சமாகப் பிரயோகிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்துதல்,

அரசியல் அதிகார துஷ்பிரயோகத்தையும் ஊழல் மோசடிகளையும் இல்லாதொழித்தல் மற்றும் புதிய அரசியல் கலாசாரம் ஒன்றைத் தோற்றுவித்தல் ஆகிய பிரதான நோக்கங்களை முன்வைத்தே நாம் இந்தத் தேர்தலில் போட்டியிடுகிறோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் பொருத்தமான எட்டு வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். எங்கள் மத்தியில் எந்தவித வேறுபாடுகளோ விருப்பு வாக்குகளுக்கான போட்டிகளோ இல்லை. பிரதேசவாதம் இல்லை. மக்கள் எமது கட்சியின் சின்னமான திசைகாட்டிக்கு வாக்களிப்பதுடன் அவர்கள் பொருத்தமானவர்கள் எனக் கருதுகின்ற வேட்பாளர்களுக்கு தமது விருப்பு வாக்குகளை வழங்க முடியும். நாம் இந்த முறை மட்டக்களப்பு மாவட்டத்தில் மிகவும் முன்மாதிரியானதொரு தேர்தல் பிரசாரத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் தெரிவித்தார்.



எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலுக்கான மௌபிம ஜனதா கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி, தற்போதைய பாராளுமன்ற வேட்பாளரான பிரியந்த குமார நேற்று (10) வரலாற்று சிறப்புமிக்க அநுராதபுரம் ஜய ஸ்ரீ மஹா போதி ஆலயத்தில் வேட்பு மனுவில் கையொப்பமிட்டார்.



எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான தேசிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட வேட்பாளராக டாக்டர் ரிஸ்வி சாலிஹ் தேசிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் தனது வேட்பு மனுவில் கையெழுத்திட்டார். இவர் கட்சியின் தேசிய செயற்குழு மற்றும் தேசிய மக்கள் சக்தியின் வர்த்தக மன்றத்தின் உறுப்பினராகவும் செயற்பட்டு வருகிறார்.

**(படம் ருஸைக் பாரூக்)**

# SLPP சார்பில் வேட்பு மனுவில் கைச்சாத்து



நடைபெறவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் (SLPP) ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியில் போட்டியிடுவதற்காக மொஹமட் அஸ்மத் வேட்பு மனுவில் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் முன்னிலையில் (09) கையொப்பமிட்டார். இவர் களுத்துறை மாவட்ட முஸ்லிம் வேட்பாளராக இம்முறை பொதுஜன பெரமுன கட்சியில் களமிறங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதுளையில் வடிவேல் சுரேஸ் வேட்புமனு தாக்கல்



ஹற்றன் சுழற்சி நிருபர்

ஐக்கிய ஜனநாயக குரல் சார்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் நேற்று காலை (10) பதுளை மாவட்ட செயலகத்தில் தனது வேட்பு மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

நேற்றைய தினம் கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் ரஞ்சன் ராமநாயக்க தலைமையில் புதிய கட்சியாக ஐக்கிய ஜனநாயக குரல் என்ற கட்சி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

இக் கட்சியின் ஒலி வாங்கி சின்னம் தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிலையில் நேற்று முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஸ் வேட்பு மனுவை தாக்கல் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டார்.

# மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு நடைபவனி



கிண்ணியா தினகரன் நிருபர்

கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.எம்.ரிஸ்வி தலைமையின் கீழ், மார்பக புற்றுநோய் விழிப்புணர்வு தொடர்பான நடைபவனி வியாழக்கிழமை (10) கிண்ணியா சுகாதார வைத்திய பணிமனையிலிருந்த கிண்ணியா பிரதான வீதி வழியாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கிண்ணியா பிரதேச செயலாளர். எம்.எச்.எம்.கனி, திருகோணமலை தாய் சேய் நல மருத்துவ அதிகாரி டாக்டர்.ஏ.எச்.சமீம், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர்: ஏ.எம்.அஜித் ,கிண்ணியா நகர சபை செயலாளர் எம்.கே.அனிஸ், கிண்ணியா பதில் வலயக்கல்விப் பணிப்பாளர், கிண்ணியா பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் சுகாதார வைத்திய அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய அலுவலக உத்தியோகத்தர்களும் இந்நடை பவணியில் கலந்துகொண்டு நிகழ்வை அலங்கரித்தனர்.





பரிபூரண வாழ்க்கைக்கு என்றும் உங்களுடன்

இலங்கை காப்புறுதி வரலாற்றில் மக்களுக்கு பக்கபலமாகவும், மக்களோடு மக்களாகவும் பயணிக்கும் இலங்கையின் முதல் தனியார் காப்புறுதி நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ், நாட்டின் சமூக-பொருளாதாரத்துக்கான அளப்பரிய சேவையை இடைவிடாமல் தொடர்ந்து வழங்கி வருகின்றது.

வாடிக்கையாளராகிய உங்களின் வாழ்வை வளப்படுத்தும் நோக்குடன் சேவையாற்றிடும் காப்புறுதி நிறுவனமான யூனியன் அஷ்யூரன்ஸ் நிதியாற்றல், உள ஆரோக்கியம் மற்றும் உடல் ஆரோக்கியத்தை பலப்படுத்தும் நோக்குடன் கூடிய ஆயுட் காப்புறுதிகளை வழங்கி, உங்கள் நல்வாழ்வுக்கான நம்பிக்கையாக திகழ்கின்றது. அத்துடன் வாடிக்கையாளர்களின் தேவைகளை மையமாகக் கொண்ட காப்புறுதி சேவையை அதிநவீன தொழில்நுட்பத்தோடு வழங்குகின்றது.

**முன்னேற்றம் மற்றும் நல்வாழ்வுடன் கூடிய எதிர்காலத்தை வடிவமைக்க எம்முடன் இணைந்திடுங்கள்.**

1330 ஊடாக எம்முடன் இணைந்திடுங்கள் unionassurance.com

யூனியன் அஷ்யூரன்ஸ்
ஜோன் கீல்ஸ் நிறுவனமாகும்

வெளியிடுவோர் யூனியன் அஷ்யூரன்ஸ் பிஎல்சி (PQ 12) 2024/10

கந்தளாய் சீனித்தொழிற்சாலைக்குரிய

# 1,000 ஏக்கர் காணியை குறுகிய கால பயிர்செய்கைக்கு வழங்க ஜனாதிபதி பணிப்பு

கந்தளாய் சீனித்தொழிற்சாலைக்குச் சொந்தமான 11,000 ஏக்கர் காணியை குறுகிய கால பயிர் செய்கைக்காக விவசாயிகளுக்கு வழங்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க நேற்று (10) அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அதற்கமைய ஐந்து ஏக்கரை விட குறைவான காணி இவ்வாறு வழங்கப்படவுள்ளதுடன், அதற்கென ஒழுங்கான பொறிமுறைமையொன்றை தயாரிக்குமாறும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் அதிகாரிகளை ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று(10) சந்தித்த போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

விடயதானத்துக்கு பொறுப்பான அமைச்சர் என்ற வகையில், சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் செயற்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஜனாதிபதி கேட்டறிந்ததோடு, எதிர்கால திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடினார்.

விவசாயம், காணி, கால்நடை, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம். விக்ரமசிங்க, காணி ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் ஹேமசிறி லியனகே மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுகளின் சிரேஷ்ட அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்துகொண்டனர்.

# ஜனாதிபதியின் புகைப்படங்கள் வெளியிட எழுத்துமூல அனுமதி பெற வேண்டும்

## அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் பணிப்பு

ஜனாதிபதியின் புகைப்படங்கள் மற்றும் வாழ்த்துச் செய்திகளை வெளியிடுவதற்கு முன் எழுத்து மூலம் ஜனாதிபதி அலுவலகத்தின் அனுமதியைப் பெற வேண்டும் என அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க தெரிவித்துள்ளார்.

அரச நிதியை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் பணிகளில் அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தொலைநோக்கு பார்வைக்கு ஏற்ப செயல்படுவது அவசியம் எனவும் அவர் அரச நிறுவனங்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார். பல்வேறு நிகழ்வுகளுக்காக பெயர்ப் பலகைகள் மற்றும் விசேட நினைவு சஞ்சிகைகளுக்கு ஜனாதிபதியின் புகைப்படங்கள் மற்றும் வாழ்த்து செய்திகளை வெளியிடுவதற்கு முன்னர் ஜனாதிபதி செயலகத்தின் எழுத்து மூல அனுமதியை அனைத்து அரச நிறுவனங்களும் பெற வேண்டும் என ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க அறிவுறுத்தியுள்ளார்.

அரச நிதியைப் பெற்று மேற்கொள்ளப்படும் பணிகளை ஏற்பாடு செய்யும்போது அரசாங்கத்தின் கொள்கை மற்றும் தொலைநோக்குப் பார்வைக்கு அமைவாக செயற்படுவது அவசியமானது எனவும் ஜனாதிபதியின் செயலாளர் அரச நிறுவனங்களுக்கு மேலும் அறிவித்துள்ளார்.

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், அனைத்து மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபன சபைகள் உள்ளிட்ட சட்டபூர்வ நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் அரசிற்கு சொந்தமான நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் எழுத்து மூலம் இந்த அறிவித்தலை வழங்கியுள்ளார்.

## அறநெறி பாடசாலைகளின் மாணவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா





இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் பெரும் தோட்ட கல்வி மற்றும் கலாசார மேம்பாட்டு மன்றத்தின் ஏற்பாட்டில் இரத்தினபுரி கல்லேல்ல கல்கதுர சில்வர் லேண்ட் பிரதேசத்தில் இயங்கிவரும் சாரதா தேவி, சாரதா அம்பாள், அகத்தியர் அறநெறி பாடசாலைகளின் மாணவர்களுக்கான

சின்னம் சூட்டும் விழாவும் பரிசளிப்பு விழாவும் அந் நிறுவனத்தின் ஸ்தாபகரும் இணைப்பாளரும் அதிபருமான திருமதி ஜெயகாந்தன் கலைவாணி அம்மையாரின் தலைமையில் நடைபெற்றது. இரத்தினபுரி சிவனாலய கலாசார பிரதான மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை(6) நடைபெற்ற இவ்விழாவில் விசேட அதிதிகளாக டபிள்யு ஏ மஹிந்த (இரத்தினபுரி மாவட்ட கலாசார உத்தியோகத்தர்), கேபி சமிந்த பியசேகர ஆகியோர் கலந்து கொண்டனர்.

## விவசாயிகளுக்கான...

மற்றும் மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வைப்பீடு செய்யப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம். விக்கிரமசிங்க இது தொடர்பான பணம் நேற்று முன்தினம் திறைசேரியிலிருந்து பெறப்பட்டதாக தெரிவித்தார்.

இதேவேளை, மீனவர்களுக்கு வழங்கப்படும் எரிபொருள் மானியம், ஒரு நாள் வள்ளங்களுக்காக நாளொன்றுக்கு 15 லீற்றரும் கடலில் பல நாள் தொழிலில் ஈடுபடும் வள்ளங்களுக்கு அதிகபட்ச எரிபொருள் கொள்ளளவு அளவில் தனித்தனியாகவும் வழங்கப்படும் என்றும் செயலாளர் குறிப்பிட்டார்.

## அரசுக்கு 1.8 பில். நஷ்டம்;...

ஒப்படைக்குமாறும், வெளிநாடு செல்வதாக இருந்தால் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளுமாறும் உத்தரவிட்டது.

## ஆசாபாசங்களுக்கும்...

சேயம் எனப் பேசியவாறே, அரசாங்கங்களிடம் இலஞ்சங்களை வாங்கி மக்களை ஏமாற்றியுள்ளனர். கடந்த ஜனாதிபதி தேர்தலின் பிற்பாடு வெளிப்படையாக இது,மக்களுக்கு தெரியவந்துள்ளது.

எனவே, மக்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும். ஒரு காத்திரமான தலைமைத்துவத்தை தமிழர்களுக்கு வழங்க வேண்டும். இதுவே, எங்களது நோக்கம். கடந்த காலத்தில் இந்த சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்கியிருந்தேன். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒன்றாக இருக்கவேண்டும் என்பதற்காகவே, அக்காலத்தில் இடையூறு விளைவித்ததில்லை .தேசிய தலைவருடன் நானும் சேர்ந்து அந்த கட்சியை உருவாக்கியவன். மதுபானசாலை அனுமதிபத்திரம் சொகுசுவாகனங்கள் மற்றும் வீடுகளை வாங்கிய தமிழ் தேசிய கூட்டமைப்பினர், சோரம் போய்விட்டனர்.இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## சர்ச்சைகளுக்கு மத்தியில்...

இப்பட்டியலில், எஸ்.சி.சி. இளங்கோவன், சட்டத்தரணி கேசவன் சயந்தன்,சந்திரலிங்கம் சுகிர்தன், சுரேக்கா சசீந்திரன், இமானுவல் ஆர்னோல்ட், கிருஸ்ணவேணி சிறிதரன், தியாகராஜா பிரகாஷ் ஆகியோரின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், யாழ், மாவட்ட இப்பட்டியல் குறித்து,

இலங்கை தமிழரசுக் கட்சியின் கொழும்பு கிளைத் தலைவரும், மத்திய குழு மற்றும் உயர்பீட அரசியல் உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி தவராசா சில தினங்களுக்கு முன்னர்,அதிருப்தி வெளியிட்டிருந்தார். சிறீதரன் தவிர ஏனைய எட்டுப் பேரும் சுமந்திரன் அணியைச் சார்ந்தவர்கள் என்றும் அதில் சுயாதீனமான அல்லது மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்போ இல்லை என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

பெண் ஆளுமைகள் பலர் உள்ள நிலையில்,யாரென்ற விபரங்களே இல்லாத பெண்கள் சிலர் வேட்புமனுப் பட்டியலில் உள்வாங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.சுமந்திரன் அணியின் வேட்புமனுவாகவே இதை பார்க்க முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தரம் 05 புலமைப்பரிசில்...

என்பது தொடர்பில் இதுவரை தமக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்படவில்லை என பரீட்சை ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர எமது செய்திப் பிரிவுக்குத் தெரிவித்தார்.

அதேநேரம், மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பெற்றோர்கள் செய்த முறைப்பாடுகளின் பிரகாரம், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகள் முடியும் வரை, புலமைப்பரிசில் பரீட்சை தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கக் கூடாது எனக் கல்வி அமைச்சு மற்றும் பரீட்சை திணைக்களத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

## மானிய விலையில் வழங்குவதாக...

விசாரணைப் பிரிவுக்கு நீதவான் உத்தரவிட்டுள்ளார். தேசிய உர செயலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள முக்கிய உர நிறுவனங்கள் ஐந்தும் மற்றும் அதற்கு மேலதிகமாக மேலும் எட்டு உர நிறுவனங்களின் வங்கி அறிக்கைகள் தொடர்பிலும் விசாரணைகளை மேற்கொள்வதற்கு குற்றத்தடுப்பு விசாரணைத் திணைக்களத்தின் நிதி விசாரணைப் பிரிவு நீதிமன்றத்திடம் அனுமதி கோரியிருந்த சந்தர்ப்பத்திலேயே நீதவான் இவ்வாறு உத்தரவிட்டுள்ளார்.

இதன்போது, பிரதான உர நிறுவனங்களின் பிரதிநிதிகள் மானிய முறையின் கீழ் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய உரத்தை, கைத்தொழில் நடவடிக்கைகளுக்கு விநியோகித்துள்ளதாக குற்றத்தடுப்பு விசாரணை திணைக்களம் நீதிமன்றத்திற்கு அறிவித்திருந்தது.

2500 ரூபாவுக்கு இறக்குமதி செய்யப்படும் உரத்தை 1100 ரூபாவுக்கு விவசாயிகளுக்கு வழங்குவதாக தெரிவித்து அந்த நிறுவனங்கள் உரத்தை இறக்குமதி செய்துள்ளன. மீதி நிதியை, அரசாங்கம் அந்நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளதாகவும் அந்த திணைக்களம் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்டுள்ள உரத்தை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்க வேண்டிய போதும், மேற்படி நிறுவனங்கள் இறக்குமதி செய்துள்ள உரத்தை விவசாயிகளுக்கு வழங்காமல் விவசாயம் அல்லாத ஏனைய தொழிற்சாலைகளுக்கு 25,000 ரூபாவு க்கும் அதிகமான விலைக்கு விற்று கோடிக்கணக்கான நிதியை சம்பாதித்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் குற்றத்டுப்பு விசாரணைத் திணைக்களம் நீதிமன்றத்திடம் தெரிவித்துள்ளது.

இதனைக் கவனத்திற் கொண்ட நீதவான் மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய நிறுவனங்களின் வங்கி அறிக்கைகளை, நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்குமாறும் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்யுமாறும் உத்தரவிட்டுள்ளது.

## பொருளாதார...

உருவாக்கலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவசியமான மறுசீரமைப்புகள் நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் உற்பத்தித் துறை, சேவைகள், விவசாயம் ஆகியவற்றில் பல்வகையில் ஏற்றுமதிகளை விரிவாக்கம் செய்வதற்கான காத்திரமான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

"இலங்கையின் அண்மைய பொருளாதார நிலைப்படுத்தல்கள், நான்கு காலாண்டு கால பகுதி வளர்ச்சி மற்றும் 2023 மிகை நடப்புக் கணக்கு ஆகியன முக்கிய திருப்புமுனைகளாகும்" என மாலைதீவு, நேபாளம், இலங்கைக்கான உலக வங்கியின் பிராந்திய நாட்டுப் பணிப்பாளர் டேவிட் சிஸ்லன் குறிப்பிட்டுள்ளார்.

"இத்தருணத்தில், இலங்கை அதன் உண்மையான ஏற்றுமதி ஆற்றல்களை உணர்வதற்கான வாய்ப்புள்ளது. இது வருடாந்தம் 10 பில்லியன் டொலர்கள் என நாம் மதிப்பிட்டுள்ளோம். பூகோள பெறுமதி சந்தையில் தனது பங்குபற்றுதலை மேலும் காத்திரமாக மேற்கொள்வதற்கான வாய்ப்பு இலங்கைக்கு காணப்படுகின்றது, மற்றும் வேலை வாய்ப்புகளை உருவாக்கி வளர்ச்சியில் நிலைபெறுவதற்கு புவியியல் தோற்றப்பாட்டின் சாதகப் பயன்பாடுகளைப் பயன்படுத்தி வளர்ந்து வரும் பூகோள தோற்றப்பாட்டில் நன்மையை பெற்றுக் கொள்ள முடியும். முக்கியமான பொருளாதார

மற்றும் ஆளுகை சார்ந்த மறுசீரமைப்புகளை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் இந்த தருணத்திலிருந்து முழுமையான நன்மைகளை இலங்கை பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன."

2025 இல் 3.5 சதவீத மிதமான வளர்ச்சி ஏற்படலாமென இவ்வறிக்கையில் எதிர்கூறப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியின் வடுக்கள் காரணமாக மத்திய காலப் பகுதியினுள் மிதமான வழியில் வளர்ச்சி ஏற்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

வறுமை படிப்படியாக குறைவடையுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கூட 2026 ஆம் ஆண்டு வரையில் 20 சதவீதத்துக்கும் அதிகமாகக் காணப்படலாம். 2024 இல் மத்திய வங்கியின் இலக்கான 5 சதவீதத்தை விட குறைவாக பணவீக்கம் காணப்பட்டு, பின் கேள்விகள் அதிகரிக்கின்ற பொழுது படிப்படியாக அதிகரிக்கும். சுற்றுலாத் துறை மற்றும் வெளிநாட்டிலிருந்து பணம் அனுப்புதல் ஆகியவற்றின் காரணமாக 2024 ஆம் ஆண்டில் நடப்பு கணக்கானது மிகையாக காணப்படலாமென எதிர்கூறப்பட்டுள்ளது.

2024 ஒக்டோபர் வெளியீடு, பெண்கள், வேலைகள் மற்றும் வளர்ச்சி என்ற தொனிப்பொருளில் இவ்வருடம் தெற்காசியாவில் 6.4 சதவீத வளர்ச்சியை எதிர்வு கூறியுள்ளதுடன், உலகில் துரிதமாக வளர்ந்து வரும் EMDE (Emerging Markets and Developing Economy) பிராந்தியமாக தெற்காசியா மாற்றம் பெற்று வருகின்றது.

# இன்றைய பலன்கள்

(11.10.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பல செயல்களில் எதிர்பார்க்கும் முன்னேற்றம் கிடைக்காமல் போகலாம். சில செயல்களில் அலைச்சல் இருந்தாலும் ஆதாயம் உண்டு.

**ரிஷபம் :**
எடுத்த காரியங்களில் முயற்சியுடன் முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள். என்றாலும் சில செயல்களில் சிறு சிறு தடைகளை சந்திப்பீர்கள்.

**மிதுனம்:**
சில காரியங்களில் எதிர்பார்த்த பலன் கிடைக்காவிட்டாலும் பலன் தந்த பல காரியங்களை எண்ணி மகிழ்ச்சியடைவீர்கள்.

**கடகம்:**
நீங்கள் மேற்கொள்ளும் செயல்களில் முன்னேற்றமான பலன்களை பெறுவீர்கள். பணவரவுகளில் திருப்தியான சூழ்நிலை காணப்படும்.

**சிம்மம்:**
உங்கள் செயல்கள் பலவற்றில் நன்மையான பலன்களை அடைவீர்கள். கடினமான செயல்களையும் முயற்சியோடு செய்து முன்னேற்றம் அடைவீர்கள்.

**கன்னி:**
நீங்கள் எடுத்த முயற்சிகளில் நல்ல பல முன்னேற்றங்களை காண்பீர்கள். வரவேண்டிய தன வரவு தாமதம் இன்றி வந்து சேரும்.

**துலாம்:**
உங்கள் முயற்சிகள் பலவற்றில் முன்னேற்றமான சூழ்நிலை காணப்பட்டாலும் சிலவற்றிலேயே வெற்றி காண்பீர்கள்.

**விருச்சிகம்:**
முயற்சிகள் சிலவற்றில் முன்னேற்றமான பலன்கள் கிடைக்கும். சில செயல்களில் தொடர்பு இருந்தாலும் தக்க நபர்களில் உதவியுடன் முயற்சிகளில் ஈடுபடுவீர்கள்.

**தனுசு:**
காரியங்கள் பலவற்றில் தீவிர முயற்சியுடன் ஈடுபட்டாலும் சிலவற்றிலே எதிர்பார்க்கும் பலனை அடைய முடியும்.

**மகரம்:**
பல செயல்களில் முயன்று செயலாற்றினாலும் சிலவற்றில் மட்டுமே முன்னேற்றமான பலன்களை அடைவீர்கள்.

**கும்பம்:**
ஒப்பந்தங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். வரவேண்டிய தன வரவு சிறிது தாமதித்தே வந்து சேரும்.

**மீனம்:**
செயல்கள் பலவற்றில் சிறப்பாக முயற்சிகள் செய்தாலும் சில வற்றிலையை எதிர்பார்க்கும் நன்மைகளை அடைய முடியும்.

## ஐக்கிய மக்கள் .... (02ஆம் பக்கத் தொடர்ச்சி)

20 மாவட்டங்களில் ஆகக்கூடிய வகையில் ஐக்கிய குடியரசு முன்னணி அர்ப்பணிப்புடன் செயல்பட்டது. ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவாக பொதுத் தேர்தல் செயல்பாடுகளில் புரிந்துணர்வு செயல்பாடுகளை காணக்கூடியதாக இல்லை.

இதற்கமைவாக எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய குடியரசு முன்னணி ஐக்கிய மக்கள் சக்தியுடன் எந்த நடவடிக்கையிலும் ஈடுபடப் போவதில்லை.

இதனால் ஐக்கிய மக்கள் சக்கியிலிலிருந்து வெளியேறுவதாக அந்த கடிதத்தில் குடியரசு முன்னணியின் செயலாளர் பந்துல சந்திரசேகர மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சர்வஜன அதிகாரக்... (02ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்வேறு கட்சிகளின் தலைவர்களால் உள்ளூராட்சி பிரதிநிதிகள் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல் முத்திரையை அகற்றுவதற்கு, தமது கட்சி நடவடிக்கை எடுக்கும் என தாயக மக்கள் கட்சியின் தலைவர் திலித் ஜயவீர இதன்போது தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்திய மஹர பிரதேச சபையின் முன்னாள் உப தலைவர் உட்பட 16 உறுப்பினர்கள் நேற்று சர்வஜன அதிகார கூட்டணியில் இணைந்து கொண்டனர். அத்துடன் அங்குனுகொலபெலஸ்ஸ மற்றும் கட்டுவன பிரதேச சபைகளின் தலைவர்களும் இக்கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளனர். அதன்போது, அக்கட்சியின் ஹம்பாந்தோட்டை மாவட்டத் தலைவராக கலாநிதி பிரசாத் மஞ்சுள நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மெதிரிகிரிய மற்றும் மின்னேரிய தொகுதி அமைப்பாளர்களும் நேற்று பிற்பகல் சர்வஜன அதிகார கூட்டணியில் இணைந்து கொண்டதோடு, அவர்களுக்கும் சர்வஜன அதிகாரத்தின் தொகுதி அமைப்பாளர்கள் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

## ஆறு கோடி ரூபா .... (02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மேற்படி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி ஒன்றையும் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர். சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு இணங்க, மன்னார் பகுதியிலிருந்து சுஜி என்ற நபர் படகொன்றின் மூலம் சிலாவத்துறை பாலத்திற்கு அருகில் வைத்து தம்மிடம் வழங்கியதாகவும் அவர் தெரிவித்துள்ளார். பின்னர், அவர் கேட்டுக் கொண்ட தற்கிணங்க போதை மாத்திரைகள் கொழும்பு பகுதிக்கு கொண்டு வரப்பட்டதாகவும் சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## TATA குழுமத் தலைவர்...

ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை இவர் பதவி வகித்தார்.

அவரது சேவைப் பணி மற்றும் தொலைநோக்கு அனைவராலும் அறியப்பட்டது. நவல் டாடா சுனு தம்பதியின் மகனாக 1937, டிசம்பர் 28இல் சூரத் நகரில் பிறந்தவர் ரத்தன் டாடா.

ஹாவர்ட் பல்கலைக்கழகத்தில் நிர்வாகப் படிப்பை முடித்த ரத்தன் டாடா ஐ.பி.எம்.இல் பணிக்குச் சேர்ந்தார். நாட்டின் மீதான பற்றால் இந்தியா திரும்பிய இவர், தனது குடும்ப வணிகத்தில் முழு மூச்சாய் களம் இறங்கினார். டாடா நிறுவனத்தில் சிறு சிறு பொறுப்புகளை வகித்துத் தொழில் நுணுக்கங்களை கற்றுத் தேர்ந்தார். டாடா வியாபார குழுமத்தை இந்தியாவில் தொடங்கி உலகம் முழுவதற்கும் ரத்தன் டாடா எடுத்துச் சென்றார்.

அயராத உழைப்பிற்கு பிறகே உயர் பதவியை ஏற்றார். சுண்ணாம்புக்கல் எடுப்பது தொடங்கி சூளைகளைக் கையாளும் பணிகள் வரை செய்தவர் இவர்.

1991இல் டாட்டா குழுமத் தலைவராக ரத்தன் டாடா பொறுப்பேற்ற பின், நிறுவனம் அசுர வளர்ச்சியை அடைந்தது. ரத்தன் டாடாவின் தலைமையின் கீழ் 50 மடங்கு லாபத்தைப் பெருக்கியது டாடா குழுமம்.

டாடா குழுமத்தின் தலைவராக 1991ஆம் ஆண்டு முதல் 2012ஆம் ஆண்டு வரை ரத்தன் டாடா பதவி வகித்து, 2012இல், ஓய்வு பெற்றார்.

கைதொழில்துறையில் ஆற்றிய சாதனைகளுக்காக பத்மபூஷண், பத்ம விபூஷன் விருதுகளை ரத்தன் டாடா பெற்றுள்ளார்.கொரோனா நிவாரண பணிகளுக்காக இந்திய மதிப்பில் ரூ.1,500 கோடி வழங்கி இருந்தார். இந்நிலையில் ரத்தன் டாடாவுக்கு அரசியல் தலைவர்கள் முதல் பலரும் இரங்கலகளை தெரிவித்து வருகின்றனர்.

# லேக்ஹவுஸ் இந்து மன்றத்தின் நவராத்திரி விழா

























லேக் ஹவுஸ் இந்துமன்றம் நடத்திய நவராத்திரி விழா நேற்று தினகரன் ஆசிரியர் பீடத்தில் நடைபெற்றது. லேக்ஹவுஸ் நிறுவனத் தலைவர் காமினி வருஷமான, ஆசிரிய பீடப் பணிப்பாளர் சிசிர யாப்பா, நிதிப் பணிப்பாளர், சன்ன கெவித் தியாகல, டெய்லி நியூஸ் ஆசிரியர் கேசர அபேவர்தன. தினமின ஆசிரியர் மனோஜ் அபேவீர, சிலுமின ஆசிரியர் ஷிரோமி அபேசிங்க மற்றும் தினகரன் ஆசிரியர் தே. செந்தில்வேலவர் உட்பட ஆசிரிய பீடத்தினர் மற்றும் இந்து மன்ற அங்கத்தவர்கள் இதில் கலந்து கொண்டனர். பிரம்மஸ்ரீ இராமச்சந்திரக் குருக்கள் பாபுசர்மா பூஜைகளை நடத்தினார்.

படங்கள்: துஷ்மந்த மாயாதுன்ன







# தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்க நாட்டில் எந்தவொரு கட்சியும் இல்லை

## கட்சியின் செயற்குழு உறுப்பினர் லால்காந்த

*ஹற்றன் சுழற்சி நிருபர்*

தேசிய மக்கள் சக்திக்கு சவால் விடுக்கும் வகையில், நாட்டில் எந்தவொரு கட்சியும் இல்லையெனவும், நாட்டின் பெரும்பான்மையான மக்கள் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்துள்ளதாகவும் அக்கட்சியின் செயற்குழு உறுப்பினர் லால்காந்த தெரிவித்தார்.

நாவலப்பிட்டியில் நேற்று முன்தினம் (09) நடைபெற்ற பொதுத் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தற்போது எட்டாகப் பிளவுபட்டுள்ளது, ஐக்கிய தேசியக் கட்சி பெயருக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன இல்லாமல் போய்விட்டது.



கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி மாபெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. அவ்வாறே பொதுத் தேர்தலிலும் நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்துப் பகுதி மக்களும் திசைகாட்டியை சுற்றித் திரண்டு வருகின்றனர்.

நாவலப்பிட்டி தொகுதி மஹிந்தானந்த அளுத்கமவின் கோட்டையாக மாறியிருந்த நிலையில், அக்கோட்டையை ஜனாதிபதி தேர்தலில் பிரதேச மக்கள் உடைத்துள்ளனர்.

தற்போது ஜனாதிபதி உட்பட இரண்டு அமைச்சர்கள் நாட்டின் அத்தியாவசிய சேவைகளை மாத்திரம் பேணுவதற்கு செயற்பட்டு வருவகின்றனர். பொதுத் தேர்தலின் பின்னர் அமைச்சரவை மற்றும் பிரதி அமைச்சர்களை அமைச்சுக்களுக்கு நியமித்ததன் பின்னர் தேசிய மக்கள் சக்தி அனைத்தையும் நிறைவேற்றும் வகையில் செயற்படும் என லால்காந்த தெரிவித்தார்.

நவராத்திரியை முன்னிட்டு

# அறிநெறி மாணவர்களின் கலை, கலாசார நிகழ்வுகள்

*மாத்தளை சுழற்சி நிருபர்*

நவராத்திரி தினத்தை முன்னிட்டு, கண்டி அலவத்துகொட அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலின் அறநெறிப் பாடசாலை மாணவர்களது கலாசார போட்டிகள் இன்று (11) பிற்பகல் 3.00மணிக்கு கோயில் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதற்கமைய, கோலப்போட்டிகள், தோரணை கட்டும் போட்டிகள் மற்றும் பல்வேறு கலாசார போட்டிகளும் இங்கு இடம்பெறவுள்ளன.

நாளை (12) சனிக்கிழமை காலை 9.00மணிக்கு விஜயதசமி பூஜையும் அதனைத்தொடர்ந்து வித்யாரம்ப நிகழ்வும் நடைபெறவுள்ளதுடன், அன்றையதினம் மாலை மானம்பூ திருவிழாவும், அதன்பின் கௌரிவிரதாரம்பத்துக்கான கும்பம் வைக்கும் நிகழ்வும் கோயில் பிரதான பூசகர் கனகசபை குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

சப்ரகமுவ இயந்திர உபகரண அதிகார சபை

# சிறந்த அரச நிறுவனமாக தரமுயர்த்த நடவடிக்கை

## ஆளுநர் சம்பா ஜானகி நடவடிக்கை

*காவத்தை தினகரன் விசேட நிருபர்*



சப்ரகமுவ மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகார சபை, ஒரு சிறந்த அரச நிறுவனமாக தரமுயர்த்தப்படுமென சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன தெரிவித்தார்.

இரத்தினபுரியிலுள்ள சப்ரகமுவ மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகார சபைக்கு, கடந்த 08 ஆம் திகதி விஜயம் செய்த, சப்ரகமுவ மாகாண ஆளுநர், அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டதன் பின்னர் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் மத்தியில் உரையாற்றுகையிலேயே இதனை தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த ஆளுநர்,

அரச நிறுவனமான சப்ரகமுவ மாகாண அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர உபகரண அதிகார சபையின் (DeCMA) மனிதவள சார்ந்த பிரச்சினைகள் உட்பட ஏனைய குறைபாடுகளை ஆராய்ந்து, நிறுவனத்தை இலாபகரமாக உயர்த்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தெரிவித்தார்.

2009 இல் நிறுவப்பட்ட இந்த நிறுவனம், தற்போது இரத்தினபுரி பிரதான அலுவலகத்துக்கு மேலதிகமாக கேகாலை உப அலுவலகம் மற்றும் சேவை நிலையத்தையும் கொண்டுள்ளது.

இந்த அதிகார சபையினால், வாகனம் பழுதுபார்த்தல், வாகனம் மற்றும் இயந்திரங்களை வாடகை அடிப்படையில் வழங்குதல், அச்சக பணிகள், மற்றும் கட்டடங்கள் கட்டுதல், எழுதுபொருள் விற்பனை, வாகன சான்றிதழ் வழங்குதல், வாகன ஸ்கேனிங், பெட்டரி, டயர் மற்றும் பயிற்சி வாய்ப்புகளை வழங்குதல் போன்றவை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# திடீரென தீப்பிடித்து எரிந்த பஸ் சேதம்



*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

எம்பிலிப்பிட்டியவிலிருந்து இரத்தினபுரி நோக்கி 50 பயணிகளுடன் பயணித்த தனியார் பஸ்ஸொன்று திடீரென தீப்பிடித்து எரிந்துள்ளது. இச்சம்பவம் நேற்றுக்காலை (10) இடம்பெற்றுள்ளது.

தீ ஏற்பட்டதை அறிந்த பஸ்ஸின் சாரதி, உடனடியாக பயணிகளை பஸ்ஸிலிருந்து வெளியேற்றியுள்ளதுடன், வேறு பயண ஒழுங்குகளையும் செய்துள்ளனர். இதனையடுத்து, பஸ்ஸின் ஊழியர்கள், பயணிகள் பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்படுத்தியுள்ளனர்.

எனினும், தீ விபத்துக்குள்ளானதில் இந்த பஸ் பாரிய சேதமடைந்துள்ளதுடன், எவருக்கும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

# நுவரெலியாவில் யானை, கண்டியில் கேஸ் சின்னத்தில் போட்டியிடுவதாக அறிவிப்பு

## ஜீவன், ராமேஸ், சக்தி கையொப்பம்







*தலவாக்கலை குறூப் நிருபர்*

நுவரெலியா மாவட்டத்திலிருந்து இம்முறை பாராளுமன்றத்துக்கு எட்டு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

அதன்படி, பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்ற நிலையில், நுவரெலியா மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

போட்டியிடுவதற்கான வேட்புமனுவில், இ.தொ.கா வின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான், தவிசாளர் மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் தேசிய அமைப்பாளர் ஏ.பி.சத்திவேல் ஆகியோர் கையொப்பமிட்டனர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சியின் கூட்டணியின் கீழ், யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளதுடன், கண்டி மாவட்டத்தில் கேஸ் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

# இலங்கை இந்திய கூட்டு தயாரிப்பு படப்பிடிப்பு

## 9 வளைவு பாலத்தில் ஆரம்பம்



*லுணுகல நிருபர்*

எல்லதெமோதர பகுதியிலுள்ள 9 வளைவு பாலத்தில் இந்திய - இலங்கை கூட்டுத் தயாரிப்பு திரைப் படத்துக்கான படப்பிடிப்பு நேற்று முன்தினம் (09)ஆரம்பமானது.

இதனால் மலையகத்துக்கான ரயில் சேவையானது நேற்றுமுன்தினம் (09) முதல் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை கொழும்பு கோட்டையிலிருந்து எல்ல புகையிரத நிலையம் வரை நடைபெறுகின்றது. இந்த ரயில் சேவை காலை 7.30 மணி முதல் மாலை 5.30 மணி வரை நடைபெறுகிறது.

அத்துடன் எல்ல - பதுளை இடையில் பயணிகள் பேருந்துளைப் பயன்படுத்தி போக்குவரத்து மேற்கொள்ள ரயில்வே திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இலங்கையில் சுற்றுலாத்துறையை கவரும் நோக்கில் இத்திரைப்படம் இரவில் படமாக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்கள பிரதிப் பொதுமுகாமையாளர் தி.என்.ஜே.இடிபோலகே தெரிவித்தார்.

கடந்த 09 ஆம் திகதி ஒன்பது ஆர்ச் பாலத்தில் ரயிலில் நடைபெற்ற படப்பிடிப்புக்களில் இந்தியாவைச் சேர்ந்த நடிகர், நடிகைகள் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மத்திய மாகாண ஆளுநரை சந்தித்த இந்திய துணைத்தூதுவர் சரண்யா

*தம்புள்ள தினகரன் நிருபர்*



மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் எஸ்.பீ.எஸ்.அபயகோன் மற்றும் இந்தியத் துணைத் தூதுவர் வீ.எஸ்.சரண்யா ஆகியோருக்கிடையிலான சிநேகபூர்வ சந்திப்பொன்று நேற்று முன்தினம் (9) கண்டி ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, இந்தியா மற்றும் இலங்கை ஆகிய இரு நாடுகளுக்கிடையே வரலாற்று ரீதியாக நீண்டகாலமாக நிலவும் சமூக, சமய மற்றும் பொருளாதார அபிவிருத்தி, கல்வி உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

கலந்துரையாடலின் இறுதியில் சுமுகமான சந்திப்பை நினைவுகூரும் முகமாக நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

இச் சந்திப்பில் மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் மஞ்சுளா மடஹபொல கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியாவில் போட்டியிடுவதற்கு

# வேட்புமனுவை தாக்கல் செய்த ஈரோஸ் ஜனநாயக முன்னணி



பாராளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடுவதற்கான வேட்புமனுவை ஈரோஸ் ஜனநாயக முன்னணி தாக்கல் செய்துள்ளது.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில், மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட செயலாளருமான நந்தன கலபட விடம் நேற்று முன்தினம் (09) வேட்புமனு தாக்கல்செய்யப்பட்டுள்ளது. ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் செயலாளர் இரா.ஜீவன் ராஜேந்திரன் மற்றும் முன்னணியின் சார்பில் இணைந்து, வேட்பாளராக போட்டியிடும் சட்டத்தரணி சுப்பிரமணியம் காண்டீபன் ஆகியோர் மாவட்ட செயலகத்துக்குச் சென்று வேட்புமனுவை தாக்கல் செய்தனர்.

இதனையடுத்து, ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த முன்னணியின் செயலாளர் இரா.ஜீவன் ராஜேந்திரன்,

நுவரெலியா மாவட்டத்தில், ஈரோஸ் ஜனநாயக முன்னணி முதல் முறையாக பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு வேட்புமனுவை தாக்கல் செய்துள்ளது.

அதன்படி, இத் தேர்தலில் இலங்கையில் நான்கு மாவட்டங்களில் ஈரோஸ் ஜனநாயக முன்னணி, ஒலிபெருக்கி சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக தெரிவித்தார்.

**ஆ.ரமேஸ்.**

# நுவரெலியாவில் மாவட்டத்தில் கே.கே.பியதாஸ ஐ.தே.கவில் போட்டி

பாராளுமன்ற தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் முன்னால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி கூட்டணியில் முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் கே.கே. பியதாஸ யானை சின்னத்தில் போட்டியிடவுள்ளார்.

இந்நிலையில் நுவரெலியா மாவட்டத்திலிருந்து (08) உறுப்பினர்களை தெரிவு செய்யும் இந்த தேர்தலில் ஒரு அரசியல் கட்சி அல்லது சுயேட்சை குழுவில் 11 வேட்பாளர்கள் போட்டியிடவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த 2020 பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்ட முன்னால் அமைச்சர் நவீன் திஸாநாயக்க இம்முறை போட்டியிடவில்லை என தெரியவந்துள்ளது.





பாராளுமன்ற தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் கே.கே. பியதாச மற்றும் கண்டி மாவட்டத்தில் போட்டியிடும் கே.கே.லஹிரு மதுஷங்க ஜென்டில் மேன் நேற்று(10) வேட்புமனுக்களில் கையெழுத்திடும் போது...

# கண்டியில் தேசிய மக்கள் சக்தி வேட்பு மனுத் தாக்கல் செய்தது

கண்டி மாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவினை தேசிய மக்கள் சக்தி நேற்று (10) தாக்கல் செய்தது.

அதன்படி, கண்டி மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி சார்பாக, தலைமை வேட்பாளர் குருகமகே தொன் லால்காந்த திசாநாயக்க, முதியன்சலாகே தனுர ஹர்ண திசாநாயக்க, முதித ஹங்சக விஜேமுணி, ஹொலுபத்திராகே ஜயதிலக, மாயாதுன்னே, பத்தியன் கொராலலாகே ரவிந்திர பிரபாத் உஸ்வெட்டகெய்யாவ, ஜயனெந்தி கோராலலாகே தோன குசாரி, கொடித்துவக்கு ஆராச்சிகே ஜகத் மனுவணி கொடித்துவக்கு, யாப்பா முதியன் சலாகே வலவ்வே ஆனந்த குமார, விஜேரத்தன, மெதகே மங்சுல பிரசந்த குமார, குணசேன, கொடித்துவக்கு ஆராச்சிலாகே சூலா குமுதுனி அபேகுணவர்தன, பெருமாள் பிச்சை சிவப்பிரகாசம், முஹம்மது பாரூக், ரியாஸ் முஹமட், முஹமட் ஷரீப் முஹமட் பஸ்மின், ஹேரத் முதியான்சலாகே நிமல் ஹேரத் பண்டா, ஏகநாயக முதியான்சலாகே கெதர கும்புரெ கெதர பஸ்நாயக ஆகிய 15 பேர் தேசிய மக்கள் சக்தியில் போட்டியிடவுள்ளனர்.



**இக்பால் அலி**

# தந்தையை கொலை செய்துவிட்டு வெளிநாட்டுக்கு தப்பிச்சென்ற மகன்; நாட்டில் மறைந்து வாழ்ந்து வந்த நிலையில் கைது

*இரத்தினபுரி சுழற்சி நிருபர்*

தந்தையை கொலை செய்துவிட்டு, வெளிநாட்டுக்கு தப்பிச் சென்ற மகன் மீண்டும் நாட்டுக்கு வருகை வந்து மறைந்து வாழ்ந்துவந்த நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இக் கொலைச் சம்பவம் கடந்த 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி, துனுமால போகஹ ஹேன என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது. எனினும், சம்பவம் தொடர்பாக அப்போதைய பொலிஸ் விசாரணைகளில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில், இப்பிரதேசத்தைச் சேர்ந்த நபரொருவர் குற்றப் புலனாய்வு திணைக்கள உதவி பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றின் அடிப்படையில், இக்கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் வெளிநாட்டில் வசித்து வருவதாக தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகளின் உதவியுடன் தேடப்பட்டு வந்த சந்தேகநபர், மறைந்து வாழ்ந்து வந்த நிலையில் குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.





150 ஆவது உலக தபால் தினத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் (09) மீதும்பிட்டிய பிராந்திய வைத்தியசாலையின் உளநோயாளிகளுக்கு பசறை தபால் நிலைய ஊழியர்கள் உலர் உணவுகளை விநியோகித்தபோது... படம்: லுணுகல நிருபர்

# உண்மையான இறை விசுவாசியின் பண்புகள்

இறைவனை நேசிப்போம், இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் நேசிப்போம், நபி வழி நடப்போம், இறை நம்பிக்கையை வளமாக்குவோம்

இஸ்லாமிய இறைநம்பிக்கை என்பது 70க்கும் மேற்பட்ட கிளைகள் கொண்டது. அது குறித்த தகவல்களை இந்த தொடரில் பார்த்து வருகிறோம். இந்த வாரம், 'இறைவனை நேசிப்பது', 'இறைத்தூதர் நபி (ஸல்) அவர்களை நேசிப்பது', மற்றும் 'நபி வழியை பின்பற்றுவது' ஆகிய இறை நம்பிக்கைகள் குறித்த தகவல்களை காண்போம்.

இறைவனையும், இறைத்தூதர் முஹம்மது நபி (ஸல்) அவர்களையும் நேசிப்பது, நபி வழியைப் பின்பற்றுவது இறை நம்பிக்கையின் முக்கியமான அம்சங்களாகும். நாம் அவ்விருவரையும் நமது உயிரை விடவும், உடைமைகளை விடவும், பெற்றோரை விடவும், குடும்பத்தாரை விடவும், வியாபாரத்தை விடவும், உடன்பிறந்தாரை விடவும், வீட்டை விடவும், செல்வத்தை விடவும் உயர்வாக நேசிக்க வேண்டும். அவர்களின் நேசத்திற்கு நிகராக வேறெந்த நேசமும் இருக்கக்கூடாது. இத்தகைய நேசமே பரிபூரண இறைநம்பிக்கையின் அடையாளமாகும்.

இதனை அல் குர்ஆன் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறது, 'உங்கள் பெற்றோரும், உங்கள் பிள்ளைகளும், உங்கள் சகோதரர்களும், உங்கள் வாழ்க்கைத் துணைவியரும், உங்களின் குடும்பத்தாரும், நீங்கள் திரட்டிய செல்வங்களும், நீங்கள் நஷ்டத்தை அஞ்சுகிற வியாபாரமும், நீங்கள் விரும்புகிற வசிப்பிடங்களும் இறைவனைவிட, அவனது தூதரை விட, அவன் பாதையில் போரிடுவதை விட உங்களுக்கு அதிக விருப்பமானவையாக ஆகிவிட்டால் இறைவன் தனது கட்டளையைப் பிறப்பிக்கும் வரை காத்திருங்கள். குற்றம் புரியும் கூட்டத்துக்கு இறைவன் வழிகாட்டமாட்டான், என்று நபியே கூறுவீராக' (09:24)

இந்த வசனத்தின் படி அல்லாஹ்வையும், அவனது இறைத்தூதர் (ஸல்) அவர்களையும் நேசிப்பது எவ்வாறு அமைய வேண்டும் என்பது தெளிவாகிறது. அதுவே இறைநம்பிக்கையின் அடிப்படையும் ஆகும்.

இதேவேளை நபி (ஸல்) அவர்கள், 'எவரிடம் மூன்று தன்மைகள் அமைந்து விட்டனவோ அவர் இறைநம்பிக்கையின் சுவையை உணர்ந்தவராவார். அவை: 1) இறைவனும், அவனது தூதரும் ஒருவருக்கு மற்றெதையும் விட அதிக நேசத்திற்குரியவராக இருப்பது. 2) ஒருவர் மற்றொருவரை இறைவனுக்காகவே நேசிப்பது. 3) நெருப்பில் வீசப்படுவதை வெறுப்பது போல்



இறை நிராகரிப்புக்குத் திரும்பிச் செல்வதை வெறுப்பது என்று குறிப்பிட்டுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி).

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், 'உங்களில் ஒருவருக்கு அவரின் தந்தை, அவரின் குழந்தைகள், ஏனைய மக்கள் அனைவரை விடவும் நான் மிக நேசமானவராகும் வரை அவர் உண்மையான இறை நம்பிக்கையாளராக மாட்டார் எனவும் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: புஹாரி)

மேலும் அப்துல்லாஹ் பின் ஹிஷாம் (ரழி) அவர்கள் ஒரு தடவை அறிவிப்பதாவது, 'நாங்கள் நபி (ஸல்) அவர்களுடன் இருந்து கொண்டிருந்தோம். அப்போது நபியவர்கள் உமர் (ரழி) அவர்களின் கையைப் பிடித்துக் கொண்டிருந்தார். அந்நேரம் உமர் (ரழி) அவர்கள் நபியவர்களிடம் 'இறைத்தூதரே! எனது உயிரைத் தவிரவுள்ள எல்லாவற்றையும் விட நீங்களே எனக்கு நேசமானவர்கள்' என்று கூறினார்கள். அதற்கு நபி (ஸல்) அவர்கள் 'இல்லை! என் உயிர் எவன் கைவசம் உள்ளதோ அவன் மீது சத்தியமாக! உமது உயிரை விடவும் நானே உமக்கு மிகவும் பிரியமானவராக ஆகும் வரை நீர் உண்மை இறைவிசுவாசியாக முடியாது' என்றார்கள். உடனே உமர் (ரழி) நபியை நோக்கி 'இப்போது இறைவனின் மீதாணை! எனது உயிரை விடவும் தாங்களே எனக்கு மிகவும் நேசமானவர்கள்' என்றார். 'இப்போதுதான் உமரே! சரியாகச் சொன்னீர்' என நபி (ஸல்) கூறினார்கள். (ஆதாரம்: புஹாரி)

இறைவன் மற்றும் இறைத்தூதரை நேசிப்பது என்பது, ஒன்று மற்றொன்றுடன் தொடர்புடையதாகும். ஒருவரை நேசித்து, மற்றவரை நேசிக்காமல் இருக்கமுடியாது. ஒருவரை வெறுத்தாலும் மற்றவரை வெறுக்க வேண்டியது வரும். இருவரின் நேசத்தையும் ஒருசேர அடைய சில எளிய வழிகளை கடைப்பிடித்தால் போதும். அது என்ன வழி? இறைவனும், இறைத்தூதரும் கட்டளையிட்டதை முடிந்தளவு கடைப்பிடித்து வாழ வேண்டும். அவ்விருவரும் தடுத்ததை முற்றிலும் தவிர்ந்து நடக்கவேண்டும். அவர்களுக்கு எது பிரியமானதோ அது நமக்கும் பிரியமானதாகவும், அவர்களுக்கு எது வெறுப்பானதோ அது நமக்கும் வெறுப்பானதாகவும் இயற்கையாகவே ஆக வேண்டும்.

சொல்லாலும், செயலாலும், இன்பத்திலும்துன்பத்திலும், இலாபத்திலும்நஷ்டத்திலும், செழுமையிலும்வறுமையிலும், ஆரோக்கியத்திலும்நோயிலும், இளமையிலும்முதுமையிலும் வாழ்க்கையின் அனைத்து கட்டங்களிலும் முழுமையாக அவர்களை பின்பற்ற வேண்டும். மனோ இச்சைக்கு எதிராக எதை தூண்டினார்களோ அதை தேர்ந்தெடுத்து நடக்க வேண்டும். பிரியப்படும் இருவரையும் அதிகம் நினைவு கூரவேண்டும். பிரியமான இருவரையும் நினைவு கூரப்படும் போது பணிவு, பயபக்தியுடன் கண்ணியப்படுத்திட வேண்டும்.

இருவரும் யாரை நேசித்தார்களோ அவரையும் நாம் நேசிக்க வேண்டும். வெறுத்தோரை நாம் வெறுக்க வேண்டும். ஒட்டு மொத்தத்தில் அவ்விருவரின் எண்ணம் போன்று நமது வாழ்வு அமைந்திட வேண்டும்.

'ஒன்றை நேசிப்பது அது உன்னை குருடனாகவும், செவிடனாகவும் மாற்றிவிடும்' என்பது அரேபிய பழமொழியாகும். நாம் இறைவனையும், இறைத்தூதரையும் உண்மையாக நேசிக்கும் போது மற்றையதை காணமாட்டோம். மற்றயதை கேட்க மாட்டோம். இருவரின் ஆழமான நட்பில் நாம் மூழ்கும் போது கண்முன் நடப்பது தெரியாது.

காதுக்கு நேராக பேசுவது கேட்காது. நமது பார்வையும், செவிப்புலனும் நாம் யாரை நேசிக்கிறோமோ அவர்களுக்காகவே மட்டும் செயல்படும். மற்றவர்களுக்காக செயல்படாது. இதுதான் உண்மையான நேசத்தின் அடையாளம். இந்தத் தன்மை இறைவனையும், இறைத்தூதரையும் நேசிப்பவர்களிடம் வெளிப்பட வேண்டும்.

இறைவனை நேசிப்பதினால் நன்மையான காரியங்கள்தான் வெளிப்படுமே தவிர தீமைகள் அல்ல. '(நல்லவர்கள்) இறைவனை நேசித்ததற்காக ஏழைக்கும், அனாதைக்கும், சிறைப்பட்டவருக்கும் உணவளிப்பார்கள்'. ( அல் குர்ஆன் 76:8)

இறைவனை அறியாதோருக்கு, அவனின் நேசத்தை உளப்பூர்வமாக உணராதோருக்குத்தான் சாதாரண இறைக்கட்டளைகளும், இறைக்கடமைகளும் கடினமாகத் தெரியும். இறைநேசத்தை உணர்ந்தோருக்கு மலையளவு கடமை கூட மலைக்க வைக்காது.

'இறைவனை அறிந்தவன் அவனை நேசிக்கின்றான். இவ்வுலகை அறிந்தவன் அதை வெறுக்கின்றான்' என்று ஹஸன் பஸரீ (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

உலகில் வாழும் ஒவ்வொரு இறைவிசுவாசியின் உள்ளமும் மூன்று விதங்களில் இறைவனைப் பற்றி நினைக்கிறது.

1) இறைவனின் அச்சத்தை உணர்வது, 2) இறைவன் தனக்கு சொர்க்கத்தை தரவேண்டும் என இறைவனின் கருணையை எதிர்பார்ப்பது, 3) இறைவனை நேசிப்பது.

நபி (ஸல்) அவர்களின் மீது கொண்ட அன்பினால் ஒரு பெண் எப்படி நடந்து கொண்டார்? என்பதை அறியும் போது நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது. ஒரு அன்ஸாரிப் பெண்மணியின் தந்தை, அவரின் சகோதரர், அவரின் கணவர் மூவரும் உஹதுப்போரில் நபியவர்களுடன் கலந்து கொண்டனர். அதில் வீரமரணமும் அடைந்தனர். அப்பெண் போர்க்களம் காண வந்தபோது, அந்த மூவரும் கொல்லப்பட்ட செய்தி அவருக்கு தெரிவிக்கப்பட்டது. 'நபி (ஸல்) எப்படி இருக்கிறார்கள்?' என்றுதான் முதலில் விசாரித்தார். நபியைக் கண்கூடாக கண்ட போதுதான் அவரின் கவலை மாயமாகிப் போனது. இதுதான் உண்மையான அன்பாகும்.

'ஒருவர் நபியவர்களிடம் வந்து, 'உலகம் எப்போது அழியும்?' என கேட்டார். 'அதற்காக நீர் என்ன ஆயத்தப்படுத்தி வைத்துள்ளீர்?' என நபி (ஸல்) அவர்கள் அவரிடம் திரும்பக் கேட்டார்கள். 'நான் அதிகமான தொழுகைகளையோ, நோன்புகளையோ, தானதர்மங்களையோ தயார்படுத்தி வைக்கவில்லை. எனினும் நான் இறைவனையும், இறைத்தூதரையும் நேசிக்கிறேன்' என்று அவர் பதில் கூறினார். உடனே நபியவர்கள், 'நீர் யாரை நேசிக்கிறீரோ அவர்களுடனேயே இருப்பீர்' என்றார்கள். (ஆதாரம்: புஹாரி).இறைவனின் நேசத்தை அடைய இறைத்தூதரையும், இறைத்தூதரின் நேசத்தை அடைய நபிவழியையும் பின்பற்றினால் போதும்.

'(நபியே! மேலும்) நீங்கள் கூறுங்கள்: அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் நீங்கள் கீழ்படியுங்கள். அன்றி நீங்கள் புறக்கணித்தால் நிச்சயமாக அல்லாஹ் நிராகரிப்பவர்களை நேசிப்பதில்லை. (அல் குர்ஆன் 3:32) ஆகவே இறைவனை நேசிப்போம், இறைத்தூதர் முஹம்மது (ஸல்) அவர்களையும் நேசிப்போம், நபி வழி நடப்போம், இறைநம்பிக்கையை வளமாக்குவோம்.

**அப்துல்லாஹ்**

## ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# பிள்ளை வளர்ப்பில் பெற்றோரின் பொறுப்பு

குழந்தை பராமரிப்பு பற்றி பல இடங்களில் இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது. அதை செயல்படுத்துவது பெற்றோர்களின் கடமை எனவும் கூறுகிறது. நபி (ஸல்) அவர்கள் அமர்ந்திருக்கும் போதும், தொழும்போதும் அவரது பேரக்குழந்தைகளான ஹஸனும், ஹுஸைனும் அவரது கால்களுக்கிடையேயும், கழுத்தில் ஏறியும் விளையாடக்கூடியவர்களாக இருந்துள்ளார்கள்.

இதைப்பார்த்த தோழர்கள், 'இறைத்தூதரே இந்த அளவுக்கா இருவரையும் நீங்கள் விரும்புகிறீர்கள்?' எனக் கேட்டார்கள். அதற்கு நபிகளார், 'ஏன் இல்லை? இவர்கள் இருவரும் என்னுடைய இவ்வுலக செல்வம் இல்லையா?' என்றார்கள்.

நபி(ஸல்) அவர்கள், தனது பேரக்குழந்தைகள் மீது காட்டிய அன்பின் வெளிப்பாடுதான் இச்சம்பவம். இதேபோன்று எத்தனையோ உதாரணங்களை சொல்லிக்கொண்டே போகலாம். குழந்தைகளை அன்பொழுக நேசித்தவர் தான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களாவர்.

குழந்தைகள் இவ்வுலகத்தில் கிடைத்த எல்லா செல்வங்களை விடவும் மேலானவர்கள். தன்னை சுற்றி இருப்பவர்களை பார்த்தே தனது பேச்சை, செயலை அமைத்துக்கொள்பவர்கள் அவர்கள். குழந்தைகளின் செயல்களுக்கு பொறுப்புதாரியாக பெற்றோர்களே இருக்கிறார்கள். அதனால் குழந்தைகளை எப்படி வளர்க்க வேண்டும். அவர்களுக்கு எது மாதிரியான செயல்களை கற்றுக்கொடுக்க வேண்டும் என்ற புரிதல், அக்கறை பெற்றோர்களுக்கு இருப்பது அவசியமானது.

குழந்தை பராமரிப்பு பற்றி பல இடங்களில் இஸ்லாம் குறிப்பிட்டுள்ளது. அதை செயல்படுத்துவது பெற்றோர்களின் கடமை எனவும் கூறுகிறது. குழந்தைகள் தந்தையைவிட தாயிடமே அதிக நேரத்தை செலவிடுகின்றன. குழந்தை வளர்ப்பில் தந்தையைவிட தாய்க்கு அதிக கடமைகளும், பொறுப்புகளும் இருக்கின்றன.

தன் குழந்தையை பராமரிப்பதற்காக ஒரு தாய்க்கு கிடைக்கும் கூலி பகலெல்லாம் நோன்பு நோற்று இரவெல்லாம் நின்று வணங்கும் ஒருவருடைய கூலியை போன்றது' என்று நபி(ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். (நபிமொழி)

நோன்பு நோற்பதும், இறைவனை தொழுது வணங்குவதும் இஸ்லாமிய கடமைகளாகும். அதற்கு நிகரான நன்மையை தன் குழந்தையை பராமரிப்பதற்கு இஸ்லாம் வழங்குகிறது என்பது, குழந்தை வளர்ப்பிற்கு இஸ்லாம் எவ்வளவு முக்கியத்துவம் அளித்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது.

பெற்றோர் தம் பிள்ளைகள் நன்கு படிக்க வேண்டும், நிறைய செல்வங்களை ஈட்ட வேண்டும், வாழ்வில் முன்னேற வேண்டும் என்று நினைப்பதுபோன்று நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும், நற்சிந்தனை நிறைந்தவர்களாகவும் வளர வேண்டும் என்றும் நினைக்க வேண்டும். அதற்கான செயற்காரியங்களிலும் இறங்க வேண்டும்.

இரண்டு கைநிறைய (பொருட்களை தினமும்) தர்மம் செய்வதைவிட ஒரு தந்தை தன் மகனுக்கு நல்லொழுக்கம் கற்றுக் கொடுப்பதே அல்லாஹ்விடம் சிறந்தது' எனவும் நபி(ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (நபிமொழி)

'தர்மம் தலைகாக்கும்' என்று சொல்வார்கள். ஆனால் தர்மத்தைவிட கூடுதலான சிறப்பை குழந்தைகளுக்கு நல்லொழுக்கம் கற்று கொடுக்கப்படுவதற்கு



நபி (ஸல்) அவர்கள் அளித்துள்ளார்கள். நல்லொழுக்கத்துடன் வளரும் குழந்தைகளால்தான் சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்பிட முடியும் என்று அவர்கள் எண்ணினார்கள்.

மனிதர்கள் தவறு இழைக்கக்கூடியவர்களாக இருக்கிறார்கள். அதிலும் குழந்தைகள் தவறு செய்பவர்கள்தான். அதற்காக அவர்களை அடிப்பதும், திட்டுவதும், அதன்மூலம் அவர்களை திருத்திவிடலாம் என்று நினைப்பதும் தவறானதாகும்.

பிள்ளைகளின் வளர்ப்பில் கூடுதல் அக்கறையும், பொறுமையான அறிவுறுத்தலுமே குழந்தைகளுக்கு போதுமானது.

ஒருவரின் தவறை அழகிய முறையில் சுட்டிக்காட்டுவதற்கும், திருத்துவதற்கும் நபி(ஸல்) அவர்கள் பல அணுகுமுறைகளை கடைப்பிடித்திருக்கிறார்கள்.ஒருமுறை பிலால் (ரழி) அவர்கள் 'பாங்கு' (தொழுகைக்கான அழைப்பு) சொல்லும்போது அபுமஸ்தூரா என்பவர் அதை கிண்டல் செய்கிறார். இச்செய்தி நபி (ஸல்) அவர்களை எட்டியுள்ளது. அதற்காக நபிகளார் கோபப்பட்டு அவரை அழைத்து கண்டிக்கவில்லை. மாறாக அபுமஸ்தூரை அழைத்த நபிகளார், 'உனது குரல் அழகாக இருக்குமாமே. எங்கே நான் உனக்கு பாங்கு சொல்ல கற்றுத்தரட்டுமா?' என்று கேட்டார்கள். அதோடு, அவருக்கு மக்கள் முன்னிலையில் பாங்கு எவ்வாறு சொல்ல வேண்டும் என்று கற்றுக்கொடுத்தார்கள். பின்னர், அவரின் நெஞ்சிலும், முன்நெற்றியிலும் தடவினார்கள். 'இனி நீர்தான் மக்காவாசிகள் முஅத்தின்' என்று அறிவித்தார்கள். (நபிமொழி)

தனது தவறை உணர்ந்துகொண்ட அபுமஸ்தூரா அன்றுமுதல் அவருடைய 40 வயது வரை மக்காவின் முஅத்தினாக (பாங்கு சொல்பவராக) இருந்தார்கள்.

கிண்டல் செய்தவரிடமே அந்த பொறுப்பை கொடுத்தார்கள். இதுபோன்றதொரு அணுகுமுறையை குழந்தைகள் விஷயத்திலும் கடைப்பிடிக்கலாம். பிள்ளைகளை அனைத்து பெற்றோரும் நேசிப்பவர்கள்தாம். அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் அவர்களை வளர்ப்பதில் பலர் அக்கறையுடன் செயல்படுவதில்லை.

குழந்தைகள் விஷயத்தில் கூடுதல் அக்கறை காட்டிட வேண்டும். குழந்தைகள் நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும், நற்சிந்தனையுடையவர்களாகவும், இஸ்லாம் காட்டித்தந்த வழிமுறைகளின்படி வளர்க்க முற்படவேண்டும். அதுதான் சிறந்த சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கான முதற்படியாகும்.

**பிந்த் இஸ்மாயீல்**

# மரணத்துக்கு முன்னர்...

நமது சின்னச்சின்ன செயல்பாடுகள்கூட தூய்மையாக அமைந்துவிட்டால், மரணத்தைத் தாண்டியும் நாம் அடையாளப்படுத்தப்படுவோம். மரணத்திற்குப் பின்னரும் அவை நம்மைக் காப்பாற்றக்கூடும்.

ஒருவர் மரணமடைந்து விட்டால் உலகத்துடனான அவருடைய தொடர்புகள் துண்டிக்கப்பட்டு விடும் என்பது உண்மை. ஆயினும் அவர் விட்டுச்செல்லும் சுவடுகள், அவருடைய மறைவுக்குப் பின்னரும் உலகில் இருந்துகொண்டே இருக்கும். அவை நல்ல சுவடுகளாக இருக்கலாம், அல்லது தீயவையாக இருக்கலாம்.

எனவே, வாழும் காலத்திலேயே நல்ல அடையாளங்களை விட்டுச்செல்லும் வண்ணம் வாழ்வை அமைத்துக்கொள்ளல் வேண்டும்.

அனைத்துச்செயல்களையும் இறைவன் பதிவு செய்துகொண்டே இருக்கின்றான் என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆயினும் நாம் விட்டுச் செல்லும் சுவடுகளைக்கூட இம்மி பிசகாமல் பதிவு செய்கிறான் என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இறைவன் கூறுகின்றான், 'திண்ணமாக, நாமே மரணமடைந்தவர்களை ஒரு நாள் உயிர்ப்பிப்போம். அவர்கள் செய்தவற்றையும் நாம் குறித்துக்கொண்டே இருக்கின்றோம். அவர்கள் விட்டுச்சென்ற சுவடுகளையும் பதிவு செய்து கொண்டிருக்கின்றோம். மேலும், நாம் ஒவ்வொன்றையும் ஒரு தெளிவான பதிவேட்டில் கணக்கிட்டுக் குறித்து வைத்துள்ளோம்'. (அல் குர்ஆன் 36:12)

இறைவனின் மன்னிப்பையும், மறுமை வெற்றியையும் பெறுவதற்கு சிலபோது நாம் விட்டுச்செல்லும் நல்ல சுவடுகள்கூட நமக்கு துணை நிற்கலாம். நாம் இந்த உலகை விட்டு சென்ற பின்னர் நமது தர்மத்தை உண்டவர் நமது இழப்பை உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் விட்டுச்செல்லும் சுவடுகள் இப்படித்தான் இருக்க வேண்டும்.

நாம் இந்த உலகைவிட்டு சென்றபின்னர், நமது வார்த்தைகளால் ஆறுதல் அடைந்தவர் நமது இழப்பை உணர்ந்துகொள்ள வேண்டும். 'நம்மை போன்று ஆறுதல் வார்த்தைகள் கூற யாரும் இல்லையே' என்று அவர் ஆதங்கப்பட வேண்டும். நாம் இந்த உலகைவிட்டு சென்றபின்னர், நம்மால் நல்வழி பெற்றவர் நமது இழப்பை உணர்ந்துகொள்ள வேண்டும். நாம் இந்த உலகை விட்டுச் சென்றபின்னர், நமது நல்ல நடத்தையால் கவரப்பட்டவர்கள் நமது இழப்பை உணர்ந்து கொள்ள வேண்டும்.

நாம் விட்டுச்செல்லும் சுவடுகள் இப்படித்தான் இருக்க வேண்டும். இந்த சுவடுகள்தான் நமது இறைவனை, மன்னிக்கும் இறைவனாக நமக்குப் பெற்றுத்தரும். ஆயினும், நம்மில் பெரும்பாலானோர் விட்டுச்செல்லும் அடையாளங்கள் எப்படி இருக்கின்றன?

அரண்மனை போன்ற வீடு, வசதிமிக்க வாகனம், பேர் சொல்லும் பிள்ளை, குடும்பத்தினர் சிரமம் இன்றி உண்டு கழித்து மகிழ்ந்திருக்க திரண்ட செல்வம். இதைத்தானே அனேகமானவர்கள் விட்டுச் செல்கின்றார்கள். இந்த அடையாளங்களும், சுவடுகளும் நமக்கான மறுமை வெற்றியைப் பெற்றுத்தருமா? ஒருபோதும் இல்லை. மாறாக மறுமை வெற்றியை சிலபோது இவை கேள்விக்குறியாக மாற்றிவிடக்கூடும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: 'மனிதன் மரணித்துவிட்டால் மூன்றே மூன்று விஷயங்களைத் தவிர அவனது அனைத்துச் செயல்களும் துண்டிக்கப்பட்டுவிடும். அவைகளாவன, நிலையான தர்மம், பயனுள்ள கல்வி, அவனுக்காக பிரார்த்தனை செய்யும் நல்ல பிள்ளை'. (ஆதாரம்: முஸ்லிம், திர்மிதி) இவைதான் உண்மையான சுவடுகள். இதுபோன்ற சுவடுகள்தான் மன்னிக்கும் இறைவனை மறுமையில் பெற்றுத்தரும்.

அபூபக்கர் (ரழி) அவர்கள் பார்வையற்ற மூதாட்டி ஒருவரைப் பராமரிக்கும் பொறுப்பை ஏற்றிருந்தார். அபூபக்கர் (ரழி) அவர்கள் மரணித்த பிற்பாடு, அந்த மூதாட்டியைப் பராமரிக்கும் பொறுப்பை உமர் (ரழி) ஏற்றுக்கொண்டார். ஒருநாள் அந்த மூதாட்டியைச் சந்திக்கச் செல்கின்றார் உமர் (ரழி) அவர்கள். உமர் (ரழி) அவர்களிடம் அந்த மூதாட்டி கேட்டார், 'உமது நண்பர் மரணித்துவிட்டாரா?' உமர் (ரழி) சற்று நேரம் திகைத்துவிட்டார். காரணம் அபூபக்கர் (ரழி) அவர்கள் மரணித்த செய்தி அந்த மூதாட்டிக்குத் தெரிய வாய்ப்பு குறைவு. அந்த மூதாட்டியிடம் கேட்டார்கள், 'உங்களுக்கு எப்படி அது தெரியும்?' மூதாட்டி, 'உமது நண்பர், பேரீத்தம் பழங்களை எனக்கு உண்ணத் தரும்போது அதன் விதைகளை அகற்றிவிட்டுத்தான் எனக்குத் தருவார். ஆனால் நீர் விதைகளுடன் தருகின்றீரே'. உமர் (ரழி) அவர்களால் அழுகையைக் கட்டுப்படுத்த இயலவில்லை.

அலி (ரழி) அவர்களின் பேரர் ஜஅபர் (ரழி) அவர்கள், கோதுமையையும் உணவுகளையும் கோணிப்பையில் அடைத்து, மதீனாவில் வசிக்கும் ஏழைகளின் வீட்டுவாசல்களில் அதிகாலைப் புலர்வதற்கும் முன்னரே ஒவ்வொரு நாளும் வைப்பார்கள். யார் இந்த உணவை வைக்கின்றார்கள் என்று எவ்வளவுதான் முயன்றும் எவராலும் கண்டுபிடிக்க இயலவில்லை. ஒருநாள் ஜஅபர் (ரழி) மரணமடைகின்றார். அன்றைய தினத்தின் அதிகாலையில் ஏழைகளின் வீட்டு வாசல்களில் உணவுப் பொட்டலங்கள் எதுவும் வைக்கப்படவில்லை.

அவரது உடலைக் குளிப்பாட்டும்போது இடது தோளில் ஒரு வடு இருப்பதை மக்கள் கவனிக்கின்றார்கள். ஆம்... நாளெல்லாம் ஏழைகளுக்காக உணவுகளை சுமந்த வடுதான் அது. இக்கட்டான சந்தர்ப்பங்களில் உதவியவர்களை மனிதர்கள் ஒருபோதும் மறப்பதில்லை. அடுத்தவர்களை மகிழ்விப்பதற்கும், அவர்களிடம் தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் பெரும் பெரும் தியாகங்களைச் செய்ய வேண்டும் என்பதல்ல.

மாறாக, நமது சின்னச்சின்ன செயல்பாடுகள் கூட தூய்மையாக அமைந்துவிட்டால், மரணத்தைத் தாண்டியும் நாம் அடையாளப்படுத்தப்படுவோம். மரணத்திற்குப் பின்னரும் அவை நம்மைக் காப்பாற்றக்கூடும்.

இவ்வுலகில் சிலர் விட்டுச்செல்லும் அடையாளங்கள், காற்றில் கரைந்து காற்றோடு காற்றாக மறைந்துவிடுகிறது. இன்னும் சிலர் விட்டுச்செல்லும் அடையாளங்களோ பசுமரத்தாணி போன்று மனித மனங்களில் அப்படியே பதிந்துவிடுகிறது. எனவே நாம் விட்டுச்செல்லும் சுவடுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதை இப்போதே தீர்மானிக்க வேண்டிய நேரம் இதுதான்.

**இப்னு அம்மார்**



# புலமைக் கதிர்

தரம்–5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
உதவி அதிபர், கொ/ புனித அன்னம்மாள் மகளிர் மகாவித்தியாலயம், கொழும்பு 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம்

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**
**சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01.  வெற்றிடத்திற்கு வரவேண்டிய உரு
i.  ii.  iii. 

02. 
i.  ii.  iii. 

03. ஒரு விழாவொன்றில் கலந்து கொண்ட 15 ஆசிரியர்கள் ஒருவரோடு ஒருவர் கைகுலுக்கிக் கொண்டனர். எனவே மொத்தமாக எத்தனை கை குலுக்கல்கள் இடம்பெற்றிருக்கும்?
i. 105 கை குலுக்கல்கள் ii. 100 கை குலுக்கல்கள் iii. 98 கை குலுக்கல்கள்

04. கடிகாரமுகமொன்றிலே மணி முள்ளானது காலை 5 மணியிலிருந்து காலை 7 மணிவரை பயணிக்கின்ற பொழுது அக்கடிகார முகத்திலுள்ள நிமிடமுள்ளானது கடிகார முகத்தை எத்தனை தடவை சுற்றிவரும்?
i. ஒரு முறை ii. இரண்டு முறை iii. பல முறை

05. 569, 458, 347, ………….. அடுத்துவரும் எண்?
i. 548 ii. 446 iii. 236

06. மாதமொன்றின் முதலாம் திகதி புதன்கிழமை எனில் அம்மாதத்தின் 30ம் திகதி என்ன கிழமை?
i. வியாழன் ii. வெள்ளி iii. சனி

07. சம இடைவெளிகளில் நடப்பட்ட இரண்டு தூண்களுக்கு இடைப்பட்ட தூரம் 60m எனில் நான்கு தூண்களுக்கு இடைப்பட்ட தூரம் எவ்வளவு?
i. 120m ii. 180 m iii. 240 m

08. இருபதாவது இரட்டை எண் எது?
i. 20 ii. 40 iii. 50

09. 36 உடன் நான்கை கூட்டி நான்கால் வகுத்தால் பெறப்படும் எண்ணை உரோமன் இலக்கத்தில் தருக.
i. X ii. XII iii. XX

10. 
= **10**
= **16**
= **15** எனில்  ன் பெறுமதியானது
i. 10 ii. 12 iii. 13

11.  இவ்வுருவை விட  இவ்வுருவில் எத்தனை சமச்சீர் அச்சுக்கள் அதிகமாக உள்ளது?
i. 1 ii. 2 iii. 3

12. வயதிற்கு ஏற்ப சரியான வரிசையில் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடையானது
i. நான், அக்கா, தம்பி, அப்பா, தாத்தா
ii. தம்பி, அக்கா, நான், அப்பா, தாத்தா
iii. தம்பி, நான், அக்கா, அப்பா, தாத்தா

13. பின்வருவனவற்றுள் எப்போதாவது நிகழக் கூடிய ஒன்று
i. இரவு வேளையில் வானவில் தோன்றுதல்
ii. இரவு வானில் வால்வெள்ளி தோன்றுதல்
iii. கிழக்கு வானில் சூரியன் உதித்தல்

14. ஒரு சாக்குப் பையிலிருந்து 750g நிறையுடைய 7 பெக்கற் சீனி வெளியே எடுக்கப்பட்டது. எடுக்கப்பட்ட சீனியின் மொத்த நிறை யாது?
i. 5kg 250g ii. 5kg 500g iii. 5kg 750g

| 7 | ம | க | N | 9 | ப | டி | 8 | M | ம் | 5 | வ | த |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|

**மேலேயுள்ள கட்டத்திற்குள் இருக்கும் இலக்கங்களையும் எழுத்துக்களையும் அவதானித்து கீழே கேட்கப்பட்டுள்ள 15ம், 16ம், 17ம் வினாக்களுக்கு விடையளிக்குக.**

15. இவ்வரிசையிலுள்ள மூன்றாவது ஒற்றை எண் எது?
i. 9 ii. 5 iii.7

16. முகம்பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது எவ்வித மாற்றத்தையும் காட்டாத எழுத்துக்களை மேலுள்ள பெட்டியிலிருந்து தெரிக.
i. WM ii. MO iii. MU

17. பெட்டியிலுள்ள தமிழ் எழுத்துக்களைக் கொண்டு ஆக்கக்கூடிய சொல்லானது
i. படகு ii. மகன் iii. கடிதம்

18. ½ *l* பால் நான்கு மாணவர்களுக்கு சமமாக பகிர்ந்தளிக்கப்பட்டால் ஒரு மாணவனுக்கு கிடைக்கும் பாலின் அளவு யாது?
i. 125 ml ii. 100 ml iii. 105 ml

19. 
இவ்வடிவங்களைக் கொண்டு ஆக்கக்கூடிய திண்ம உருவானது
i. சதுரமுகி ii. கனவுரு iii. நான்முகி

20. ஒரு பேனாவின் விலை ரூ. 10.50 எனில் ஆறு பேனாக்களின் விலை என்ன?
i. ரூபாய் 63.00 ii. ரூபாய் 65.00 iii. ரூபாய் 62.50 சதம்

21. 

இடைவெளிக்கு பொருத்தமான எண் எது?
i. 15 ii. 16 iii. 17

22. டிவோனுக்கு சிவப்பு தவிர்ந்த எல்லா நிறங்களும் பிடிக்கும். டேவினுக்கு மஞ்சள் தவிர்ந்த எல்லா நிறங்களும் பிடிக்கும். நிம்ரோத்துக்கு நீலம் தவிர்ந்த எல்லா நிறங்களும் பிடிக்கும் எனில் மூவருக்கும் பிடித்த நிறம் எது?
i. மஞ்சள் ii. பச்சை iii. நீலம்

23. கம்பி வளையம் ஒன்றினை பத்து சம பகுதிகளாக வெட்ட வேண்டுமாயின் அதனை எத்தனை தடவை வெட்ட வேண்டும்?
i. 9 தடவைகள் ii. 10 தடவைகள் iii. 11 தடவைகள்

24. வேம்பு ⇒ புகை ⇒ கைது ⇒ தும்பி ⇒ ? அடுத்து வர வேண்டியது
i. பூச்சி ii. துணி iii. பிள்ளை

25. அம்சனிடம் உள்ள பணத்தின் மூன்று மடங்குடன் ரூ. 12 ஐக் கூட்டினால் யஸ்வினிடம் உள்ள பணத்தொகை ரூபாய் 42.00 க்கு சமனாகும் எனவே அம்சனிடம் உள்ள பணம் எவ்வளவு?
i. ரூ. 10.00 ii. ரூ. 12.00 iii. ரூ. 15.00

26. அசானுக்கு வயது 15 ஆக இருக்கும் போது அவனது அப்பாவின் வயது 42 ஆகும். அவனது அப்பாவின் வயது 48 ஆக இருக்கும் போது அசானுக்கு எத்தனை வயதாக இருக்கும்?
i. 18 ii. 21 iii. 22

27. பண்ணை ஒன்றில் உள்ள கோழிகளினதும் பசுக்களினதும் மொத்த எண்ணிக்கை 14 ஆகும். அவற்றின் கால்களின் எண்ணிக்கை 46 எனில் பண்ணையிலுள்ள கோழிகளின் எண்ணிக்கை யாது?
i. 4 ii. 5 iii. 6

28. ஒரு தாங்கியில் 17*l* 650 ml நீர் இருந்தது. அதிலிருந்து 12*l* 750 ml அளவு நீர் வெளியேறியது. எஞ்சியிருந்த நீரின் அளவு யாது?
i. 4*l* 900ml ii. 4*l* 750 ml iii. 4*l* 500 ml

29. அக்கா 750g நிறையுள்ள ஒரு பூசணிக்காயை 3 துண்டுகளாக வெட்டினாள். அவற்றில் இரண்டு துண்டுகளின் நிறை முறையே 250g, 300g ஆகும். எனவே எஞ்சிய துண்டின் நிறை என்ன?
i. 300g ii. 250g iii. 200g

30.   
A B C
மேலேயுள்ள உருக்களில் முகங்களும் விளிம்புகளும் சமமாகவுள்ள உரு எது?
i. A ii. B iii. C

31. 
| 20 ……. |
|---|
| ……. 70 |

பெட்டியிலுள்ள இரு வெற்றிடங்களுக்கும் வரவேண்டிய இரு எண்களில் ஒன்று மற்றொன்றின் 5 மடங்காகும். பெட்டியினுள் உள்ள நான்கு எண்களின் கூட்டுத்தொகை 150 ஆகும். எனவே வெற்றிடங்களுக்கு வரவேண்டிய எண்கள்
i. 20, 100 ii. 12, 60 iii. 10, 50

32. நிழற்றப்படாத பகுதியின் பரப்பரளவு நிழற்றப்பட்ட பகுதியின் பரப்பளவில் எத்தனை மடங்காகும்?
i. 3 மடங்கு
ii. 4 மடங்கு
iii. 5 மடங்கு



33.  ஐந்து ஒரேயளவு சதுரங்களைக் கொண்டு ஆக்கப்பட்ட இவ்வுருவிலுள்ள செவ்வகங்களின் எண்ணிக்கை யாது?
i. 5
ii. 6
iii. 7

34. கீழே கொடுக்கப்பட்ட எண்களில் எவற்றைக் கூட்டும் போது 2000 விடையாகப் பெறப்படும்?
i. 500 + 100 + 150 + 250 + 400
ii. 500 + 250 + 250 + 600 + 400
iii. 500 + 250 + 350 + 600 + 400

35. மாம்பழம், கொய்யாப்பழம், திராட்சைப் பழம், பலாப்பழம், தோடம்பழம் இவற்றுள் குறிப்பிட்ட ஒரு தன்மையின் அடிப்படையில் வேறுபட்ட பழவகை எது?
i. திராட்சைப் பழம் ii. கொய்யாப் பழம் iii. தோடம்பழம்

36. அபி கடைக்குச் சென்று ரூபாய் 375.00 கொடுத்து 750g சீனி வாங்கினான். அவன் 1kg சீனி வாங்க வேண்டுமானால் இன்னும் அவனுக்கு எவ்வளவு பணம் தேவை?
i. ரூ 250.00 ii. ரூ. 150.00 iii. ரூ. 125.00

37. 72, 66, 64, 60, 58, 54 இவ்வெண்கோலத்தில் எந்த இரண்டு எண்களை நீக்கினால் முறையான எண் கோலம் தோன்றும்
i. 66, 60 ii. 64, 58 iii. 64, 54

38. கவிதா மேற்கு வானிலே வானவில்லை பார்த்ததாக கூறுகிறாள். எனவே அது ஒரு நாளின் எவ்வேளையாகும்?
i. காலை ii. நண்பகல் iii. மாலை

39. ஜோயல் தன்னிடமிருந்த இனிப்புக்களில் 2/5 பங்கை தனது தங்கைக்கு கொடுத்தான். அவனிடம் தற்போது மிகுதியாக 21 இனிப்புக்கள் இருக்கின்றன எனில் அவன் தங்கைக்கு கொடுத்த இனிப்புக்கள் எத்தனை?
i. 8 ii. 10 iii. 14

40. ஒரு புத்தகத்தின் விலை ரூபாய். 630.00 அதுபோல் மூன்று புத்தகங்கள் வாங்கி ரூபாய் 5000.00 கடைக்காரரிடம் கொடுத்தால் மிகுதியாக கிடைக்கும் பணத்தொகை எவ்வளவு?
i. ரூ. 3210.00 ii. ரூ. 3110.00 iii. ரூ. 3010.00

# நகர்வலம்



# தோல்வி கண்ட தரப்புடன் மீண்டும் இணைய விரும்பவில்லை

## புதிய கட்சியால் மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவோம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

மக்கள் மத்தியில் தோல்வி கண்ட தரப்புடன் மீண்டும் இணைய விரும்பவில்லை என்றும் மலையகத்தின் மாற்றத்தை சீரழிந்த கட்சியின் மூலம் நிறைவேற்ற முடியாது என்றும் முன்னாள் இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ் தெரிவித்தார்.

ஊழலற்ற புதிய கட்சியாக ஐக்கிய ஜனநாயகக் குரல் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் அதன்மூலம் மலையகத்தில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய ஜனநாயகக் குரல் கட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெற்றது. இங்கு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.



இங்கு தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

மலையக சமூகத்தை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது. எந்த கட்சி அல்லது சின்னமானாலும் அந்த மக்களின் முன்னேற்றத்திற்காக நாம் அர்ப்பணிப்புடன் உழைப்போம்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மலையகத்தில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தபோதும் மலையக மக்கள் அவரை நிராகரித்து விட்டனர். மக்கள் தீர்ப்பு மிக முக்கியமானது. அதனால் தோல்வி கண்ட தரப்புடன் மீண்டும் இணைவதற்கு நான் விரும்பவில்லை.

மலையக தோட்டத் தொழிலாளர்கள் நாட்டின் 11 மாவட்டங்களில் வாழ்கின்றனர். பழமையான கட்சிகளில் அவர்கள் நம்பிக்கை இழந்து விட்டனர். அந்த மக்களின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதற்கு எமது புதிய கட்சி நடவடிக்கை எடுக்கும்.

'ஐக்கிய ஜனநாயகக் குரல்' எமது குரலாக அன்றி மக்களின் குரலாக எப்போதும் ஒலிக்கும். இந்த கட்சி தமிழ்,சிங்களம், முஸ்லிம் என அனைத்து இன மதங்களையும் சேர்த்தவர்களை ஒன்றிணைத்து உருவாக்கப்பட்டுள்ளது.

நாம் நம் நாட்டு மக்கள் அனைவருக்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம். ஊழலற்ற அரசியல், புதிய பாதையில் இந்த புதிய கட்சி பயணிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.



இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர் ஸ்தானிகர் போல் ஸ்டீவன்ஸன் மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூஸுபை நேற்று (10) வியாழக்கிழமை ஸ்ரீஜயவர்தனபுர பத்தரமுல்லவில் அமைந்துள்ள ஆளுநர் பணிமனையில் சந்தித்து மேல்மாகாண அபிவிருத்தி தொடர்பான சினேகபூர்வ பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டபின் எடுத்த படம். **(படம் பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**



வடமேல் மாகாணத்திற்கு புதிதாக நியமிக்கப்பட்டுள்ள வடமேல் மாகாண ஆளுநர் திஸ்ஸ வர்ணசூரிய குருநாகல் ஜும்ஆ பெரிய பள்ளிவாசலுக்கு விஜயம் மேற்கொண்ட போது பள்ளிவாசலின் மௌலவி ரிஸ்வி மற்றும் உள்ளிட்ட சமய தலைவர்களைச் சந்தித்து கலந்துரையாடினார். இதன் போது குருநாகல் மாவட்ட செயலகத்தின் பௌத்த பிரிவின் ராகம சுகானந்த தேரர் மற்றும் வடமேல் மாகாண செயலாளர் இந்திக இலங்ககோன் ஆகியோர் கலந்து கொண்டதைப் படத்தில் காணலாம். **மாவத்தகம தினகரன் நிருபர்**

# காலி, கோட்டை இப்ராஹீமிய்யாவில் மீலாதுன் நபிவிழா நிகழ்வுகள்

**பேருவளை விசேட நிருபர்**

இறைத்தூதர் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினத்தையொட்டி காலி கோட்டை இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரியில் மாபெரும் மீலாதுன் நபிவிழா கலாபீட மண்டபத்தில் (6) நடைபெற்றது.

கலாபீட நிர்வாக சபைத் தலைவர் எம்.நுஸ்கி முஹம்மத் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஷாதுலிய்யாத் தரீக்காவின் கலீபத்துல் குலபா காலி அலிய்யா இஸ்லாமிய சட்டக் கல்லூரி பணிப்பாளர் அல்உஸ்தாத் மௌலவி எம். இஸட். முஹம்மத் ஸுஹூர் (பாரி) பிரதம அதிதியாகவும் மாத்தறை மின்னத்துல் பாஸிய்யா அரபுக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் ரயீஸுல் முகத்தம் மௌலவி அஸ்ஸெய்யித் பஸ்மின் மௌலானா (முர்ஸி) விசேட பேச்சாளராகவும் கலந்து கொண்டார்.

கலாபீட பணிப்பாளரும் கொழும்பு அஜ்வாத் அல்பாஸி அரபுக் கல்லூரி விரிவுரையாளருமான ரயீஸுல் முகத்தம் மௌலவி எம்.எப்.எம்.பாஸில் (பஹ்ஜி) அதிபர் கலீபதுஷ் ஷாதுலி மௌலவி முகம்மத் ரஸூக் (பஹ்ஜி) ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் கல்லூரி



மாணவர்களிடையே தமிழ்,சிங்களம்,ஆங்கிலம் மற்றும் அரபு மொழிகளில் பேச்சுப்போட்டி கஸீதா உட்பட பல்வேறு போட்டிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு இதன்போது பரிசில்களும் வழங்கப்பட்டன. பிரதம பேச்சாளர் மௌலவி அஸ்ஸெய்யித் பஸ்மின் மௌலானா (முர்ஸி) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் முன்மாதிரி மிகு வாழ்க்கை பற்றி விசேட உரையாற்றினார்.

# களுத்துறை மாவட்டத்தில் தே.ம.சக்தி எட்டு உறுப்பினர்களை வெற்றிகொள்ளும்

## மாவட்ட தலைமை வேட்பாளர் டாக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ

**பாணந்துறை மத்திய குறூப் நிருபர்**

நாட்டின் தேர்தல் வரலாற்றில் முதல் தடவையாக களுத்துறை மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள பதினொரு பாராளுமன்ற உறுப்பினர்களில் எட்டு உறுப்பினர்களை தேசிய மக்கள் சக்தி வெற்றி கொள்ளுமென்றும் மாவட்டத்தில் எழுபது வீதமான மக்கள் ஆசிர்வாதத்தையும் எமது அணி பெற்றுக்கொள்ளும் என்றும் தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்டத்துக்கான தலைமை வேட்பாளர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.



தேசிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்டத்துக்கான வேட்பாளர் பத்திரத்தில் கையொப்பமிடும் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் பலமான அரசாங்கம் அமைக்கப்படும். தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற தேர்தலில் பலமான, உறுதியான வெற்றியைப் பெறுவது உறுதியானது. இன்று ரணில் ஒரு புறம். சஜித் ஒரு புறம். பொதுஜன பெரமுன சின்னாபின்னமாகியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

களுத்துறை மாவட்டத்துக்கான பதினொரு பேர் பாராளுமன்ற உறுப்பினர் தெரிவுக்கான வேட்பாளர் பட்டியலில் பதினான்கு வேட்பாளர்கள் இடம்பெறுகின்றனர். முஸ்லிம்கள் சார்பில் அரூஸ் அசாத் இம்முறை தேர்தலில் போட்டியிடுகிறார். தேசிய மக்கள் சக்தியின் செயலாளர் விஷேட வைத்திய நிபுணர் நிஹால் அபேசிங்க உள்ளிட்ட பிரமுகர்களும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# பேருவளை சிறுவனின் சத்திர சிகிச்சைக்கு ஜேர்மன் பரோபகாரிகள் நிதியுதவி

**அஜ்வாத் பாஸி**

பேருவளை, மருதானை வத்திமிராஜபுரையில் வசித்து வரும் மொஹமட் ஆதிப் என்பவரின் மகனான ஆலிப் மொஹமட் என்ற சிறுவனின் கை விரல்கள் சீரின்மையால், கை விரல்களை சத்திர சிகிச்சை மூலம் சீரமைக்கப்பட வேண்டுமென மருத்துவ நிபுணர்கள் சிபாரிசு செய்துள்ளனர்.

இச்சத்திர சிகிச்சையை இந்தியாவில் மேற்கொள்ள வேண்டுமெனவும் அதற்கு அதிக செலவு ஏற்படும் எனவும் குறித்த வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். இத்தகைய அதிக செலவை இச்சிகிச்சைக்காக செலவிடக்கூடிய நிலையில் குறித்த சிறுவரின் பெற்றோரது பொருளாதார நிலை காணப்படுவது குறித்து பேருவளை சீனன் கோட்டையைச் சேர்ந்த சமூக சேவையாளரும் ஜேர்மன் கிங்ஸின் கிரேஸ் மாநில முன்னாள் முதலமைச்சரின் இணைப்பாளருமான இர்ஸான் மொஹமட் ஜேர்மனைச் சேர்ந்த பரோபகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார். அதற்கமைய ஜேர்மனியைச் சேர்ந்த பேராசிரியர் *Dr. Alexander Pocsay and Mrs. Inge Pocsay (City of St. Ingbert, Germany)* ஆகியோர் குறித்த சிறுவனின் சிகிச்சைக்கு உதவ முன்வந்துள்ளனர். அந்த வகையில் இச்சிகிச்சையை இந்தியாவில் மேற்கொள்ளவென இம்முறை சுமார் 12 இலட்சத்து 35,590 ரூபாவை இணைப்பாளர் இர்ஸான் மொஹமட் ஊடாகக் குறித்த சிறுவனின் பெற்றோரிடம் கையளித்துள்ளனர்.



அதேவேளை இச்சிறுவனின் ஆரம்ப பரிசோதனை நடவடிக்கைகளுக்காக ஜேர்மனியைச் சேர்ந்த பரோபகாரிகள் இதற்கு முன்னரும் உதவியுள்ளனர். இதனை நன்றியுணர்வுடன் நினைவு கூர்ந்த இச்சிறுவனது பெற்றோர், அவர்களது நன்றிகளையும் இர்ஸான் மொஹமட்டுக்கு தெரிவித்துக் கொண்டனர்.



மாவனல்லை பதுரியா மத்தியக் கல்லூரியின் ஆசிரியர் தின நிகழ்வுகள் அக் கல்லூரியின் மாணவ தலைவர்களினதும் புதிய ஆசிரியர்களினதும் பங்களிப்போடு, கல்லூரி கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. பல்சுவை நிகழ்ச்சிகள் நடைப்பெற்ற இந்த நிகழ்வில் பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்களால் ஆசிரியர்களுக்கான ஓய்வறையும், ஓய்வறைக்கான தளபாடங்கள் கையளிக்கும் நிகழ்வும் பழைய மாணவியர் சங்க உறுப்பினர்களால் உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது.



2024 பாராளுமன்ற தேர்தலில் அனுராதபுரம் மாவட்டத்தில் போட்டியிடுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தியில் போட்டியிடும் வேட்பாளர்கள் நேற்று (10) வேட்புமனுத் தாக்கல் செய்வதற்கு அநுராதபுரம் மாவட்ட செயலகத்திற்கு வருகை தந்தபோது பிடித்த படம். **(படம்:அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)**

# மின்சாரம் தாக்கி குடும்பஸ்தர் பலி

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

ஹொரவப்பொத்தானை கல்கந்தேவ பகுதியில் மின்சாரம் தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் (10) தெரிவித்தனர்.

ஹொரவப்பொத்தானை கல்கந்தேவ பகுதியைச் சேர்ந்த 43 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வீட்டின் பின்புறத்தில் உள்ள காணி ஒன்றில் சட்டவிரோதமாகப் பொருத்தப்பட்டிருந்த மின் கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் தேசிய மக்கள் சக்தி வேட்பாளர்கள்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

ஹம்பாந்தோட்டை மாவட்டத்தில் இம்முறை பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி சார்பில் பலர் போட்டியிடுகின்றனர்.

ஹம்பாந்தோட்டை மாவட்ட தே.ம.ச அணியின் தலைவராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஹால் கலப்பத்தி, அதுலவெலதகொட, அரவிந்த செனரத், ருவன் செனரத், ஓய்வுபெற்ற அதிபர் லதா கருணாரத்ன, பொருளியலாளர் ஏ. ஐ. மொஹமட் இஸ்தியாக், டொக்டர் சாலிய சதருவன் மதரசிங்க, பொருளியல் வளவாளர் துசார வெதஆரச்சி, தொழில் அதிபர் கமல் துஸார மற்றும் பிரதி விவசாயப் பணிப்பாளர் விக்கிரம முதலிகே குணதாஸ ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

# புத்தளத்தில் சர்வதேச தபால் தின நிகழ்வுகள்

**புத்தளம் தினகரன் நிருபர்**

உலக தபால் தினத்தை முன்னிட்டு, புத்தளம் பிரதான தபால் அலுவலகத்தில் விசேட நிகழ்வுகள் புதன்கிழமை (09) காலை இடம்பெற்றன.

தபால் நிலையத்தின் பிரதான தபால் அதிபர் பௌசுல் அமீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அலுவலக உயர் அதிகாரி




குணரத்ன, சிற்றூழியர்களுக்கான பொறுப்பதிகாரி நகீப் மற்றும் அங்கு கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், தபால் சேவககர்கள் கலந்து சிறப்பித்தனர். இவ்வைபவத்தில், தபால் சேவையில் கடமையாற்றி மரணித்த மற்றும் கடமையாற்றும் உறவுகளின் விதவைத் தாய்மார்களுக்கு, உலர் உணவு பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# மாத்தறை மாவட்டத்தில் பல கட்சிகள் வேட்புமனு தாக்கல்

**வெலிகம தினகரன் நிருபர்**

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிட மாத்தறை மாவட்டத்தில் இதுவரை இரண்டு கட்சிகள் வேட்புமனு தாக்கல் செய்துள்ளதோடு, 8 சுயேச்சைக் குழுக்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளதாக மாத்தறை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும், மாத்தறை மாவட்ட செயலாளருமான கனேஷ் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தறை மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி கனேஷ் அமரசிங்க தலைமையில் மாத்தறை மாவட்ட செயலக பிரதான மண்டபத்தில் வேட்புமனுக்கள் ஏற்றுக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இன்று (11) வெள்ளிக் கிழமை நண்பகல் 12 மணி வரை வேட்பு மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இன்று பல பிரதான கட்சிகள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்யுமென எதிர்பார்க்கப்படுகின்றன.

# கிழக்கின் குரல்



# கிழக்கு மாகாணத்தில் 67 பேருக்கு எய்ட்ஸ் நோய் தொற்று

## கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை

**(மட்டக்களப்பு சுழற்சி நிருபர்)**



கிழக்கு மாகாணத்தில் 67 பேருக்கு எய்ட்ஸ் நோய் தொற்று ஏற்பட்டுள்ளதை சுகாதார அமைச்சு அடையாளம் கண்டுள்ளதால் இந்நோயை தடுப்பதற்கு தீவிர நடவடிக்கை எடுக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர்ஜெயந்தலால் ரத்ன சேகர பணித்துள்ளார்.

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களிலேயே இந்நோய் தொற்று உள்ளது. திருகோணமலையில் 26 பேருக்கும் அம்பாறையில் 25 பேருக்கும் மட்டக்களப்பில் 16 பேருக்கும் எய்ட்ஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக சுகாதார அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் கூறினார்.

மட்டக்களப்பு நகரில் எய்ட்ஸ் நோய் தடுப்பு தொடர்பான விசேட கருத்தரங்கு நேற்று நடைபெற்ற போதே அவர் இதனைக் கூறினார்.

இந்நிலையில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுடன் சுகாதார அமைச்சு இணைந்து கிழக்கு மாகாணத்தில் எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அவர் குறிப்பிட்டார். எய்ட்ஸ் நோயை கிழக்கு மாகாணத்தில் கட்டுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைக்கு சகல அரசாங்க திணைக்களங்களின் அதிகாரிகள், வைத்திய சேவையாளர்கள், சுகாதார சேவை திணைக்கள பணியாளர்கள் ஆகியோர் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும், அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் எய்ட்ஸ் நோயை கட்டுப்படுத்த சுகாதார திணைக்களத்துடன் ஏனைய அரசாங்க திணைக்களங்களினதும் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் இக்கருத்தரங்கில் தீர்மானிக்கப்பட்டதுடன், இந்நோயை கட்டுப்படுத்துவதில் காணப்படும் சவால்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது.

இக்கருத்தரங்கில் கிழக்கு மாகாணத்திலுள்ள வைத்திய அதிகாரிகள், எய்ட்ஸ் தடுப்பு சிகிச்சையுடன் தொடர்புடைய வைத்திய அதிகாரிகள், ஏனைய அரசாங்க திணைக்கள தலைவர்கள், தேசிய இளைஞர் மன்ற உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலர் பங்குபற்றினர்.

# நீண்ட வெப்பத்தின் பின்னர் மட்டக்களப்பில் கடும் மழை

**(மட்டக்களப்பு குறூப் நிருபர்)**



மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த பல மாதங்களாக நிலவிவந்த கடுமையான வெப்பநிலையை தொடர்ந்து நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை தொடக்கம் தொடர்ச்சியாக கடும் மழை பெய்து வருவதாக, அம்மாவட்ட வானிலை அவதான நிலையம் தெரிவித்தது.

மட்டக்களப்பில் கடும் மழை பெய்து வருவதால் கடுமையான வெப்ப தாக்கம் குறைவடைந்து, குளிர் காலநிலை நிலவி வருவதை உணர முடிகிறது.

இம்மழையால் மட்டக்களப்பின் தாழ்நில பிரதேசங்களில் வெள்ள நீர் தேங்கியுள்ளது.

மட்டக்களப்பில் தொடர்ந்து மழை பெய்வதற்கான சாத்தியக்கூறு உள்ளதாக, மட்டக்களப்பு மாவட்ட வானிலை அவதான நிலையம் எதிர்வு கூறியுள்ளது.

# மேய்ச்சலுக்கு சென்ற இரு மாடுகள் திருட்டு

**மூதூர் தினகரன் நிருபர்**

மூதூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சாபிநகர், வண்ணாங்குழி மற்றும் பொன்னவரந்திடல் உள்ளிட்ட கரையோர மேய்ச்சல் நிலங்களுக்கு மேய்ச்சலுக்காக சென்ற இரு மாடுகள் திருட்டு போயுள்ளதாக, அதன் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த ஒரு வாரத்துக்குள் இவ்விரு மாடுகளும் காணாமல் போயுள்ளன. மேய்ச்சலுக்கு சென்ற போதே இந்த அசம்பாவிதம் நேர்ந்துள்ளதாகவும் இம்மாடுகள் திருடப்பட்டுள்ளதாகவும், அவர்கள் கூறினர்.

அண்மைக்காலமாக பல்வேறு இடங்களிலும் மாடுகள் திருட்டு போகின்ற சம்பவங்கள் அதிகரித்து வருவதாக, கால்நடை வளர்ப்போர் குறிப்பிட்டனர்.

# பொதுத் தேர்தல் - 2024; வேட்புமனு தாக்கல்

## மட்டக்களப்பு மாவட்டம்

### தேசிய மக்கள் சக்தி



**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தேசிய மக்கள் சக்தி கட்சி நேற்று வியாழக்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தது.

தேசிய மக்கள் சக்தி கட்சியின் தலைமை வேட்பாளர் கந்தசாமி பிரபு தலைமையில் அக்கட்சி வேட்புமனு தாக்கல் செய்தது. கந்தசாமி பிரபு, முகம்மது புகாரி, முகம்மது பிர்தௌஸ், இளையதம்பி தயாங்கன், சூரியம் செல்லப்பெருமாள், வனிதா கிருஷ்ணபிள்ளை, திலகநாதன் ஜூனைட், றிகஸ் அகமட், ஸாஜித் முகம்மது, அப்துல் காதர் நியாசுதீன், கணேசன் திலிப்குமார் ஆகிய வேட்பாளர்களே தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

### தமிழ் மக்கள் விடுதலை புலிகள்

**(புதிய காத்தான்குடி தினகரன், மட்டக்களப்பு குறூப் நிருபர்கள்)**



எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி நேற்று வியாழக்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தது.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சித் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது. இந்நிலையில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சித் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தலைமை வேட்பாளராகவும், அக்கட்சியின் செயலாளர் பூ.பிரசாந்தன், என்.திருநாவுக்கரசு, அருண், எஸ்.சுரேஸ், கந்தையா கலைவாணி, லியோன் லோரன்ஸ், இ.கமல்ராஜ் மகேந்திரன் கணேஸ் ஆகியோர் மட்டக்களப்பு மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடுகின்றனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் இதுவரை மூன்று சுயேச்சை குழுக்களும் ஆறு அரசியல் கட்சிகளும் வேட்புமனு தாக்கல் செய்துள்ளன. மட்டக்களப்பு மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் மாவட்ட அரசாங்க அதிபருமான ஜஸ்டினா முரளிதரனிடம் வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டன.

### இலங்கை தமிழரசு கட்சி



**(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)**

பாராளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சி நேற்று வியாழக்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தலைமையிலான வேட்பாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தனர். இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான இராசமாணிக்கம் சாணக்கியன், ஞானமுத்து சிறிநேசன், கிருஷ்ணபிள்ளை சேயோன், தியாகராசா சரவணபவான், இளையதம்பி சிறிநாத், ஜெயந்தி ரவிச்சந்திரன், அருளம்பலம் கருணாகரன், சின்னத்துரை சர்வானந்தன் ஆகியோர் வேட்பாளர்களாக தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

## அம்பாறை மாவட்டம்

### இலங்கை தமிழரசு கட்சி

**(காரைதீவு குறூப் நிருபர்)**



பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்காக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அம்பாறை மாவட்ட வேட்பாளர்கள் நேற்று வியாழக்கிழமை அம்பாறை மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தனர்.

தலைமை வேட்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான தவராசா கலையரசன் தலைமையில் பத்து பேர் வேட்புமனுவில் கையொப்பமிட்டுள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், குபேந்திரராஜா ஜெகசூதன், கந்தசாமி இந்துனேஷ், அருள்ஞானமூர்த்தி நிதான்சன், பேரின்பநாயகம் ஜீவராஜ், பாக்கியம் மஞ்சுளா, ஜெயக்குமார் யசோதரன், கனகரத்தினம் ஜனார்த்தனன் ஆகியோரே கையொப்பமிட்டுள்ளனர்.

### தமிழ் தேசிய மக்கள் முன்னணி

**காரைதீவு குறூப் நிருபர்**



பாராளுமன்ற தேர்தலில் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி அகில இலங்கை தமிழ் காங்கிரஸின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடுவதற்காக நேற்று வியாழக்கிழமை வேட்புமனு தாக்கல் செய்தது.கட்சியின் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன் தலைமையில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் பணிமனையில் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டது.

மாவட்ட அமைப்பாளர் புஸ்பராஜ் துஷானந்தன், வேட்பாளர்களான இருதயநாதன் சிறிநாத் செல்வராஜா, தங்கவேல் தருமதாஸ், தங்கவேல் நீதிராஜா, தனுகாந் யோசப் யோகராஜினி செல்வத்தம்பி விக்னேஸ்வரன், கணேசபிள்ளை விமலஹாசன், தங்கேஸ்வரன் விஜிதா சக்கரப்பிள்ளை, பாலச்சந்திரன் வேட்புமனுவில் கையொப்பமிட்டுள்ளனர்.

### ஐ.ம.சக்தி வேட்பாளர் வேட்புமனுவில் கைச்சாத்து

**(காரைதீவு குறூப் நிருபர்)**



அம்பாறை மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தி கட்சி சார்பாக பிரபல சமூக செயற்பாட்டாளரான வெள்ளையன் வினோகாந்த் ஒரேயொரு தமிழ் வேட்பாளராக தெரிவாகி போட்டியிடுகிறார்.

இந்நிலையில் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலுக்கான வேட்புமனுவில் நேற்று முன்தினம் புதன்கிழமை அவர் கையொப்பமிட்டுள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள ஐக்கிய மக்கள் கூட்டணி அலுவலகத்தில் இந்த நடவடிக்கை நடைபெற்றது. ஐக்கிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் நேரடி சிபாரிசில் தமிழ் மக்களுக்கு அதிகளவில் சேவை செய்ய வேண்டுமென்ற நோக்குடன் அவர் வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார அதற்கான ஏற்பாட்டை செய்திருந்தார்.

## திருகோணமலை மாவட்டம்

### தேசிய மக்கள் சக்தி

**(திருகோணமலை தினகரன் நிருபர்)**



தேசிய மக்கள் சக்தி கட்சி சார்பாக பாராளுமன்ற தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடும் அக்கட்சி வேட்புமனுவை நேற்று வியாழக்கிழமை கையளித்தது.

திருகோணமலை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலகத்தில் தேசிய மக்கள் சக்தி கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் மாவட்ட பிரதான அமைப்பாளருமான அருண் ஹேமச்சந்திரா வேட்புமனுவை கையளித்தார்.

வேட்புமனுவை கையளித்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவித்த அருண் ஹேமச்சந்திரா, "நாம் நிச்சயமாக பாராளுமன்ற தேர்தலில் தேவையான பெரும்பான்மையை பெறுவோம். எனவே நாம் மக்கள் விரும்பும் அரசாங்கத்தை நிச்சயம் அமைப்போம்" என்றார்.

# வவுணதீவில் தலைமைத்துவ இளைஞர்களை உருவாக்கும் செயற்றிட்டம்

**(பெரியபோரதீவு தினகரன் நிருபர்)**

மட்டக்களப்பு, வவுணதீவு பிரதேச செயலக பிரிவில் திறமையும் ஈடுபாடும் கொண்ட தலைமைத்துவ இளைஞர்களை உருவாக்கும் செயற்றிட்டம் அமுல்படுத்தப்பட்டு வருவதாக, அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவனத்தின் இளைஞர் அபிவிருத்தி வலுவூட்டல் செயற்றிட்ட இணைப்பாளர் அனுலா அன்ரன் தெரிவித்தார்.

வவுணதீவு பரமேஸ்வரா வித்தியாலய மாணவர்களால் கடந்த செவ்வாய்க்கிழமையன்று இதற்கான ஆரம்ப நிகழ்வு ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன்போது பாடசாலை மாணவர்களால் சுயமாக ஆக்கபூர்வ புத்தாக்க நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பாடசாலை மட்டத்தில் தலைமைத்துவ பாங்கான தளத்தை உருவாக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இளைஞர்கள், யுவதிகள் தமது தலைமைத்துவ பாங்கையும் புத்தாக்க கண்டுபிடிப்பையும் வெளிக்கொண்டு வர முடியுமெனவும், அவர் தெரிவித்தார். வவுணதீவு கல்வி வலயத்தில் மேலும் 16 பாடசாலைகளில் இது போன்ற செயற்றிட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும், அவர் கூறினார்.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் கோட்ட கல்விப் பணிப்பாளர், ஆலோசனை வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர், அக்ஷன் யுனிற்றி லங்கா தன்னார்வ வலுவூட்டல் நிறுவன பணியாளர்கள் உள்ளிட்ட பலர்கலந்து கொண்டனர்.

# தலைமன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களும் நிபந்தனை அடிப்படையில் விடுதலை

(மன்னார் குறூப் நிருபர்)

இலங்கை கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்ட 17 இந்திய மீனவர்களும் நிபந்தனை அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை (29) அதிகாலை இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன் பிடித்துக் கொண்டிருந்த போது கடல் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இரண்டு இந்திய இழுவைப் படகுகளையும் அதிலிருந்து 17 இந்திய மீனவர்களையும் கைது செய்தனர். பின்னர் மீனவர்களையும்,இலுவைப் படகுகளையும் கடற்படையினர் தலைமன்னார் கடற்படையினரிடம் ஒப்படைத்தனர்.



தலைமன்னார் கடற்படையினர் விசாரணைகளின் பின்னர் மன்னார் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். இதன்போது மீனவர்களை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார்.

இந்நிலையில் வழக்கு நேற்றைய தினம் வியாழக்கிழமை (10) மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு 20 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறைத்தண்டனை விதித்துள்ளதுடன் நபரொருவருக்கு ரூ.50 தண்டப்பணம் விதித்து விடுதலை செய்யப்பட்டனர்.

மேலும் இலங்கைக்கான உயர்ஸ்தானிகர் அலுவலகம் ஊடாக தமிழக மீனவர்களை அத்துமீறி இலங்கை கடற்பரப்பில் நுழைந்து மீன்பிடியில் ஈடுபட வேண்டாம் என்ற இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிக அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கினார்.

## வடக்கின் உதயம்

# யாழில் கடத்தி வரப்பட்ட மாடுகளில் ஒரு மாடு உயிரிழப்பு, இருவர் கைது

(கிளிநொச்சி குறூப் நிருபர்)

கிளிநொச்சி பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு சட்டவிரோதமான முறையில் மாடுகளை கடத்தி வந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர்களிடமிருந்து 19 மாடுகள் உயிருடனும் ஒரு மாடு உயிரிழந்த நிலையிலும் மீட்கப்பட்டுள்ளது. கிளிநொச்சி பகுதியிலிருந்து நேற்றுமுன்தினம் லொறியொன்றில் 20 மாடுகளை ஏற்றி யாழ்ப்பாணத்திற்கு கடத்தி வந்துள்ளனர். இதுதொடர்பில் சாவகச்சேரி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மீசாலை பகுதியில் வைத்து லொறியை வழிமறித்துள்ளனர். இதன்போது லொறியிலிருந்த 20 மாடுகளில் ஒரு மாடு உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளது. அதிக மாடுகளை ஏற்றியமையால் நெரிசலினால் மாடு உயிரிழந்திருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அதனை தொடர்ந்து மாடுகளை கடத்தி வந்த லொறி சாரதி மற்றும் அவரது உதவியாளர் ஆகியோரை பொலிஸார் கைது செய்ததுடன், மாடுகளையும் லொறியையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்துள்ளனர்.

விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட இருவரையும் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்த 21 தமிழக மீனவர்கள் கைது



(யாழ்.விசேட நிருபர்)

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் 21 தமிழக கடற்தொழிலாளர்கள் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நெடுந்தீவு கடற்பரப்பினுள் நான்கு படகுகளில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டிருந்த வேளை நேற்றுமுன்தினம் 21 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களையும், அவர்களின் படகுகளையும் காங்கேசன்துறை கடற்படை முகாமிற்கு கொண்டு சென்ற கடற்படையினர் , 21 கடற்றொழிலாளர்களையும் விசாரணைகளின் பின்னர் , நீரியல் வளத்துறையினர் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# ரயில் மோதி குடும்பஸ்தர் உயிரிழப்பு

(கரவெட்டி நிருபர்)

யாழ்ப்பாணம் சுன்னாகம் பகுதியில் நேற்றைய தினம் புதன்கிழமை ரயில் மோதி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அளவெட்டி குருக்கள் கிணற்றடி பகுதியை சேர்ந்த கந்தையா இலங்கேஸ்வரன் (வயது 58) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் பகுதியில் தனது தாயார் வீட்டுக்கு தண்டவாளத்தை கடந்து செல்ல முற்பட்ட போதே ரயிலுடன் மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

# யாழ்.மாவட்டத்தில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் இளையோர் அணி வேட்புமனு தாக்கல்

யாழ்.மாவட்டத்தில் நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் கூட்டணியினர் போட்டியிடவுள்ளனர். அதற்கமைய வேட்பாளர்களின் வேட்புமனு நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாவட்ட செயலகத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த பட்டியலில் யாழ்.மாநகர சபை முன்னாள் மேயர் வி.மணிவண்ணன், மிதிலைச்செல்வி ஸ்ரீ பத்மநாதன் (தமிழரசுக் கட்சி கொழும்பு மாவட்ட கிளையின் முன்னாள் உப தலைவர் மற்றும் மகளிர் அணி உறுப்பினர்), தவச்செல்வம் சிற்பரன் ( கட்டட கலைஞர்), வரதராஜா பார்த்தீபன் (யாழ். மாநகர சபை முன்னாள் உறுப்பினர் மற்றும் யாழ். எயிட் தொண்டு நிறுவன சிரேஷ்ட தலைவர்), நாவலன் கோகிலவாணி (முன்னாள் போராளி, தொழில்முனைஞர் மற்றும் மொழிபெயர்ப்பாளர்), அருள்பரன் உமாகரன் (சட்டத்தரணி, கவிஞர் மற்றும் தமிழரசு கட்சி முன்னாள் உறுப்பினர்), பிரான்சிஸ் குலேந்திரன் செல்ரன் (யாழ். மத்திய கல்லூரி கிரிக்கெட் பயிற்றுவிப்பபாளர், விளையாட்டுவீரர்), முருகானந்தம் யசிந்தன், கதிரேசன் சஜீதரன் ஆகியோர் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.




தமிழ் மக்கள் கூட்டணியின் பதிவுசெய்யப்பட்ட மான் சின்னத்தில் இவர்கள் போட்டியிடுகின்றனர். அரசியலில் இளையோருக்கு இடமளிக்கும் வகையில் தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்றும் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடவிருப்பதாகவும் மூன்று வாரங்களுக்கு முன்னர் சி.வி. விக்னேஸ்வரன் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை தேடி மூன்றாவது நாளாக தொடரும் அகழ்வுப் பணி

(ஓமந்தை விசேட நிருபர்)



முள்ளிவாய்க்காலில் விடுதலைப்புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வுப் பணி மூன்றாவது நாளாகவும் நேற்று முன்னெடுக்கப்பட்டது.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளிவாய்க்கால் கிழக்கு பகுதியிலுள்ள இளம் ஒளி விளையாட்டுக் கழக மைதானத்தில் விடுதலைப் புலிகளால் புதைக்கப்பட்ட ஆயுதங்கள் இருப்பதாக தெரிவித்து அகழ்வுப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுவருகின்றன.

கொழும்பு நீதிமன்றத்தின் அனுமதியுடன் அகழ்வுப்பணியானது கொழும்பிலிருந்து வருகைதந்த பொலிஸ் குழுவினரால் நேற்றுமுன்தினம் மாலை முன்னெடுக்கப்பட்டது. எனினும் எதுவும் கிடைக்கப்பெறாமையால் அகழ்வு பணிகள் இடைநிறுத்தப்பட்டன.

முள்ளிவாய்க்கால் கிழக்கு, மேற்கு பகுதிகளில் அண்ணளவாக 11 ற்கு மேற்பட்ட இடங்களில் இதுவரை அகழ்வு பணிகள் நடைபெற்ற போதிலும் இதுவரை எதுவும் கிடைக்காமையால் இப்பணிகள் இடைநிறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாவட்ட செயலகத்தில் தே.ம.ச வேட்புமனு தாக்கல்




(யாழ். விசேட நிருபர்)

தேசிய மக்கள் சக்தி திசைகாட்டி சின்னத்தில் போட்டியிடுவதற்காக வேட்புமனுவை யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் கையளித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களை உள்ளடக்கிய யாழ். தேர்தல் மாவட்டத்தில், க. இளங்குமரன், எம்.மோகன், பூ. சிறிதரன், கா. பிரகாஷ், இ. வெண்ணிலா , ஜெ.ரஜீவன், வைத்தியர் எஸ்.சிறிபவானந்தராசா, தே.தஜீவன், உ. கீர்த்தி ஆகியோர் போட்டியிடவுள்ளனர்.

# தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை தமிழரசு கட்சி மீறியுள்ளது



தமிழ் மக்கள் வழங்கிய ஆணையை தமிழரசு கட்சி மீறியுள்ளதாக த.தே.முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

எதிர்காலத்தில் அந்தக் கட்சியால் தமிழ் மக்களுக்கு எந்தப் பயனும் கிடைக்கப்போவதில்லை தேர்தல் காலங்களில் தமிழரசுக் கட்சி சமஷ்டி, இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை, ஒற்றையாட்சி எதிர்ப்பு என்று கூறி தமிழ் மக்களின் வாக்குகளை பெறுகின்றது. தேர்தலில் வென்ற பின்னர் தமிழ் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்து தமது இருப்புகளையும் சுயலாப அரசியலையும் மேற்கொள்கின்றது. அண்மையில், தமிழரசுக் கட்சியின் எம். ஏ. சுமந்திரன், ஜனாதிபதி அநுரவை சந்தித்து மதுபான அனுமதிப் பத்திரங்களை பெற்றவர்களின் பெயர் பட்டியலை வெளியிடுமாறு கோருகிறார். இதில் வேடிக்கை என்னவென்றால் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட அநுரவை முதன்முதலில் சந்திக்க சென்ற சுமந்திரன், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு தொடர்பில் அநுரவுடன் பேசாமல் மதுபான அனுமதிப்பத்திரம் பெற்றவர்களின் பெயர்களை வெளியிடுமாறு கேட்கிறார். பெயர்ப் பட்டியல் வெளியிடுவதை வேண்டாம் என்று நாங்கள் கூறவில்லை. எனினும் சுமந்திரன் தமிழரசுக் கட்சிக்குள் தனக்கு வேண்டாதவர்களை அப்புறப்படுத்துவதற்கும் தனது இருப்பை தக்கவைப்பதற்குமே மதுபான அனுமதிப் பத்திரங்களை வெளியிடுமாறு கேட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் குறுந்திரைப்பட வெளியீடு

(யாழ். விசேட நிருபர்)




யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கை துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட குறுந்திரைப்படங்கள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் திரையிடப்படவுள்ளன.

போரில் தன் உறவுகளை இழந்து அவர்களின் நினைவுகளோடு பயணித்துக் கொண்டிருக்கும் உறவொன்றின் பதிவான 'ஆதித்தா', மலையக மக்களின் பேசப்படாத பிரச்சினை பற்றிப் பேசும் 'ஆசனம்', கருவறைக்குள் இருக்கும் குழந்தையைக் கூட விட்டுவைக்காத போரின் ரணங்களை நினைவூட்டுவதாக 'மீண்டும் கருவறைக்குள்', ஒவ்வொருவரின் பார்வைக் கோணத்திற்கு ஏற்றாற் போலவே ஒவ்வொரு கதையும் வடிவமைக்கப்படுகின்றது என்பதை உணர்த்தும் 'காட்சிப்பிழை', கடற்றொழிலுக்குச் சென்ற தன் துணைவனை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஒரு பெண்ணின் கதையான 'அலை', தோல்வியடைந்த புகைப்படவியலாளன் ஒருவனின் வாழ்க்கை பற்றிப் பேசும் 'ப்ரீஸ்'(Freeze) குடும்ப வன்முறைகளினால் பாதிக்கப்படும் பிள்ளைகள் பற்றி பேசும் 'ஏக்கம்', பாட்டிக்கும் பேரனுக்கும் இடையிலான அன்புறவினை வெளிப்படுத்தும் 'மெய்மை', சுமைகள் நிறைந்த குடும்பப் பெண் ஒருவரின் நிராசைக் கனவுகள் பற்றிப் பதிவுசெய்யும் 'மெய்ப்பட', ஒரு விடயத்தில் எவ்வளவு ஆர்வம் இருப்பினும் அதனையும் கடந்து சிறந்த திட்டமிடலும், நேரமுகாமைத்துவமும் அவசியம் என்பதைப் பதிவு செய்யும் 'வேட்கை' ஆகிய குறுந்திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

இக்குறுந்திரைப்பட விழாவானது ஊடகக்கற்கைகள் துறை மாணவர்களின் ஏற்பாட்டில் நடைபெறுகின்றது.

# மாணவர்கள், ஆசிரியர்கள் பாராட்டி கௌரவிப்பு

(மன்னார் குறூப் நிருபர்)



மன்னார் மாவட்டத்தில் சகல துறைகளிலும் சாதனை படைத்த மாணவர்களையும், ஊக்குவித்த ஆசிரியர்களையும் கௌரவிக்கும் 'வர்ண இரவு' நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை மன்னார் நகரசபை மண்டபத்தில் நடைபெற்றது.

மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில், உதவி மாவட்ட செயலாளர் வை.பரந்தாமன் தலைமையில் கௌரவிப்பு நிகழ்வு பெற்றது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் கலந்து கொண்டார்.

கௌரவ விருந்தினர்களாக பிரதேச செயலாளர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள், அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக விருந்தினர்கள் மற்றும் சகல துறைகளிலும் சாதனை நிலைநாட்டிய மன்னார் மற்றும் மடு கல்வி வலயத்தை சேர்ந்த மாணவர்கள் வாத்திய இசையுடன் மன்னார் நகர மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர். பின்னர் மன்னார் மற்றும் மடு கல்வி வலயங்களிலுள்ள பாடசாலைகளில் கல்வி கற்று சகல துறைகளிலும் சாதனையை நிலை நாட்டிய மாணவர்கள் விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டதோடு,அவர்கள் சான்றிதழ் மற்றும் பரிசுகளும் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

குறித்த நிகழ்வில் மாணவர்கள், பெற்றோர், ஆசிரியர்கள் என பல நூற்றுக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

# வன்னியில் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு வேட்புமனுதாக்கல்



(வவுனியா விசேட நிருபர்)

வன்னிமாவட்டத்தில் பாராளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுவை ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நேற்றைய தினம் தாக்கல் செய்தது.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள பாராளுமன்ற தேர்தலில் வன்னித்தேர்தல் மாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பானது சங்கு சின்னத்தில் போட்டியிடுகின்றது.

இந்நிலையில் வவுனியா மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள தேர்தல் காரியாலயத்தில் நேற்று மதியம் வேட்புமனுவை தாக்கல் செய்தது.

வன்னிமாவட்டத்தில் ஜனநாயக தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் சார்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன்,முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன்,முன்னாள் வடமாகாண அமைச்சர் கந்தையா சிவனேசன், முன்னாள் பிரதேச சபை தவிசாளர் க.விஜிந்தன், ஜனநாயகபோராளிகள் கட்சியின் பேச்சாளர் க.துளசி, மற்றும் முன்னாள் போராளி யசோதினி, சமூக செயற்பாட்டாளர் மூர்த்தி,

வர்த்தகர் அ.றொயன், ஆகியோர் வேட்பாளர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

# கல்வி அமைச்சு, பொலிஸார், 'ஈவா' இணைந்து மாதவிடாய் ஆரோக்கியம் பற்றி விழிப்புணர்வு

இலங்கையின் முன்னணி சானிட்டரி நாப்கின் வர்த்தகநாமமான ஈவா, கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸூடன் இணைந்து 'மகஹருனு பாடம்' என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 'ஈவா தனமுத்து தரு தனகெனம லொகுவேமு' என்ற தலைப்பில் மாற்றியமைக்கும் கல்வி முயற்சியை தொடங்கியுள்ளது. 'ஈவா தனமுத்து தரு – தனகெனம லொகுவேமு' முயற்சியானது, நாடெங்கும் உள்ள 3,000க்கும் மேற்பட்ட பெண்கள் பாடசாலைகளில் பெண்களின் ஆரோக்கியம், பருவமடைதல், இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் மாதவிடாய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

உலக சிறுவர் தினத்தை முன்னிட்டு ஒக்டோபர் 1 ஆம் திகதி 'மகஹருனு பாடம்' நிகழ்ச்சியின் ஆரம்பவிழா, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கல்வி அமைச்சின் அதிகாரிகள் மற்றும் இலங்கை பொலிஸின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர். இந்த முயற்சியானது பெரும்பாலும் களங்கம் மற்றும் போலியான தகவல்களால் சூழப்பட்ட கல்வித்துறையிலுள்ள உள்ள பகுதிகள் பற்றிய இடைவெளிகளை நிரப்ப வடிவமைக்கப்பட்டுள்ளது.



இந்த முயற்சியில் ஈவாவின் ஈடுபாடு, கல்வியின் மூலம் பெண்கள் மற்றும் குழந்தைகளை வலுப்படுத்தல் மற்றும் மாதவிடாய்க் காலத்தில் சாதகமான எண்ணங்களை மேம்படுத்துவதற்கான அதன் நோக்கத்தை பிரதிபலிக்கிறது. இந்த முன்முயற்சியின் ஒரு முக்கிய பகுதியாக, துஷ்பிரயோகத்தை எதிர்கொள்ளும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு ஆதரவாக இலங்கை பொலிஸின் குழந்தைகள் மற்றும் பெண்கள் பணியகத்தால் அவசரத்தொலைபேசி எண் 109 அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த எண் உள்ளடக்கப்பட்ட பேக்கேஜிங் அம்சத்துடன் ஈவா சானிட்டரி நாப்கின்களின் சிறப்புப் பதிப்பு காணப்படுவது இந்த முயற்சியின் முக்கிய பகுதியாகும். நிகழ்வில், இத்தகைய வரையடறுக்கப்பட்ட ஈவா பொதிகள் இலங்கை காவல்துறையின் சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்திடம் கையளிக்கப்பட்டதன் மூலம் ஈவாவின் சமூக பொறுப்புணர்வுக்கான உறுதிப்பாடு வலுப்படுத்தப்படுகிறது.




# Kaspersky 2024 இன் முதல் பாதியில் இயந்திர கற்றல் மூலம் APT கண்டறிதலில் 25% அதிகரிப்பை எட்டியது

Kaspersky'இன் உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் குழு (Global Research and Analytics Group GREAT) 2024 இன் முதல் பாதியில் மேம்பட்ட அச்சுறுத்தல் (APT) கண்டறிதலில் 25% அதிகரித்துள்ளதாக தெரிவித்துள்ளது. உலகளாவிய ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக் குழு தனது உள் இயந்திர கற்றல் முறைகளைப் பயன்படுத்தி இதுபோன்ற ஆயிரக்கணக்கான அச்சுறுத்தல்களைக் கண்டறிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. உலகளாவிய இணையத்தள அச்சுறுத்தல் தரவுகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் அரசாங்கம் மற்றும் நிதி நிறுவன மற்றும் தொலைத்தொடர்பு துறைகள் இவற்றைக் கண்டறிய முடிந்தது.Random Forest மற்றும் TFIDF போன்ற நுட்பங்கள் Kasperskyஇன் தீர்வுகளில் பயன்படுத்தப்படும் அதிக எண்ணிக்கையிலான இயந்திர கற்றல் மாதிரிகளை உருவாக்கப் பயன்படுத்தப்படுகின்றன. இந்த நுட்பங்கள் துல்லியமான அச்சுறுத்தல்களைக் கூட விரைவாகவும் சரியாகவும் கண்டறிய உதவுகின்றன. மேலும், இந்த கலவையானது பாரம்பரிய கண்டறிதல் அமைப்புகளால் புறக்கணிக்கப்படக்கூடிய சமரசத்தின் குறிகாட்டிகளை அடையாளம் காணும் வாய்ப்பை வழங்குகிறது, அதே நேரத்தில் மாற்றங்களை மிகவும் துல்லியமாக கண்டறிதல் மற்றும் அச்சுறுத்தல் கண்டறிதலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் கொண்டுள்ளது.மேலும், இயந்திர கற்றலின் தொடர்ச்சியான பயன்பாட்டின் மூலம், ஒவ்வொரு நாளும் மில்லியன் கணக்கான தரவை செயலாக்குவதற்கான மையத்தை உருவாக்கியுள்ள வளர்ந்து வரும் அச்சுறுத்தல்கள் பற்றிய அதிநவீன தரவு நுண்ணறிவுகளை அதன் அமைப்புகள் வழங்க முடியும். இந்த காரணத்திற்காக, 2024 முதல் பாதியில் அச்சுறுத்தல் கண்டறிதலை 25% ஆக அதிகரிக்க இதுவும் ஒரு காரணமாகும். இது பிரதிபலிக்கும் நேரத்தைக் குறைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது மற்றும் இணைய அபாயங்களைக் குறைக்கும் திறனை பெரிதும் அதிகரிக்கிறது. இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த Kaspersky GReAT இன் META ஆய்வு மையத்தின் தலைவர் திரு. அமின் ஹஸ்பினி, "இந்த முடிவுகள் நாங்கள் எதிர்பார்த்ததை விட அதிகமாகிவிட்டன. அடையாளத்தின் துல்லியத்தை அதிகரிப்பதன் மூலமும், அதிகரித்து வரும் அச்சுறுத்தல்களுக்கு எதிராக செயலூக்கமான உத்திகளை உருவாக்குவதன் மூலமும் இது அமைப்பு மற்றும் நிறுவனங்களுக்கு உதவ முடியும்.

# மஹிந்திரா ஐடியல் ஃபைனான்ஸ் புதிய பிரதம நிறைவேற்று அதிகாரி

Mahindra Financeஇன் துணை நிறுவனமான Mahindra Ideal Finance Limited (MIFL) புதிய முகாமைத்துவப் பணிப்பாளராகவும், பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் திரு. மு.ஃபத்தல் சுனியாவை நியமிப்பதாக நிறுவனம் அறிவித்துள்ளது. MIFL இன் பிரதம நிறைவேற்று அதிகாரியாக முன்னர் பணியாற்றிய திரு. துமிந்த வீரசேகர ஓய்வுபெற்றதை அடுத்து, அந்த வெற்றிடத்திற்கு திரு. மு.ஃபத்தல் நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது புதிய நியமிப்பில், திரு. மு.ஃபத்தல், குறிப்பாக சிறு மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்கள் (SMEகள்) மற்றும் கிராமப்புற மக்களுக்கு MIFL இன் டிஜிட்டல் கடன் வழங்கும் திறன்களை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தவுள்ளார். மேலும் நிறுவனத்தின் வாடிக்கையாளர் மதிப்பை மேலும் மேம்படுத்தும் வகையில் நிறுவனத்தின் சேவைகளை மேலும் விரிவுபடுத்த அவர் எதிர்பார்த்துள்ளார்.இந்த நியமனம் குறித்து Mahindra Finance நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான Raul Rebello கூறுகையில், "மு.ஃபத்தல் மஹிந்திரா குழுமம் மற்றும் Mahindra Finance ஆகியவற்றில் பல்வேறு தலைமைப் பதவிகளை வகித்துள்ளார். இலங்கையில் ஒரு வலுவான நிதிச் சேவை வர்த்தகத்தை கட்டியெழுப்ப துமிந்தவின் பங்களிப்புக்காக நான் நன்றி தெரிவிக்க விரும்புகிறேன், மேலும் எதிர்காலத்தில் MIFL இன்னும் பெரிய வெற்றியைப் பெற மு.ஃபத்தலின் அனுபவம் உதவும் என்று நான் நம்புகிறேன்." என தெரிவித்தார்.



Mahindra Ideal Finance நிறுவனத்தின் தலைவர் திரு. நளின் வெல்கம கருத்து தெரிவிக்கையில், "சர்வதேச அனுபவத்தைக் கொண்ட மு.ஃபத்தல் நிறுவனத்துடன் இணைந்து கொள்வதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். நிதித் துறையைப் பற்றிய அவரது விரிவான அறிவு, சந்தையில் வளரவும் வெற்றிபெறவும் புதிய வழிகளைக் கண்டறிய நிறுவனத்திற்கு உதவும்." என தெரிவித்தார்.

Mahindra Finance இனால் செய்த முதலீடு MIFL இன் அங்கீகாரத்தை மேலும் வலுப்படுத்தியுள்ளது, இதன் விளைவாக நிறுவனம் Fitch Ratings மூலம் AA (Outlook Stable) என்ற உயர் கடன் மதிப்பீட்டைப் பெற்றுள்ளது. இந்த மதிப்பீடு MIFL நிதி ரீதியாக நிலையானது மற்றும் நம்பகமானது, இலங்கையின் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றாக அதை நிலைநிறுத்துகிறது.

# Caravan Fresh பாண் கொள்வனவில் OrphanCare அமைப்புக்கு உதவி

முன்னணி பேக்கரி மற்றும் பேஸ்ரி விற்பனைத் தொடரான Caravan Fresh உடன் OrphanCare பங்காண்மையை ஏற்படுத்தியுள்ளதாக அறிவித்துள்ளது. இந்தப் பங்காண்மையினூடாக, அநாதரவான சிறுவர்கள் 18 வயதை எய்தி, காப்பகத்திலிருந்து வெளியேறியதும், தமது வாழ்வில் இரண்டாவது தடவையாகவும் அநாதரவாக்கப்படுவதை தவிர்க்கும் OrphanCare இன் திட்டத்துக்கு ஆதரவளிக்கப்படும்.

இந்தப் பங்காண்மையின் அங்கமாக, 550 கிராம் வெட்டப்பட்ட பாண் விற்பனையினூடாகவும் ரூ. 10 ஐ நேரடியாக OrphanCare நிதியத்துக்கு பங்களிப்பு வழங்க Caravan Fresh முன்வந்துள்ளது. இந்தப் பங்களிப்பினூடாக, அநாதரவான சிறுவர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் முக்கிய பங்காற்றும். கல்வியை அணுகுவது, திறன் விருத்தி மற்றும் பிரகாசமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொள்வது போன்றவற்றிலும் பங்களிப்புச் செலுத்தும். Caravan Fresh மற்றும் OrphanCare இடையிலான இந்த பங்காண்மை என்பது வரவேற்கத்தக்க நகர்வாக அமைந்துள்ளது. அநாதரவான இளைஞர்களுக்கு வலுவூட்டும் நிதியத்தின் முயற்சிகளுக்கு Caravan Fresh இன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.இந்தப் பங்காண்மை தொடர்பில் Caravan Fresh இன் பொது முகாமையாளர் ஆறுமுகம் பத்மநாதன் கருத்துத் தெரிவிக்கையில், "Caravan Fresh இன் பிரதான நோக்கம் என்பது, சுவையான பாண் மற்றும் சிற்றுண்டி வகைகளை தயாரித்து வழங்குவது மாத்திரமன்றி, எமது சமூகத்துக்கு வளமூட்டுவதுமாகும். OrphanCare உடன் கைகோர்த்துள்ளமையானது, இரக்க உணர்வு மற்றும் சமூக ஈடுபாடு போன்ற எமது விழுமியங்களுடன் ஆழமாக பொருந்தும் வகையிலான நடவடிக்கைக்கு பங்களிப்பு வழங்க எமக்கு ஏதுவாக அமைந்திருக்கும். எமது விற்பனை நிலையங்களிலிருந்து துண்டாக்கப்பட்ட பாணை கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளரும், இந்த அநாதரவான இளைஞர்களின் வாழ்க்கையில் ஏதேனும் ஒரு வகையில் பங்களிப்பை மேற்கொள்வார்." என்றார்.



# SATA 2024 விருது விழாவில் வெற்றியீட்டிய ஷங்கிரிலா

ஷங்கிரிலா ஹம்பாந்தோட்டை 8வது South Asian Travel Awards (SATA) 2024 நிகழ்வில் இரு மதிப்புமிக்க விருது அங்கீகாரங்களைச் சம்பாதித்து வெற்றியை நிலைநாட்டியுள்ளது. 2024 செப்டெம்பர் 20 வெள்ளிக்கிழமையன்று Aloft Kathmandu Thamel இல் இடம்பெற்ற விமரிசையான நிகழ்வில் 200 க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டதுடன், தெற்காசியாவின் பிரயாண மற்றும் விருந்தோம்பல் துறையில் மிகச் சிறந்தவற்றை வெளிக்காண்பித்தவாறு, பல்வகைப்பட்ட பிரிவுகளில் விருது அங்கீகாரங்களுக்கு பெயரிடப்பட்ட 400 க்கும் மேற்பட்டவர்களுக்கு இந்நிகழ்வில் கௌரவமளிக்கப்பட்டுள்ளது.

ஷங்கிரிலா ஹம்பாந்தோட்டை, இலங்கையிலுள்ள முன்னணி குடும்ப உல்லாச விடுதி (Leading Family Resort in Sri Lanka) மற்றும் இலங்கையிலுள்ள முன்னணி திருமண நிகழ்வு உல்லாச விடுதி (Leading Wedding Resort in Sri Lanka) ஆகிய விருதுகளைத் தனதாக்கியுள்ளது. விருந்தோம்பலில் மகத்துவத்தின் மீது இந்த உல்லாச விடுதி கொண்டுள்ள ஓயாத அர்ப்பணிப்பிற்கு இந்த விருது அங்கீகாரங்கள் சான்று பகருகின்றன. மறக்க முடியாத குடும்ப விடுமுறைகள் மற்றும் கனவுகள் நனவாகும் திருமண நிகழ்வுகளுக்கான இடம் ஆகியவற்றுக்காக தொடர்ந்தும் நாடுகின்ற விருந்தினர்களின் விசுவாசம் ஆகியனவே இவ்விருது அங்கீகாரங்களுக்கான உந்துசக்தியாக அமையப்பெற்றன.



# Hot 'N' Spicy ஆக மாறும் சனா

வளர்ந்து வரும் பதின்ம வயது கலைஞரான சனாவை தனது வர்த்தகநாம தூதுவர்களில் ஒருவராக இணைத்துக் கொண்டுள்ளதாக பிறிமா கொத்துமீ (Prima KottuMee) அறிவித்துள்ளது. அந்த வகையில் வர்த்தகநாமத்தின் இளமையான நெறிமுறைகளுடன் முழுமையாக ஒத்துப் போகின்ற, இளமையான மற்றும் திறமையான கலைஞரான சனா, பிறிமா கொத்துமீ வர்த்தகநாமத்திற்கு ஒரு புதிய மற்றும் துடிப்பான ஆளுமையைக் கொண்டு வரவுள்ளார். இசை மீதான அவரது ஆர்வம், அனைவரையும் கவரும் அவரது நடத்தை ஆகியவற்றுடன் இணைந்து, வர்த்தகநாமத்தின் Hot 'N' Spicy பண்புகளை வெளிப்படுத்த சனா சிறந்த தெரிவாக அமைகிறார்.சனாவின் இசைப் பயணமானது அபாரமான பல்வேறு சாதனைகள் நிறைந்ததாகும். வசீகரிக்கும் குரல் மற்றும் அனைவரையும் கவரக் கூடிய ஆற்றல் காரணமாக பிரபலமாக விளங்கும் அவர், இலங்கையின் இசைத்துறையில் மிக விரைவாக தனக்கென்று ஒரு அங்கீகாரத்தை பெற்றுள்ளார்.




ஒரு வளர்ந்து வரும் நட்சத்திரமாக தனது இடத்தை நிலைநிறுத்தியுள்ள அவரின் முதல் பாடலான, "சந்தக் வெலா", 6 வாரங்களுக்கும் மேலாக யூடியூப்பில் டிரெண்டிங் வரிசையில் இடம்பித்துள்ளது. அது தற்போது 6 மில்லியனுக்கும் அதிகமான பார்வையிடல்களை கொண்டுள்ளது. இந்த பாடல் அவுஸ்திரேலியா, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளின் பிரபல பாடல்கள் பட்டியலில் இடம்பித்துள்ளமையானது, சர்வதேசத்தில் வளர்ந்து வரும் அவரது இடத்தை நிரூபிக்கிறது.

# லிட்ரோ கேஸ் லங்கா தலைவராக தெரிவாகிய சன்ன குணவர்தன

இலங்கையின் முன்னணி LP எரிவாயு வழங்குனர்களான Litro Gas Lanka Ltd. மற்றும் Litro Gas Terminal Lanka PVT Ltd., சன்ன குணவர்தனவை புதிய தலைவராக நியமித்துள்ளது, இது அந்நிறுவனத்தின் தற்போதைய உறுதிப்பாட்டை உறுதி செய்வதில் குறிப்பிடத்தக்க படியாகும். இலங்கை முழுவதும் தடையில்லா எரிவாயு விநியோகத்தை உறுதிப்படுத்தும்.

குணவர்தன, Aitken Spence Group இல் Aitken Spence Garments Ltd மற்றும் Royal Fernwood Porcelain PLC இன் தலைமை நிர்வாக அதிகாரியாக 2021 டிசம்பரில் பணியாற்றியது உட்பட, அவரது முந்தைய பதவிநிலைகளில் இருந்து பல அனுபவங்களை கொண்டுள்ளார்.

2019இல், அவர் வணிக மாற்றம் மற்றும் தலைமைத்துவத்தில் தனது நிபுணத்துவத்தை வெளிப்படுத்தினார்.

மலைதீவில் உள்ள எர்ன்ஸ்ட் அண்ட் யங்கின் முகமையாளர், பங்களாதேஷில் ஆடை நடவடிக்கைகளுக்கான தலைமை நிதி அதிகாரி மற்றும் 2015இல் ஆபிரிக்காவில் ஒரு முன்னோடி உற்பத்தி ஆலையை நிறுவுதல் ஆகியவை அவரது சர்வதேச வெளிப்பாட்டில் அடங்கும். நிட் கிளஸ்டரின் தலைமை இயக்க அதிகாரியாகப் பணியாற்றியபோது அவர் 10 உற்பத்தி ஆலைகளை மேற்பார்வையிட்டார் மற்றும் முக்கிய தயாரிப்பு வரிசைகளுக்கான விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முயற்சிகளை வழிநடத்தினார்.



இலங்கையின் முன்னணி எரிசக்தி வழங்குனரான Litro Gas Lanka, வீடுகள் மற்றும் தொழிற்சாலைகளுக்கு நம்பகமான மற்றும் தடையற்ற எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்வதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

குணவர்தனவின் நியமனம், மிகவும் சவாலான காலங்களிலும் கூட, வீடுகள் மற்றும் ஆற்றல் பாரிய தொழிற்சாலைகள் ஆகிய இரண்டிற்கும் எரிசக்தித் தீர்வுளை வழங்குவதன் மூலம் இந்நாட்டின் ஒவ்வொரு மூலையையும் அதன் சேவைகள் சென்றடையும் Litroவின் பார்வையை மேலும் வலுப்படுத்துகிறது. சன்ன குணவர்தனவின் தலைமைத்துவம் மற்றும் நிபுணத்துவம் கொழும்பு லீடர்ஷிப் அகாடமியின் ஹால் ஆஃப் ஃபேம் ஃபார் லீடர்ஷிப் எக்ஸலன்ஸ் 2022 மற்றும் CEO Sri Lanka இனால் 2022ஆம் ஆண்டின் சிறந்த உற்பத்தியாளர் பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற பட்டம் உட்பட பல பாராட்டுக்களைப் பெற்றுள்ளது. அவர் பட்டய முகாமைத்துவக் கணக்காளர்கள் (UK) மற்றும் இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் இரண்டிலும் ஒரு சக உறுப்பினராக உள்ளார், அவுஸ்திரேலியாவின் தெற்கு குயின்ஸ்லாந்து பல்கலைக்கழகத்தில் MBA பட்டமும், ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முதல் தரப் பட்டமும் பெற்றவர்.

இவர் தற்போது மலேசியாவில் உள்ள மேலாண்மை மற்றும் அறிவியல் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் படித்து வருகிறார்.

இலங்கையின் எரிசக்தி துறையின் முதுகெலும்பாக Litro Gas Lanka தொடர்ந்து சேவையாற்றி வரும் நிலையில், சன்ன குணவர்தனவின் தலைமையானது, எரிசக்தியை முன்னேற்றுவதற்கும், நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு குடும்பம் மற்றும் தொழில்துறையினரின் ஆற்றல் தேவைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் நிறுவனத்துக்கு உந்துசக்தியாய் அமையும்.

# Fairway உடன் இணைந்து மேம்படும் இலங்கையின் அடுத்த சுற்றுலா மையம்

வானுயர கட்டடங்களின் பின்னணியில், உயர்ந்து நிற்கும் கோபுரங்களுடனும், அழகிய வீதிகளாலும், காலனித்துவ அம்ச வரலாறுகளுடனும் கொழும்பு கோட்டை மிக வேகமாக நவீனமயமாகி வருகின்றது. இந்த மாவட்டம், இலங்கையின் பாரம்பரியத்தின் காலத்தால் அழியாத அடையாளமாக உள்ளது. காலி முகத்திடல், டச்சு வைத்தியசாலை, புறக்கோட்டை சந்தை போன்ற சிறப்புமிக்க இடங்களுக்கு அருகாமையில் காணப்படும் இந்த நகரம், கலாசாரம், வரலாறு, நவீன நகரத்தின் தோற்றம் ஆகியவற்றை ஒன்றிணைக்கும் இடமாக காணப்படுகிறது.

ஆயினும், அதன் செயற்பாட்டு திறனுக்கு அப்பால், உலகளாவிய சுற்றுலா மற்றும் கலாசார மையமாக திகழும் கொழும்பு கோட்டை அடையக் கூடிய உண்மையான சாத்தியங்களை எதிர்வரும் காலங்களில் இன்னும் அறியலாம். கொழும்பு கோட்டை ஆனது, அதன் வளமான கட்டடக்கலை மற்றும் கலாசார அழகுடன், தொடர்ச்சியாக அதே பாதையில் பயணிக்க தயாராக உள்ளது.



ஹொஸ்பிடல் வீதிக்கும் சதாம் வீதிக்கும் இடையில், டச்சு மருத்துவமனைக்குப் பின்னால் அமைந்துள்ள Fairway Colombo ஹோட்டல் ஆனது, இப்பிரதேசத்திற்கு புத்துணர்ச்சியை ஏற்படுத்துவதில் முன்னணிப் பங்கை ஆற்றி வருகின்றது. Fairway Colombo Street Food Festival, Art and Jazz on the Street, Cultural Festival போன்ற நிகழ்வுகளை Fairway நடத்தி, சுற்றுலாப் பயணிகளுக்கு இலங்கை உணவுகளின் சுவைகளையும் கலைத்திறனையும் அனுபவிப்பதற்கான வாய்ப்பை வழங்குகிறது. ஆயினும், Fairway Colombo ஹோட்டலானது, இவற்றையும் தாண்டி மேலும் பல விடயங்களை மேற்கொள்ள முடியும் என நம்புகிறது. அதற்காக, கொழும்பு கோட்டையின் எதிர்காலத்தை சிறப்பாக வடிவமைப்பதில் இணையுமாறு உள்ளூர் விற்பனையாளர்கள், கலைஞர்கள், திறமை வெளிப்பாட்டாளர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பை அது எதிர்பார்க்கிறது.

இதன் மூலம், உலகம் முழுவதிலுமிருந்து வரும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையிலான ஈர்க்கக் கூடிய அனுபவத்தை உருவாக்க அது அழைப்பு விடுக்கிறது. இந்த வாய்ப்புகளை ஏற்படுத்துவதன் மூலம், நிலைபேறான சுற்றுலா வளர்ச்சிக்கான அடித்தளத்தை Fairway Colombo அமைக்கிறது. இது கொழும்பு கோட்டையை, முழு சமூகத்திற்கும் பயனளிக்கும் வகையில், இலங்கையின் சுற்றுலாத் துறையின் ஒரு முக்கிய தளமாக மேம்படச் செய்யும்.

# தலைவர் அஷ்ரஃப் அவர்களும் தவிசாளர் எச். எம். பாரூக் அவர்களும்

## சவால்களும் சாதனைகளும் 11

எச். எம். பாரூக் வாழ்வியல் வரலாற்றை கணிப்பதற்கு அவர் கென்யா நாட்டுக்கு உயர்ஸ்தானிகராக நியமனம் பெற்றுச் சென்று அவர் அங்கு எதிர்நோக்கிய சவால்கள், வெற்றி கொண்டு எத்தகைய சாதனைகள் செய்திருக்கிறார்கள் என்பது ஓர் அளவுகோல். அவருக்கு அந்நாட்டில் மகத்தான வரவேற்பு அளிக்கப்பட்டது. 2000களில் முன்னர் அந்நாட்டிற்கு பல உயர்ஸ்தானிகர்கள் நியமிக்கப்பட்டிருந்தும் இலங்கையின் நாமத்தை பெரியளவில் ஓங்கச் செய்தவர்கள் எத்தனை பெயர் இருந்திருக்கிறார்கள் என்ற எண்ணிக்கையினை விரல்விட்டு எண்ணக் கூடியதாக இருந்தது.

இலங்கைக்கு மட்டுமல்ல இந்தியாவிலுள்ள தமிழ் தோட்டத் தொழிலாளர்களுடன் நேச உறவைப் பேணிவந்தார். எச். எம். பாரூக் எல்லாயினமக்களுடனும் நேசமாகவும் பாசமாகவும் பண்பாகவும் வேறுபாடுகளின்றி பழகி வந்தமையால் அந்நாட்டில் அவருக்கு செல்வாக்குமிக்கவராகக் காணப்பட்டார் என்றால் அதுமிகையாகாது.

கென்யா நாட்டுக்கும் இலங்கைக்கும் நட்புறவை வலுப்படுத்துவதில்தான் அவருடைய சேவை அதிகளவு பிரகாசிக்கின்றது. அஷ்ரஃப் அவர்கள் உயிர் காலமான பின்னர் தவிசாளர் பாரூக் அவர்களுடைய சமூக, அரசியல் நடவடிக்கைகளில் ஒருமாற்றம் ஏற்பட்டது. எப்பொழுதும் எது நடந்தாலும் ஆண்டவன் நல்லது செய்வான் என்ற நம்பிக்கை கொண்ட சட்டத்தரணி பாரூக். அவருக்கு பாராளுமன்றத்தில் தேசிய பட்டியல் நியமனம் கிடைக்காத காரணத்தினால் கென்யா நாட்டுக்கு உயர் ஸ்தானிகராக பதவியேற்றுச் சென்றமையானது தனது வாழ்க்கைக்குக் கிடைத்த பெரும் பேறாகக் கருதுகின்றார்.

ஏனென்றால் ஒருமனிதன் சமூகம், கல்வி, அரசியல் போன்ற விவகாரங்களில் ஈடுபாடு காட்டியதன் பின்பு வாழ்க்கையில் சந்தோசமாக இருப்பதற்காக இறைவன் கொடுக்கின்ற பரிசுகளில் ஒன்றுதான் இந்த உலகத்திலேயே சுகமான வாழ்க்கையை அனுபவிப்பதற்காக உயர் பதவியை வழங்கி வருவது வழக்கம்.

நாட்டுக்காக உழைத்தவர்கள் எல்லோரும் கடைசி நேரத்தில் அவர்களுக்கு ஓய்வூதியப் பரிசாக வழங்குவது வெளிநாட்டுத் தூதுவர் பதவியாகும். அஷ்ரஃபுடைய விருப்பத்தின் படி பாரூக் அவர்களை தேசிய பட்டியலின் மூலம் பாராளுமன்றத்திற்கு அனுப்பி மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்ற எதிர்பார்ப்பு இருந்தது. அதற்காக அவர் மரணம் அடையும் முன் தேசிய பட்டியலில் முதல் இடத்தில் பாரூக் பெயரைப் பதிவு செய்திருந்தார். எனினும் அவருக்குப் பின்வந்த தலைமைத்துவம் அதற்கு மாறாக அவரை வெளிநாட்டுத் தூதுவராக அனுப்புவது சிறப்பானதாகக் கருதி ஓர் உயர்ந்த பதவி வழங்கப்பட்டது. இந்தப் பதவி அவருக்கு பெரும்பாக்கியமாகவும் இது அவருடையவாழ்க்கையின் புதிய மாற்றத்திற்கும் வழிகோலியது. அவர் தன்னுடைய வாழ்க்கையை கட்சிக்காகவும் எளிய மக்களுக்காகவும் ஏனைய சமூக நடவடிக்கைகளுக்காகவும் தியாகத்துடன் செயற்பட்டவர். கென்யா நாட்டில் இயற்கையோடு வாழ்ந்து சுகம் அனுபவிக்கக் கூடிய பாக்கியத்தை ஆண்டவன் வழங்கினான்.

2001 இல் மார்ச் மாதம் அளவில் கென்னியா நாட்டுக்குஉயர் ஸ்தானிகராகப் பதவியேற்றுச் சென்றார். குடும்பம் சகிதம் அவர் அங்குசென்றார். உயர் ஸ்தானிகர் பதவி என்பது ஒருநாட்டினுடைய ஜனாதிபதியின் பிரதிநிதியாக நேரடியாகக் கடமையாற்றக் கூடிய பதவி. ஒருநாட்டில் இருக்கின்ற ஜனாதிபதிக்கு வழங்கப்படுகின்ற எல்லாவகையிலான உயர்வசதிவாய்ப்புக்களும் கௌரவமும் மரியாதையும் கிடைக்கும். ஜனாதிபதிசெல்லும் வாகனம் ஒன்று இன்னுமொரு வாகனத்துடன் மோதினால் அந்த வாகனத்திற்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யும் உரிமை இல்லை. அதேஉரிமைதான் உயர் ஸ்தானிகராக நியமனம் பெற்றுச் செல்பவர்களுக்கும் உண்டு. ஏதாவது குற்றம் குறைகள் காணப்படினும் அவர் அந்தகுற்றத்தில் இருந்து நிரபராதியாகக் கருதப்படுவார்.



கென்யா நாடு என்பது கிழக்கு ஆபிரிக்காவில் மிகவும் முன்னேற்றகரமான நாடுகளில் ஒன்று. இந்நாட்டை குட்டிலண்டன் என்று சொல்வார்கள். எல்லாயின மக்களும் வாழ்கின்றனர். ஐக்கிய நாடுகள் சபையின் இரண்டாவது அலுவலகம் இங்கு அமைந்துள்ளது. அந்த நாட்டுக்குச் சென்றமையால் ஐக்கிய நாடுகள் சபைக்கும் நிரந்தரப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டேன். கிழக்கு ஆபிரிக்காவில் 15 நாடுகள் இருப்பின் அவற்றிற்கும் உயர் ஸ்தானிகராக நானே செயற்பட்டேன். இலங்கை நாட்டு மக்களுக்கு உதவிசெய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டேன்.



இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள உயர் ஸ்தானிகர் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருந்தோம்.

சகல வாகன வசதிகளும் அங்கு இருந்தன. உத்தியோகபூர்வ இல்லத்தைப் பராமரிக்கக் கூடிய ஊழியர்கள் உள்ளிட்ட அத்தனை அவசதிகளுடன் வாழ்ந்தேன். உண்மையிலேயே வாழ்க்கையில் கிடைக்கக் கூடிய அதிஉன்னதமான பதவிதான் அவை.

ஆபிரிக்கா, கென்யா, எகிப்து போன்ற நாடுகளில் இலங்கைத் தூதரகங்கள் அமைந்துள்ளன. அங்கு எனது முக்கியமான தொழில் யாதெனில் இலங்கையின் திருநாமத்தை அந்நாட்டிலுள்ள இல்லா இடங்களிலும் பிரபல்யப்படுத்துவதேயாகும். அதற்குச் செயலாளர், அலுவலக உத்தியோகத்தர்கள் பலர் சேவையாற்றினார்கள். விருந்தளிப்பதும் அந்நாட்டில் நடைபெறும் முக்கிய நிகழ்வுகளில் கலந்துகொள்வது மட்டுமல்ல இலங்கையின் பிரதிநிதியாக இருந்து இலங்கை பற்றிய தெளிவான விளக்கங்களையும் வழங்கி வந்தேன்.நான் அங்குசென்ற பின்னர்தான் அரசாங்கத்தின் சேவைகளை அறிமுகம் செய்தேன். இலங்கை என்றநாடு இருக்கிறதா என்றுதெரியாது. அந்நாட்டின் பிரதான உற்பத்தி தேயிலை ஆகும். இந்தியா, சீனா போன்ற நாடுகள் அதிகளவில் தேயிலை உற்பத்தி செய்யும் நாடுகள். ஆனால் தேயிலை உற்பத்தி அந்த நாட்டு மக்களுக்கே போதுமானதாக இருந்தது. இலங்கை, இந்தியா போன்றநாடுகள்தான் உலக நாட்டிற்கே தேயிலை ஏற்றுமதி செய்யும். ஆரம்பகால கட்டத்தில் இலங்கையில் இருந்துதான் அதிகளவு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. ஆனால் படிப்படியாக கென்யா இலங்கையைவிட அதிகளவு தேயிலையை ஏற்றுமதி செய்வதில் முன் சென்றது.

1972 இல் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கவின் ஆட்சிக் காலத்தில் இலங்கையிலுள்ள தேயிலைத் தோட்டங்கள் எல்லாம் அரச உடமையாக்கப்பட்டது. தனிப்பட்ட ஒருவருக்கு 50 ஏக்கர் காணி வைக்கமுடியாது என்ற சட்டம் வந்தது. இலங்கையில் தேயிலை உற்பத்தியில் ஈடுபட்ட பெரியளவிலான கம்பனிகள் எல்லாம் நேரடியாக கென்யா நாட்டுக்குச் சென்று அங்கு தேயிலை உற்பத்திகளைச் செய்தார்கள். கென்யாவுக்கும் இலங்கைக்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. ஏனென்றால் மலைகள் அங்குமிங்கும் குடைந்துசெல்வதாகும். கென்யாவில் மலைகள் எல்லாம் ஒரே அளவில் சமாந்தரமாகக் காணப்படும். ஆதலால் தொழிலாளர் கூலி மிகவும் குறைவு. இலகுவானமுறையில் வேலைகள் செய்யலாம்.

பொதுவாக எல்லோரும் ஆங்கில கல்விமுறையினைத்தான் கல்வி கற்பார்கள். அங்குதொழிலாளர் கூலி மிகவும் குறைவு. வீட்டுவேலைக்குமிகக் குறைந்தவிலைக்கு ஆட்களைப் பெற்றுக் கொள்ள இயலும். ஒரு வீட்டில் இரண்டு மூன்றுபெண் தொழிலாளர்கள் வீட்டுவேலைக்காக அமர்த்தப்பட்டிருப்பார்கள். அங்கு விருந்தோம்பல் பண்புகள் அதிகம்.

கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள், இந்துக்கள் இருக்கிறார்கள். இங்கு முஸ்லிம் 15 விகிதம் இருக்கிறார்கள். அங்கு பெரியபள்ளிவாசல்கள் இருக்கின்றன. இந்துக்கள் நைரோபி என்ற இடத்தில்தான் இருக்கின்றார்கள். அவர்கள் இந்திய வம்சாவழியைக் கொண்டவர்கள்.

மக்கா புனித யாத்திரைக்குச் சென்றால் குர்பான் கொடுப்பது வழக்கம். அது ஒட்டகம், ஆடு என்று வழங்குவார்கள். கென்யாவில் இருந்துதான் சவூதிஅரேபியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. சிலவேளை நாங்கள் வீதியில் பயணம் செல்லும் போது ஓர் ஆட்டுக் கூட்டம் வீதிக்கு குறுக்காகச் செல்லத் தொடங்கினால் ஒரு 15 அல்லது 20 நிமிடம் வாகனத்தை நிறுத்திவைக்கவேண்டும். அங்கு அவ்வளவு ஆடு உற்பத்தி செய்யப்படுகிறது. அங்கு மலிவுவிலைக்கு ஆட்டு இறைச்சி வாங்கலாம். மலிவான சாப்பாடும் ஆட்டு இறைச்சிதான்.

அங்கு கடமையாற்றும் போது பலசவால்களைச் சந்தித்தேன். இதில் முக்கியமாக நான் சென்ற சமயம் இலங்கை நாட்டுமக்கள் கொஞ்சப் பேர்தான் இருந்தார்கள். அதிலும் அதிகமாக தமிழ் மக்கள் இருந்தார்கள். ஆனால் அவர்களை எந்தவொரு நிகழ்வுக்கும் அழைப்பதில்லை.

எனதுஉத்தியோகபூர்வமானஉயர் ஸ்தானிகர் இல்லத்திற்கு யாரும் வந்துபோவது மாதிரித்தான் சிலஒழுங்குகளைச் செய்திவைத்திருந்தேன். வீட்டின் கதவுகள் வாசலின் கதவுகள் எப்பொழுதும் திறந்துதான் இருக்கும். விரும்பியவர்கள் வரலாம் போகலாம். உத்தியோகபூர்வ இல்லத்தில் முதலாவது விருந்துபசாரத்தைச் செய்தேன். அப்பொழுது இலங்கையைப் பற்றிப் பேசக் கிடைத்தது. இரண்டு மாதகாலகட்டத்தில் அங்குள்ளஆகாகாஎன்றவைத்தியசாலைக்கு இலங்கையர்ஒருவர் நோய் வாய்புற்றுள்ளதைப் பார்க்கச் சென்றேன். அவ்வாறுபார்க்கச் சென்று திரும்பிவரும் போது எனது பென்ஸ் காரில் நான் பின்னால் இருந்துபயணம் செய்தேன். பெஞ்ச் காரில் கதவு மூடும் விடயத்தில் முறையில் வித்தியாசம் இருக்கிறது. அது ஒருபக்கத்தில் லொக் ஒன்று இருக்கும் உயர்ந்து இருந்தால் லொக் என்றும் அதுகீழ் பணிந்து இருந்தால் மூடப்படவில்லை என்று சமிக்ஞைகாட்டும். யப்பான் கார்களுக்குஉள்ளினுள்தான் லொக் இருக்கும். நான் வரும் போதுஎன் கதவுகள் மூடப்படவில்லை என்று கண்டுவிட்டார்கள். அதனை அவதானித்தஒருவன் எனது பையினை எடுத்துக் கொண்டுஓடிவிட்டான். எனது கார்சாரதி காரைநிறுத்தாமல் காரில் இருந்துபாய்ந்துநேராகஅந்தத் திருடனைவிரட்டிச் சென்றான். அப்பொழுதுவாகனம் சாரதி இல்லாமல் வாகனம் செல்லுகிறது. பின்னால் இருந்த நான் அந்த வாகனத்தைச் செலுத்தினேன். அதனைச் சரியான பக்கத்திற்கு செலுத்திச் சென்றேன். அது ஒரு சிறியவாகனம் ஒன்றில் முட்டிமோதுண்டு நின்றது. அப்பொழுது உடன் அங்குபொலிஸ் நிலையம் சென்றால் இந்த இரவில் பொலிஸ் நிலையத்திற்குமின் சாரம் கூட இல்லை. பெற்றோல் மெக்ஸ் தான் வைத்துக் கொண்டிருந்தார்கள்.



இதைநான் உடனே ஊடகங்களுக்கு அறிவித்தல் கொடுத்தேன். மறுநாள் பத்திரிகைகளில் தலைப்புச் செய்திகள். இலங்கை உயர் ஸ்தானிக ர்பொருட்கள் கொள்ளை அடிக்கப்பட்டன. அதனுடன் சேர்த்து மூன்று நபர்கள் கொலைசெய்யப்பட்டார்கள் என்ற செய்தியும் பெரிதுபடுத்திபிரசுரமாகி இருந்தன. இந்தக் கொலைசம்பவத்திற்கும் இந்தக் கொள்ளைச் சம்பவத்திற்கும் தொடர்பு இல்லை. இது ஏற்கெனவே நடந்த சம்பவம். இதைப் பார்த்தவுடன் கென்னியா மற்றும் இலங்கை முழு நாட்டில் இருந்துதொலைபேசிகள் வந்தவண்ணம் இருந்தன. இந்தபத்திரிகைச் செய்திகள் இப்பொழுதும் ஓர் ஆவணமாக எடுத்தி வைத்திருக்கின்றேன்.

இலங்கையில் இருந்துபாரூக் என்பவர் கென்னியாநாட்டுத் தூதுவராக வந்திருக்கின்றவிடயம் இரண்டுமாதத்தில் நாடுமுழுவதும் பிரபல்யமாகப் பேசப்பட்டது. அந்நாட்டிலுள்ளஅமைச்சர்கள், தூதுவர்கள் தொலைபேசி அழைப்பு விடுத்து சுக துக்கங்களை விசாரித்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் அந்நாட்டிலுள்ள தேசிய பத்திரிகையான நேசன் ஆங்கிலப் பத்திரிகையில் இருந்து தொலைபேசி மூலம் என்னுடன் தொடர்புகொண்டு ஒருபேட்டியினை எடுக்கவேண்டும் என்றார்கள். அதற்கு அவர்களை வரும்படி அழைப்பு விடுத்ததோடு பகல் சாப்பாட்டுக்கும் தயாராக வரும்படி கூறினேன். மாதம் விருந்தோம்பல் செய்வதற்காக 1500 அமெரிக்கா டொலர்கள் கிடைக்கும். ஒருபெரிய குழுவினர் வந்தனர்.

பலகோணங்களில் புகைப்படங்கள் எடுத்தார்கள். அந்தப் புகைப்படங்கள் இன்னும் ஞாபகார்த்தமாக இருக்கிறது.

அடுத்த ஞாயிறு பத்திரிகையில் என்னைப் பற்றிய முழுமையான தகவல்களுடன் பெரியளவில் செய்திகளை பிரசுரம் செய்திருந்தார்கள். ஆறு பக்கத்தில் என்னைப் பற்றிதகவல்கள் இருந்தன. நான் இலங்கையில் மாகாண சபை உறுப்பினராக இருந்தபோது பெஜ்ரோவில் செல்லும் போது இடையில் இறங்கி அதன் அருகில் துவக்குடன் நின்றுஎடுத்தபுகைப்படத்தையும் அவற்றுடன் இணைத்துப் பிரசுரம் செய்திருந்தார்கள்.

அது இலங்கையில் நடந்தால் என்னசம்பவம் நடந்திருக்கும் என்றுஅந்தப் பத்திரிகை வினா தொடுத்து இருந்தது. அதில் எனது வாழ்க்கைவரலாறு. நான் படித்தபாடசாலை, பதவிகள் எனது பிள்ளைகளின் வரலாறு எனப் பரந்தமட்டத்தில் மிகவும் விரிவாக எழுதினார்கள்.

இன்னும் தொடரும்.

**இக்பால் அலி**

# வெலிகம அறபாவிலிருந்து 28 மாணவர்கள் பல்கலை தெரிவு

(வெலிகம தினகரன் நிருபர்)

வெலிகம அறபா மத்திய கல்லூரியிலிருந்து (தேசிய பாடசாலை) இம்முறை (2023/2024) பல்கலைக்கழகத்துக்கு பல்வேறு துறைகளில் 28 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

விஞ்ஞான துறையிலிருந்து 10 மாணவர்களும், தொழில்நுட்பத் துறையிலிருந்து 14 மாணவர்களும், கலைப்பிரிவிலிருந்து 04 மாணவர்களுமாக 28 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றுள்ளதாக கல்லூரி அதிபர் எம்.டி.எம்.முதஹ்ஹர் தெரிவித்தார்.

# சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் இலங்கை மாணவனுக்கு வெண்கலப்பதக்கம்





சீனாவில் அண்மையில் நடைபெற்ற சர்வதேச ஒலிம்பியாட் போட்டியில் இலங்கை சார்பாக பங்குபற்றிய மாவனல்லை ஸாஹிரா தேசியக் கல்லூரியில் தரம் ஆறில் கல்வி கற்கும் மாணவன் ஆர்.எம். உஸைர் வெற்றி பெற்று வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுக் கொண்டார். இவர் 20 நாடுகள் பங்குபற்றிய போட்டியில் வெற்றி பெற்று நாட்டுக்கும் ,ஊருக்கும்,பாடசாலைக்கும் கீர்த்தி பெற்றுக் கொடுத்துள்ளார்.

இம் மாணவரை பாடசாலை நிர்வாகத்தினர் வரவேற்று பூமாலை அணிவித்து ஊர்வலமாக அழைத்துச் சென்று கௌரவப்படுத்தினர். இம்மாணவன் எம்.எச். ரிஸ்வான் முஹம்மத், எம். ஆர்.எப். முஜாஹிதா தம்பதியினரின் புதல்வராவார்.

அநுராதபுரம் மாவட்டம்;

# ACMC வேட்பாளராக தேசமான்ய தாரிக்

(திறப்பனை தினகரன் நிருபர்)



பாராளுமன்றத் தேர்தலில், அநுராதபுரம் மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் போட்டியிடுவதற்காக தொழிலதிபர் தேசமான்ய ஏ.ஆர்.எம். தாரிக் வேட்பு மனுவில் கையொப்பமிட்டார்.

SJB கட்சியின் ஹொரவபத்தான தொகுதி அமைப்பாளரான இவர், கல்வியிலும் அரசியலிலும் ஆழ்ந்த புலமை கொண்டவர். BBA பட்டதாரியான இவர், நாச்சியாதீவு பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவரும், நாச்சியாதீவு முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க தலைவராகவும் சமகாலத்தில் கடமையாற்றி சமூக மக்கள் அபிமானம்பெற்ற சிறந்த நன் மதிப்பைப் பெற்ற ஒருவராவார்.

அநுராதபுரம் மாவட்டத்தில் ஏற்பட்ட வெற்றிடத்தை பூரணப்படுத்த தேசமான்ய ஏ.ஆர்.எம்.தாரிக் ACMC சார்பில் ஐக்கிய மக்கள் கூட்டமைப்பில் அனுராதபுர மாவட்ட வேட்பாளராக கையொப்பமிட்டார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# துர்க்மனிஸ்தானிடம் தோற்று இறுதி வாய்ப்பை இழந்தது இலங்கை அணி

*நிரோசன் பிரியங்கர*




கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டு அரங்கில் நடைபெற்றுவரும் 20 வயதுக்கு உட்பட்ட மத்திய ஆசிய கரப்பந்தாட்டப் போட்டியில் நேற்று (10) நடந்த துர்க்மனிஸ்தானுக்கு எதிரான ஆரம்ப சுற்று ஆட்டத்தில் இலங்கை அணி 1–3 என்ற அடிப்படையில் தோல்வியை சந்தித்தது. இதன்மூலம் இலங்கை அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறும் வாய்ப்பை இழந்துள்ளது.

பரபரப்பாக நடந்த முதல் சுற்றில் இரு அணிகளும் சரிக்கு சமமாக மோதிக்கொண்டு புள்ளிகளை அதிகரித்த நிலையில் அந்த சுற்றைக் கைப்பற்றுவதற்கு இரு அணிகளும் கடுமையாக போட்டியிட்டன. எனினும் துர்க்மனிஸ்தான் இளையோர்களால் 25–22 புள்ளிகளால் அந்தச் சுற்றை வெல்ல முடிந்தது.

தொடர்ந்து இரண்டாவது சுற்றை துர்க்மனிஸ்தான் அணியால் 25–18 புள்ளிகளால் இலகுவாக வெல்ல முடிந்தது.

எவ்வாறாயினும் இலங்கை வீரர்கள் மூன்றாவது சுற்றில் 25–22 என்ற புள்ளிகளால் வெற்றியீட்டி நம்பிக்கை தந்தனர். துர்க்மனிஸ்தான் அணி நான்காவது சுற்றை 25–16 என கைப்பற்றி போட்டியை 3–1 என வென்றது.

இலங்கை அணி தனது ஆரம்ப சுற்றின் கடைசிப் போட்டியில் இன்று (11) பிற்பகல் 4 மணிக்கு உஸ்பகிஸ்தான் அணியை எதிர்கொள்ளவுள்ளது. இலங்கை அணி புள்ளிப் பட்டியலில் பின்தங்கி இருப்பதால் இறுதிப் போட்டிக்கான வாய்ப்பை இழந்துள்ளது.

# இலங்கை மகளிர் வெளியேற்றம்



இந்தியாவுக்கு எதிரான மகளிர் டி20 உலகக் கிண்ண ஏ குழுவுக்கான போட்டியில் 82 ஓட்டங்களால் மோசமான தோல்வியை சந்தித்த இலங்கை அணி அரையிறுதி வாய்ப்பை இழந்தது.

டி20 உலகக் கிண்ணத்தில் இதுவரை ஆடிய மூன்று போட்டிகளிலும் தோல்வி அடைந்த சமரி அத்தபத்து தலைமையிலான இலங்கை மகளிர் அணி ஏ குழுவில் புள்ளிகள் இன்றி கடைசி இடத்தில் இருப்பதோடு அந்த அணிக்கு இன்னும் ஒரு போட்டி எஞ்சியுள்ளது. இந்நிலையில் இலங்கை அணியால் அரையிறுதிக்கு முன்னேற முடியாத நிலையில் நாளை (12) ஆறுதல் வெற்றிக்காக நியூசிலாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

டுபாயில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி அதிரடியாக ஆடி 20 ஓவர்களுக்கும் 3 விக்கெட்டுகளை இழந்து 172 ஓட்டங்களைப் பெற்றது.

எனினும் பதிலெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 19.5 ஓவர்களில் 90 ஓட்டங்களுக்கே சுருண்டது.

# ரொட்டரி கழக கொல்ப் போட்டி ஒக்டோபர் 26இல்



படம்: விமல் கருணாதிலக்க

கொழும்பு பெருநகர ரொட்டரி கழகத்தினால் நடத்தப்படும் 8ஆவது வருடாந்த டயலொக் நலன்புரி கொல்ப் போட்டி எதிர்வரும் ஒக்டோபர் 26 ஆம் திகதி றோயல் கொழும்பு கொல்ப் கழத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு மாநகர ரொட்டரி கழகத்தினால் மேற்கொள்ளப்படும் பல் சமூக அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி சேகரிக்கும் நோக்கிலேயே இந்த வருடாந்த கொல்ப் போட்டி நடத்தப்படுகிறது. குறிப்பாக கொழும்பு, சீமாட்டி ரிஜ்வே சிறுவர் மருத்துமனையில் குழந்தை இருதய நோய் பராமரிப்புக்கான செலவுகளுக்கு உதவும் வகையில் நிதி திரட்டுவது இதில் பிரதானமாக உள்ளது.

இந்த டயலொக் என்டபிரைசஸ் பார் 3 கொல்ப் கிளசிக் போட்டியானது றோயல் கொழும்பு கொல்ப் கழத்தின் 18 துளைகளும், 54 பாகங்களாக மாற்றப்பட்டு போட்டிகள் நடத்தப்படவுள்ளன. இதில் இலங்கை வர்த்தக மற்றும் விளையாட்டு சமூகங்களைச் சேர்ந்த கொல்ப் வீரர்கள் பங்கேற்கவுள்ளனர்.

# மியன்மார் அணியுடனான நட்புறவு போட்டியில் இலங்கைக்கு தோல்வி

மியன்மாருக்கு எதிரான முதலாவது நட்டுபுறவுப் போட்டியில் இலங்கை கால்பந்து அணி 0–2 என்ற கோல் கணக்கில் தோல்வியை சந்தித்தது.

யாங்கோனில் உள்ள துவுன்னா அரங்கில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் மியன்மாரை இலங்கை அணி 14 ஆண்டுகளுக்குப் பின்னர் எதிர்கொண்டது. எனினும் போட்டியின் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்திய மியன்மார் அணி 3ஆவது நிமிடத்திலேயே கோணர் கிக் ஒன்றை வென்றது. இந்நிலையில் 15 ஆவது நிமிடத்தில் வைத்து இலங்கை பின்களத்தில் செய்த தவறைப் பயன்படுத்தி மின்மாரின் மோ அவுங் அந்த அணிக்காக முதல் கோலைப் பெற்றார். இதனால் போட்டியின் பாதி நேரத்தில் மியன்மார் அணியால் 1–0 என முன்னிலை பெற முடிந்தது.

தொடர்ந்து இரண்டாவது பாதி ஆரம்பித்த விரைவிலேயே மீண்டும் ஆதிக்கம் செலுத்திய மியன்மார் இரண்டாவது கோலை புகுத்தியது. மவுங் மவுங் லிங் 53 ஆவது நிமிடத்தில் அந்த கோலைப் பெற்றார். பதில் கோல் ஒன்றை திருப்புவதற்கு இலங்கை அணி எதிரணியின் கோல் கம்பத்தை நோக்கி நேரடியாக உதைத்த பந்துகள் கோலாக மாறவில்லை.

இலங்கை மற்றும் மியன்மார் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது நட்புறவுப் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (13) நடைபெறவுள்ளது.



# இலக்கியத்திற்கான நோபல் அறிவிப்பு



தென்கொரிய பெண் எழுத்தாளர் ஹான் காங்குக்கு 2024ஆம் ஆண்டின் இலக்கியத்துக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

2024ஆம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் தொடர்பான அறிவிப்பு 7ஆம் திகதி முதல் வெளியாகி வருகிறது. இதில் இலக்கியத்திற்கான நோபல் பரிசு நேற்று அறிவிக்கப்பட்டது.

வரலாற்றின் துயரங்களை எதிர்கொள்ளும் வகையில் கவிதைகளை இயற்றிய ஹான் காங்குக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டுள்ளது. ஹான் காங்கின் இலக்கியங்கள் ஆணாதிக்கம், வன்முறை, துக்கம் மற்றும் மனிதநேயம் ஆகிய கருப்பொருள்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

அவரது நாவலான தி வெஜிடேரியன் 2015இல் டெபோரா ஸ்மித்தால் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. இந்த நாவல் 2016இல் சர்வதேச புக்கர் பரிசை வென்றது. இதனிடையே தங்க பதக்கத்துடன் பரிசு தொகையை உள்ளடக்கிய நோபல் விருதுகள் விருதை நிறுவிய அல்பிரட் நோபல் நினைவு தினமான டிசம்பர் 10ஆம் திகதி ஸ்டொக்ஹோமில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும்.

# 50 ஆண்டுகளில்: வனவிலங்குளில் 70 வீத வீழ்ச்சி



கடந்த அரை நூற்றாண்டில் உலக வனவிலங்குகளின் எண்ணிக்கை 70 வீதத்திற்கு மேல் சுருங்கி இருப்பதாக இயற்கைக்கான உலகளாவிய நிதியம் தெரிவித்துள்ளது.

அமேசன் மழைக் காடுகள் போன்ற வாழுமிடங்கள் ஆபத்தான புள்ளியை எட்டி இருப்பதாக எச்சரித்திருக்கும் அந்த வனப் பாதுகாப்பு தொண்டு அமைப்பு, 5,000க்கும் மேற்பட்ட பலூட்டிகள், பறவைகள், நில நீர்வாழ் உயிரினங்கள், ஊர்வன மற்றும் மீன்களின் தரவுகளை நேற்று வெளியிட்டது.

இதில் 35,000 அளவான உயிரினங்களின் எண்ணிக்கை 1970 தொடக்கம் 73 வீத வீழ்ச்சி கண்டிருப்பதோடு பெரும்பாலும் மனித அழுத்தங்களே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. நன்னீர் இனங்களே மிகப்பெரிய வீழ்ச்சியைக் கண்டிருப்பதோடு இதற்கு அடுத்து நில மற்றும் கடல்சார் உயிரினங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

## சர்வதேச செய்திகள்

# காசாவில் மற்றொரு பாடசாலையின் மீது இஸ்ரேல் வான் தாக்குதல்: 28 பேர் பலி

## லெபனானிலும் தொடர்ந்து கடும் தாக்குதல்



இஸ்ரேல் லெபனானில் தாக்குதல்களை நடத்தும் அதேநேரம் காசாவில் இடம்பெறும் தாக்குதல்களில் பலரும் கொல்லப்பட்டிருப்பதோடு வடக்கு காசாவில் இஸ்ரேலிய இராணுவம் முன்னெடுத்துவரும் படை நடவடிக்கைக்கு மத்தியில் அங்குள்ள மக்கள் இஸ்ரேலிய முற்றுகைக்குள் சிக்கியுள்ளனர்.

தெற்கு காசாவின் ரபா நகரில் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலை ஒன்றின் மீது இஸ்ரேல் நேற்று (10) நடத்திய வான் தாக்குதலில் குறைந்தது 28 பேர் கொல்லப்பட்டு மேலும் 54 பேர் காயமடைந்துள்ளனர்.

பலஸ்தீன செம்பிறை சங்க தலைமையகத்திற்கு அருகில் இருக்கும் ருபைதா பாடசாலை மீதே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனை அடுத்து அந்தச் சங்கத்தின் அவசர மருத்துவக் குழு அங்கு விரைந்துள்ளதாக பலஸ்தீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கொல்லப்பட்டவர்களில் பெண்கள் மற்றும் சிறுவர்களும் இருப்பதோடு காயமடைந்த சிலர் ஆபத்தான நிலையில் இருப்பதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா தெரிவித்துள்ளது.

காசா போர் வெடித்தது தொடக்கம் அங்கு இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருக்கும் பாடசாலைகள் மற்றும் வசதிகள் மீது இஸ்ரேல் தொடர்ந்து தாக்குதல்களை நடத்தி வருகிறது. ஹமாஸ் பயன்படுத்தும் கட்டடங்களைத் தாக்குவதாக, இவ்வாறான தாக்குதல்களை இஸ்ரேல் நியாயப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அண்மைய வாரங்களாக இஸ்ரேல், லெபனானின் ஹிஸ்புல்லா அமைப்பு மீது அதிக அவதானம் செலுத்தி தாக்குதல்களை தீவிரப்படுத்தியபோதும் காசாவில் அது ஹமாஸ் அமைப்புடன் தொடர்ந்து சண்டையிட்டு வருகிறது.

குறிப்பாக ஜபலியா அகதி முகாமில் கடந்த சனிக்கிழமை தொடக்கம் முற்றுகையில் ஈடுபட்டு வரும் இஸ்ரேலியப் படை அங்கு நடத்திய தாக்குதல்களில் பலரும் கொல்லப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

அங்கு வீடுகளை இலக்கு வைத்து தொடர்ந்து வான் தாக்குதல்களை நடத்தி வருவதாகவும் அவ்வாறான தாக்குதல் ஒன்றில் மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. ஜபலியா வீதிகள் முற்றாக இடிபாடுகளாக மாறி இருப்பதோடு அடுக்கு மாடிகள் சின்னபின்னமாக்கப்பட்டிருப்பதாக அங்கிருப்பவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

பல வெடிபொருட்களைக் கொண்டு 12 இஸ்ரேலிய இராணுவ வாகனங்கள் மற்றும் படையினரை ஏற்றிய ஒரு டிரக் வட்டியை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக ஹமாஸ் ஆயுதப் பிரிவான கஸ்ஸாம் படையணி குறிப்பிட்டுள்ளது.

ஜபலியா அகதி முகாமில் இஸ்ரேல் இதுவரை நடத்திய தாக்குதல்களில் 130 பேர் வரை கொல்லப்பட்டிருப்பதாக காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தெற்கு நகரான கான் யூனிஸில் வீடு ஒன்றை இலக்கு வைத்து இஸ்ரேல் நேற்று நடத்திய வான் தாக்குதல் ஒன்றில் ஒரு குழந்தை மற்றும் சிறுவர்கள் உட்பட குறைந்தது ஐந்து பேர் கொல்லப்பட்டுள்ளனர். அல் பக்காரி குடும்ப வீட்டின் மீதே இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக வபா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. இதில் தாய், தந்தை மற்றும் ஏழு மாதக் குழுந்தை உட்பட அவர்களின் மூன்று குழந்தைகளே கொல்லப்பட்டுள்ளனர்.

காசாவில் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலின் தாக்குதல்களில் குறைந்தது 55 பேர் கொல்லப்பட்டு மேலும் 166 பேர் காயமடைந்திருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு நேற்று வெளியிட்ட அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த ஓர் ஆண்டுக்கு மேலாக நீடிக்கு காசா போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 42,065 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 97,886 பேர் காயமடைந்துள்ளனர்.

மறுபுறம் தெற்கு லெபனானில் இஸ்ரேல் நேற்று நடத்திய தாக்குதல் ஒன்றில் ஐந்து அவசரப் பணியாளர்கள் கொல்லப்பட்டதாக லெபனான் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் புறநகரான தஹியாவில் இஸ்ரேல் கடந்த புதன் இரவிலும் இரு வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

லெபனானில் தொடரும் இஸ்ரேலின் தாக்குதல்களில் 2,100 பேருக்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதோடு ஒரு மில்லியனுக்கும் அதிகமானவர்கள் தமது வீடுகளை விட்டு வெளியேறியுள்ளனர்.

# இஸ்ரேலுக்கான வலுவான ஆதரவில் பைடன் உறுதி



இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாவுடன் தொலைபேசியில் உரையாடிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இஸ்ரேலுக்கான தனது வலுவான ஆதரவை உறுதி செய்ததாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இரு தலைவர்களும் கடந்த புதனன்று (09) 30 நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடியதோடு இதில் துணை ஜனாதிபதியும் ஜனாதிபதி வேட்பாளருமான கமலா ஹாரிஸும் இணைந்ததாக வெள்ளை மாளிகையின் அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'இஸ்ரேலின் பாதுகாப்புக்கான தனது வலுவான கடப்பட்டை ஜனாதிபதி உறுதி செய்தார்' என்று வெள்ளை மாளிகை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. 'ஒக்டோபர் 1 ஆம் திகதி இஸ்ரேலுக்கு எதிரான ஈரானின் பலிஸ்டிக் ஏவுகணை தாக்குதலை அவர் சந்தேகத்திற்கு இடமின்றி கண்டித்தார்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஈரான் தாக்குதலுக்கு பதிலடி கொடுப்பது குறித்து இஸ்ரேல் ஆலோசனை நடத்தும் நிலையிலேயே இந்த தொலைபேசி உரையாடல் நிகழ்ந்துள்ளது. இது குறித்து பைடன் மற்றும் நெதன்யாகு பேசியதாக வெள்ளை மாளிகை பேச்சாளர் கரின் ஜீன் பியர்ரே குறிப்பிட்டபோதும் அது தொடர்பில் விபரத்தை வெளியிடவில்லை.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஒக்டோபர் மாதம் 11ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# ஒவ்வொருவரும் மனித உரிமை சட்டத்தை அறிந்திருப்பது அவசியம்

## தென்கிழக்கு பல்கலை பதில் உபவேந்தர் அப்துல் மஜீத்

**ஒலுவில் விசேட, அம்பாறை மத்திய நிருபர்கள்**

நாட்டில் வாழும் ஒவ்வொரு பிரஜையும் மனித உரிமைகள் தொடர்பான சட்டங்களை அறிந்து வைத்திருப்பது அவசியமாகுமென, தென்கிழக்கு பல்கலைக்கழக பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல்.அப்துல் மஜீத் தெரிவித்தார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் அரசியல் விஞ்ஞானத்துறையால் நடத்தப்பட்ட மனித உரிமைகள் தொடர்பான குறுங்கால கற்கையை பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை ஒலுவில் வளாகத்தில் நடைபெற்றது. இதில்



பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந் நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய அவர்,

"மனித உரிமையானது ஒரு மனிதனின் அடிப்படை உரிமையாகும். தகவல் அறியும் சட்டத்தினூடாக ஒரு மனிதனுடைய அடிப்படை உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். இதனை யாரும் பிழையான வழியில் இட்டுச் செல்ல முடியாது. மனித உரிமை தொடர்பான கற்கையை பூர்த்தி செய்து சான்றிதழ் பெற்றவர்கள் நாட்டில் மனித உரிமையை பாதுகாப்பதற்கும் ஒரு மனிதனின் சுதந்திரம் இதனூடாக பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும்" என்றார்.

# மார்பக புற்றுநோய் தினம்; விழிப்புணர்வு ஊர்வலம்

**கிண்ணியா மத்திய நிருபர்**

உலக மார்பக புற்றுநோய் தினத்தையொட்டி கிண்ணியாவில் நேற்று வியாழக்கிழமை மாபெரும் விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றது.

கிண்ணியா பிரதேச சுகாதார வைத்திய அலுவலகத்தின் ஏற்பாட்டிலும் அப்பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி தலைமையிலும் இந்த விழிப்புணர்வு ஊர்வலம் நடைபெற்றதுடன், கிண்ணியா பிரதேச செயலக முன்றலிலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகி, மீண்டும் பிரதேச செயலகத்தை அடைந்தது.



இந்த ஊர்வலத்தில் கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.எம். கனி, குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எம்.எம். அஜித், குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்தியஅதிகாரி அலுவலக ஊழியர்கள், சுகாதார வைத்திய அலுவலக ஊழியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# உலக அஞ்சல் தினம்; இறக்காமத்தில் நிகழ்வு

**இறக்காமம் தினகரன் நிருபர்**



உலக அஞ்சல் தினத்தையொட்டி இறக்காமம் தபால் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட பல்வேறு நிகழ்வுகள் இறக்காமம் தபாலகத்தில் தபால் அதிபர் ஆர்.எம்.எம். வாஷினி ரத்நாயக்க தலைமையில் நடைபெற்றது.

இறக்காமம் பிரதேசத்தில் மிகவும் வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் 15 மாணவர்களுக்கு தபால் அலுவலகத்தால் பணம் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டு சேமிப்பு புத்தகங்களும் அவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இதன்போது இறக்காமம் பெரிய ஜும்மா பள்ளிவாசல் பேஷ் இமாம் மௌலவி அல்ஹாஜ் ஏ.ஹபீபுள்ளாஹ் தலைமையில் விசேட துஆ பிரார்த்தனையும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் இறக்காமம் பதில் தபால் அதிபர் ஏ.ஏ.பிரியங்கணி, இறக்காமம் ஓய்வுபெற்ற தபால் தபால் அதிபர் ஏ.எல்.இக்பால், அமீர் அலிபுரம் வித்தியாலய அதிபர் எம்.எச்.லாஹிர், தபால் ஊழியர்கள் கலந்து சிறப்பித்தனர்.

# சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வு

**பாலமுனை தினகரன் நிருபர்**




சர்வதேச ஆசிரியர் தினத்தையொட்டி பாலமுனை அல் ஹிக்மா வித்தியாலயத்தில் பல்வேறு நிகழ்ச்சிகள் அண்மையில் நடைபெற்றன.

பழைய மாணவர்கள் அமைப்பும் ஹிக்மா பாடசாலை சமூகமும் இணைந்து பாடசாலை அதிபர் எஸ்.ஏ.ஜஸாஹிர் தலைமையில் நடத்திய இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்தின் பிரதி கல்விப் பணிப்பாளர் ஏ.எல்.அப்துல் மஜீத் பிரதம அதிதியாக கலந்துகொண்டார். அத்துடன் பாடசாலை அதிபர்கள், ஓய்வுநிலை அதிபர்கள் ஆகியோர் கௌரவ அதிதிகளாக கலந்துகொண்டனர்.

க.பொ.த. சாதாரணதர பரீட்சையில் சிறந்த பெறுபேறு பெற்ற மாணவர்களும் விளையாட்டு போட்டிகளில் தேசிய மட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களும் அதிதிகளால் நினைவுச்சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

# திருகோணமலை மாவட்ட செயலகத்தில் வாணி விழா

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருகோணமலை மாவட்ட செயலகத்தின் வாணி விழா மாவட்ட செயலக பிரதான மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் சமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் நேற்று முன்தினம் புதன்கிழமை மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது பூஜை வழிபாட்டை இரட்ணசிங்க பிள்ளையார் ஆலய தர்மகர்த்தாவான பாலகிருஷ்ண குருக்கள் நிகழ்த்தினார்.

இப்பூஜை வழிபாட்டின் பின்னர் பாடசாலை மாணவர்களின் கலை, கலாசார நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன், அதில் பங்குபற்றி மாணவர்களுக்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் மாவட்ட செயலக அதிகாரிகள் பரிசில்களை வழங்கி வைத்தனர்.

இவ்வாணி விழாவில் திருகோணமலை மாவட்ட செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக ஊழியர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# லைக்கா ஞானம் அறக்கட்டளையால் கழிவு முகாமைத்துவ விழிப்புணர்வு

**அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பிரதேசத்தில் கழிவுகளை தரம் பிரித்தல் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கையுடன் கழிவு போடும் தொட்டிகளை வழங்கும் நடவடிக்கையும் பிரதேச சபை பொது மண்டபத்தில் நடைபெற்றது.

லைக்கா ஞானம் அறக்கட்டளையின் ஏற்பாட்டிலும்



லைக்கா ஞானம் அறக்கட்டளை நிறுவுனர் அல்லிராஜா சுபாஸ்கரனின் வழிகாட்டுதலின் கீழும் அக்கரைப்பற்று பிரதேச சபைச் செயலாளர் ஐ.இர்பான் தலைமையில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதில் அக்கரைப்பற்று அல் பாயிஷா மகா வித்தியாலயம் மற்றும் ரஹீமியா வித்தியாலய ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்துகொண்டனர். இதன்போது திண்மக்கழிவுகளை தரம் பிரித்து சேகரிக்கும் பணி, உக்கும் மற்றும் உக்காத கழிவுகள், சூழல் மாசடைதல், சூழல் தாக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பாக பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஏ.எச்.பஹ்மி விளக்கமளித்தார்.

அத்துடன் அக்கரைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பாடசாலைகளுக்கு கழிவு தொட்டிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

# தெஹிவளை அருள்மிகு ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் திருமஞ்சத்தில் முத்தேவியரின் நகர்வலம்

இலங்கையில் கொழும்பு மாநகரிலே தெஹிவளையில் அருளாட்சி செய்யும் ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆலயத்தில் வீற்றிருந்து அருட்சக்தியாக கருணையுடன் அருளை வாரி வழங்கும் முத்தேவியருக்கு நிகழும் குரோதி வருடம் புரட்டாதி மாதம் சுக்லபட்த்தில் பிரதமை (03.10.2024) முதலாக வரும் 9 தினங்களுக்கு நவராத்திரிப் பூஜைகள் நடைபெற்று வருகின்றன. இங்கு முறையே ஸ்ரீ துர்க்கா, ஸ்ரீ இலட்சுமி, ஸ்ரீ சரஸ்வதி ஆகியோருக்கு ஸ்ரீமத் சந்திரசேகர சுவாமிகளின் தலைமையில் அபிஷேகம் ஹோமம் சிறப்பான மந்திர உச்சாடனங்களுடன் தூப தீப ஆராதனைகளுடன் விசேட வசந்த மண்டப பூஜை நடைபெற்று அதனைத் தொடர்ந்து திருவீதி உலா வலம் வந்து இரா போஜனம் வழங்கப்படுகிறது.



நாளை 12.10.2024 சனிக்கிழமை மதியம் 01.00 மணிக்கு விஜயதசமி திருமஞ்சத் திருவிழா முத்தேவியரின் நகர் வலம் இடம்பெறும்.

மானம்பூ திருவிழா (வன்னி வாழை வெட்டுதல் 07.35 09.17 மணிக்கும்), வித்தியாரம்பம் (ஏடு தொடக்குதல்) காலை 09.00 மணி முதல் நடைபெறும். மதியம் 12.00 மணிக்கு வசந்த மண்டப பூஜையுடம் முத்தேவியருக்கு விசேட தீபாராதனை நடைபெற்று முப்பெரும் தேவியர் நகர் வலம் வந்து காட்சி கொடுப்பர்.

முப்பெரும் தேவியருக்கு உபயமாக பூஜைகள் செய்வதற்கு ஆலய காரியாலத்தில் முன்கூட்டியே தொடர்புகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. பால், பழங்கள், இளநீர், மலர்கள் போன்ற திரவியங்களை பக்தர்கள் கொடுத்து உதவலாம்.

இவ்வாலயத்தில் கௌரிகாப்பு விரத பூஜை 12.10.202 சனிக்கிழமை 10.00 மணியளவில் ஆரம்பமாகும். பங்குபற்ற விரும்புவோர் ஆலய காரியாலயத்தில் முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. 15.10.2024 செவ்வாய்க்கிழமை மாலை 05.30 மணிக்கு வைரவர் மடை நடைபெறும்.

# தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் வறிய மக்களுக்கு நிதியுதவி

**(கரவெட்டி தினகரன் நிருபர்)**

தொண்டைமனாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் பண்டாரவளை அயிஸ்லெபி தமிழ் வித்தியாலய மாணவர்களின் தேசிய மட்ட நாடக, நாட்டிய போட்டிகளில் கலந்து கொள்வதற்கான நிதிச் செலவுகளுக்கு ரூ.50 ஆயிரமும், பண்டாரவளை சௌதம் தமிழ் மகா வித்தியாலய வாணி விழா அன்னதான பொருட்களுக்கு ரூ. 125,000 நிதியும், பாடசாலை நிர்வாகத்தினரிடம் வழங்கப்பட்டதுடன், வவுனியா நெடுங்கேணி பெரியகுளம் பிள்ளையார் ஆலய மீள் கட்டுமானப் பணிக்காக ரூ. 100,000 நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், கிளிநொச்சி சாந்தபுரம் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 30 குடும்பங்களுக்கு ரூபா 110,000 பெறுமதியான அத்தியவசிய பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ் உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையிலான தொண்டர்கள் நேரடியாகச் சென்று வழங்கினர்.



# பெண் தலைமைத்துவக் குடும்பத்துக்கு இராணுவத்தினரால் வீடு கையளிப்பு



**(யாழ். விசேட நிருபர்)**

யாழ்.சாவகச்சேரி நுணாவில் பகுதியில் இராணுவத்தால், பெண் தலைமைத்துவக் குடும்பமொன்றுக்காக புதிதாக அமைக்கப்பட்ட வீடு பயனாளிகளிடம் நேற்றைய தினம் வியாழக்கிழமை கையளிக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட பாதுகாப்புப் படைப் பிரிவின் மேஜர் ஜெனரல் பி.ஆர். பத்திரவிதான, இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பெயர் பலகையை திரை நீக்கம் செய்து பயனாளிகளிடம் வீட்டை உத்தியோகபூர்வமாகக் கையளித்தார்.

"இமேசன் கொம்பேசன்" என்ற அவுஸ்ரேலியா நிறுவனத்தின் சுமார் 35 இலட்சம் ரூபா நிதியுதவியில், இராணுவத்தின் மனித வலுவுடன் இந்த வீடு புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் இராணுவ உயர் அதிகாரிகள், இராணுவத்தினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# யாழ்ப்பாணத்தில் மீண்டும் டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம்

**(யாழ் . விசேட நிருபர்)**

யாழ்ப்பாணத்தில் பருவ மழை ஆரம்பித்துள்ளதால், மீண்டும் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் கோரியுள்ளார்.

மக்கள் வீடுகள் மற்றும் பொது இடங்கள், திணைக்களங்கள், மதத்தலங்கள் என்பவற்றை துப்புரவாக வைத்திருக்க வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

வட மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த ஐந்து வருடங்களை விட மிகவும் குறைந்தளவான நோயாளர்கள் இவ்வருடம் இனங்காணப்பட்டுள்ளனர். ஐந்து ஆண்டுகளில் கடந்த ஆண்டு யாழ்.மாவட்டத்தில் மிக மோசமான டெங்கு நோய்த் தாக்கம் காணப்பட்டது .

கடந்த ஆண்டு நவம்பர் மற்றும் டிசெம்பர் மாதங்களில் டெங்கு நோய்த் தாக்கம் அதிகமாக காணப்பட்டது. கடந்த ஆண்டு டெங்கு நோயால் ஆறு மரணங்கள் பதிவாகியுள்ளன. கடந்த நவம்பர் மாதத்தில் 179 பேர் நோய்த்தாக்கத்துக்கும் டிசம்பர் மாதத்தில் 2180 பேர் டெங்கு நோய்த்தாக்கத்தினாலும் பாதிக்கப்பட்டனர்.

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 2816 டெங்கு நோயாளர்களும் பெப்ரவரி மாதத்தில் 1409 டெங்கு நோயாளர்களும் இனங்காணப்பபட்டனர். அதன் பின்னர் மார்ச் மாதத்துடன் டெங்கு நோய்த் தாக்கம் படிப்படியாகக் குறைந்துள்ளது.

தற்போது பருவப்பெயர்ச்சி மழை ஆரம்பமாகி உள்ளதால் டெங்கு நோய்த்தாக்கம் மீண்டும் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் காணப்படுகின்றன. ஆகவே வீடுகள், அரச திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், மத வழிபாட்டங்கள் மற்றும் அனைத்துப் பொது இடங்களையும் துப்புரவாக வைத்திருத்தல் வேண்டும்.

டெங்கு விழிப்புணர்வு தொடர்பாக முறையான வேலைத்திட்டங்களை செயற்படுத்த வேண்டும். ஒவ்வெரு வாரமும் மதத்தலங்கள் மற்றும் பொது இடங்கள் சிரமதானம் செய்வதன் ஊடாக சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும்.

டெங்கு நோய் பரவல் காலை வேளையில் 6 தொடக்கம் 9 மணி வரையான காலப்பகுதியிலும் மாலை வேளையில் 3 தொடக்கம் 6 மணி வரையான காலப்பகுதியிலும் கடிக்கும் நுளம்புகளால் டெங்கு நோய் பரவும் அபாயம் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.



பாராளுமன்ற தேர்தலில் 'ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன' யாழ்.தேர்தல் மாவட்டத்திற்கான வேட்புமனுவை நேற்றைய தினம் வியாழக்கிழமை தாக்கல் செய்தது. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் யாழ். மாவட்ட அமைப்பாளர் தம்பித்துரை ரஜீவ், கீத்நாத் காசிலிங்கம் உள்ளிட்டோர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

(படம்: பருத்தித்துறை நிருபர்)

# மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் நவராத்திரி விழா

மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோயில் நவராத்திரி விழா 03.10.2024 வியாழக்கிழமை தொடக்கம் 12.10.2024 சனிக்கிழமை வரை வெகு சிறப்பாக நடைபெற திருவருள் கூடியுள்ளது.

03 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் துர்க்கை பூஜையும், 06 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முதல் லக்ஷ்மி பூஜையும், 09 ஆம் திகதி புதன்கிழமை முதல் சரஸ்வதி பூஜையும் நடைபெற்று, 12 ஆம் திகதி சனிக்கிழமை விஜயதசமியன்று காலை 7.00 மணிக்கு குழந்தைகளுக்கான வித்தியாரம்பம் நடைபெறும். மாலை 05.30 மணிக்கு மானம்பூ திருவிழா (வாழை வெட்டுதல்) இடம்பெறும்.

வித்தியாரம்பம் செய்யவிரும்பும் குழந்தைகளுடைய பெயர்களை முன்கூட்டியே ஆலய காரியாலயத்தில் பதிவுசெய்துகொள்ளுங்கள்.

கேதார கௌரி விரதம் 12.10.2024 சனிக்கிழமை தொடக்கம் 01.11.2024 வெள்ளிக்கிழமை வரை கௌரி அம்பாள் இலட்சார்ச்சனை இடம்பெறும்.

ஸ்கந்த சஷ்டி விரத பூஜைகள், 02.11.2024 சனிக்கிழமை முதல் 06.11.2024 புதன்கிழமை வரை இடம்பெறும்.

அபிஷேகத்துக்கு பால், இளநீர், தயிர், சர்க்கரை என்பன உள்ளன் போடு ஏற்றுக்கொள்ளப்படும்.

அம்பாள் அடியார்கள் அனைவரும் ஆசாரசீலராய் வந்து அம்பாளை தரிசித்து, இஷ்ட சித்திகளைப் பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

## நவகத்தேகம பிரதேச சபை

### 2025ம் ஆண்டின் செயற்றிட்ட பாதீட்டு ஆவணம்

நவகத்தேகம பிரதேச சபையின் 2025 ம் ஆண்டிற்கான பாதீட்டின் வரைவு ஆவணம் 2024 ஒக்டோபர் 11ம் திகதியிலிருந்து 2024 ஒக்டோபர் 29ம் திகதிவரை (அரச விடுமுறை தினங்கள் மற்றும் ஞாயிறு தினம் தவிர்ந்த) அலுவலக நேரங்களில் பொது மக்களின் பரிசீலனைக்காக நவகத்தேகம பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்படுவதோடு பிரதேச சபை பாதீட்டு விநியோகம் மற்றும் அமுலாக்கம் தொடர்பான சட்டத்தின் 10.2(ஆ)ம் விதியின் பிரகாரம் பொது மக்களுக்கு இத்தால் வெளியிடுகிறேன்.

**ஏ.எச்.எம்.என்.கே. அபெரத்ன,**
**செயலாளர்,**
**நவகத்தேகம பிரதேச சபை**

**2024 ஒக்டோபர் மாதம் 7ம் திகதி**
**நவகத்தேகம பிரதேச சபை அலுவலகம்,**
**நவகத்தேகம.**

## திவுலப்பிட்டிய பிரதேச சபை

### ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2025

2025ஆம் ஆண்டிற்காக இந்நிறுவனத்திற்கு கீழ்க்காணும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்கும் முகமாக பதிவு செய்வதற்கு விரும்பும் தகைமையுடைய அங்கீகரிக்கப்பட்ட உற்பத்தியாளர்கள், வழங்குநர்களிடமிருந்து மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் மாதிரிகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை நிரப்பி விண்ணப்பத்தை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "ஒப்பந்தக்காரர்கள் மற்றும் வழங்குநர்களை பதிவு செய்தல் - 2025" என்று குறிப்பிட்டு "செயலாளர், திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டிய" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புமாறு குறிப்பிடுவதுடன், திவுலப்பிட்டியவில் அமைந்துள்ள தலைமையகத்திற்கு கையோடு கொண்டுவந்த ஒப்படைத்து பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| பொருட்கள் வழங்குதல் (ஒரு விடயத்திற்காக) | : | ரூ.2500.00 |
| சேவை வழங்குதல் (ஒரு விடயத்திற்காக) | : | ரூ.2500.00 |
| நிர்மாண ஒப்பந்தங்கள் ரூ.500,000.00 வரையான கைத்தொழில்களுக்கு | : | ரூ.6000.00 |
| நிர்மாண ஒப்பந்தங்கள் ரூ.500,000.00 இற்கு மேற்பட்ட கைத்தொழில்களுக்காக | : | ரூ.12,000.00 |
| விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | : | 2024.11.12 |

ஒவ்வொரு உருப்படி சார்பாகவும் வேறுவேறாக பதிவுக்கட்டணங்களைச் செலுத்த வேண்டியதுடன் நிறுவனத்திற்கு வருகைதந்து பதிவு செய்வதற்கு உத்தேசிப்போருக்கு வாரத்தின் திங்கள் முதல் வெள்ளி வரையான அலுவலக நாட்களில் (அரச விடுமுறை தினங்கள் தவிர்த்து) மு.ப.9.00 முதல் பி.ப.3.00 வரையான காலத்திற்குள் திவுலப்பிட்டியவில் அமைந்துள்ள தலைமையகத்திற்கு வருகைதந்து காசு செலுத்தி பதிவுசெய்யலாம். தபால் மூலம் விண்ணப்பிப்பதாயின் "செயலாளர், திவுலப்பிட்டிய பிரதேச சபை" என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசோலை மூலம் மாத்திரம் குறித்த கட்டணங்களை செலுத்துதல் வேண்டும். தபால் கட்டளைகள் ஏற்கப்படமாட்டாது.

**நிபந்தனைகள்**

1. தேர்ந்தெடுக்கப்படும் வழங்குநர்களிடமிருந்து எழுத்து மூலம் விலைமனுக்கள் கோரப்படுவதுடன், வழங்கப்படும் பொருட்கள், சேவைகளின் நிலை, விலை, பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குதல் பற்றிய அனுபவம் மற்றும் நிதி ஆற்றல் மற்றும் துறையில் அனுபவம் போன்ற தகவுத்திறன்களின் பிரகாரம் பொருத்தமான வழங்குநர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஓடர்கள் ஒப்படைக்கப்படும்.
2. சந்தர்ப்பத்திற்கேற்ப பதிவு செய்த வழங்குநர்களுக்கு அப்பால் வேறு பெறுகை முறைமையின் பிரகாரம் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமை சபைக்குரியது.
3. வியாபாரம் சட்டரீதியாக செல்லுபடியாகும் பதிவுடன் இருத்தல் வேண்டும்.
4. அறிவித்தல் விடுக்கப்பட்ட பின்பு குறித்தவாறு குறித்த தினத்திற்கு சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விலைமனுக்களுக்கு மற்றும் தரத்திற்கு அமைவாக பொருட்களை வழங்குவற்குவதற்குத் தவறுகின்ற மற்றும் விலைமனுக்கள் கோரப்படும் கடிதத்திற்காக குறைந்தபட்சம் இரு முறையாவது பதிலளிக்காத வழங்குநர்களின் பதிவு அறிவித்தலின்றி இரத்துச் செய்யப்படும்.
5. பொருட்களை வழங்குதல் பற்றிய மேலதிக நிபந்தனைகளை விதித்தல் அவசியமானது என கருதும் பட்சத்தில் அவ்வாறு செய்யும் உரிமை திவுலப்பிட்டிய பிரதேச சபைக்கு உரியது.
6. சகல வழங்கல்களுக்கும் அறுபது (60) நாள் கால எல்லைக்கு சபையினால் கடன் வசதிகள் வழங்கப்படுவதுடன் ரெடிமிக்ஸ் கொங்கிறீட் இற்காக ரூபா பத்து மில்லியன் கடன் வசதிகளை வழங்குதல் வேண்டும்.
7. 2024.11.12 ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**A வகுதிகளை வழங்குதல்**

| உருப்படி இலக்கம் | விபரம் | உருப்படி இலக்கம் | விபரம் |
|---|---|---|---|
| A (01) | அலுவலக காகிதாதிகள் மற்றும் கடதாசி, மாதிரிப்பத்திரங்கள், அச்சிடப்பட்ட ஆவணங்கள் மற்றும் அச்சு வேலைகள் | A (10) | துப்புரவேற்பாட்டு உபகரணங்கள் (விளக்கு மாறு, தும்புத்தடி, கம்பூட்ஸ், இறப்பர் கிளவூஸ் போன்றன..) |
| A (02) | அலுவலக உபகரணங்கள் மரம் மற்றும் உருக்கு அலுவலகத் தளபாடங்கள் | A (11) | சீருடை, டீசேர்ட், பாதணி, மேசைத்துணி |
| A (03) | கொங்கிறீட் பொருட்கள், ஹாட்வெயார் உருப்படிகள், தீந்தை வகைகள் (வாகன மற்றும் கட்டிடங்களுக்கு) | A (12) | தார் மற்றும் கோலாஸ் |
| A (04) | மோட்டார் வாகனங்கள் மற்றும் டிரக்டர் உதிரிப்பாகங்கள் | A (13) | குப்பை வண்டி, டிரக்டர் டிரையிலர் |
| A (05) | டயர் மற்றும் டியூப், பற்றரி | A (14) | பிளாஸ்திக் குப்பைத்தொட்டி, கொம்போஸ்ட் பாத்திரம் மற்றும் குடிநீர் தாங்கி |
| A (06) | ஆற்று மணல், கருங்கல், வீதி அழுத்தும் பொருட்கள், மண் மற்றும் சரளைக்கல் (அனுமதிப்பத்திர உரிமையாளர்களாக இருத்தல் வேண்டும்) மற்றும் ரெடிமிக்ஸ் கொங்கிறீட் | A (15) | கணனி கடதாசி மற்றும் கணனி பற்றுச்சீட்டு |
| A (07) | அலுவலக அடையாள அட்டை | A (16) | கணனி மற்றும் கணனி துணைபாகங்கள் (பிரிண்டர், யுபிஎஸ் இயந்திரம், டோனர், ரிபன் போன்றன) |
| A (08) | சுகாதாரம் மற்றும் துப்புரவேற்பாட்டு பொருட்கள் (கிருமி நாசினிகள் மற்றும் சவர்க்காரம்) | A (17) | வீதி விளக்குகள், துணைப்பாகங்கள் மற்றும் மின் உபகரணங்கள் |
| A (09) | தகனசாலைகளுக்கான எரிவாயு | A (18) | நூலக புத்தகங்கள், சஞ்சிகை மற்றும் பத்திரிகைகள் |

**A சேவைகள்**

| உருப்படி இலக்கம் | விபரம் | உருப்படி இலக்கம் | விபரம் |
|---|---|---|---|
| B (01) | நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் கட்டிட பராமரிப்பு வேலைகள் | B (11) | அச்சு விடயங்கள் (அறிவித்தல், ஆவணங்கள் மற்றும் கையேடுகள்) |
| B (02) | மோட்டார் கிரேடர், பெக்கோ இயந்திரம், லோடர் மற்றும் லொறி மற்றும் டிப்பர், வீதி அழுத்தும் சேவைகள் | B (12) | டிஜிட்டல் பெனர் அச்சிடுதல், உத்தியோக பூர்வ அச்சிடல், தின முத்திரைகள் தயாரித்தல் |
| B (03) | கணனி, பிரிண்டர் (மென்பொருள் மற்றும் வன்பொருள்) மற்றும் கணனி துணைப்பாகங்கள் பழுதுபார்தல் மற்றும் பராமரிப்பு | B (13) | வாகன டிங்கரிங் செய்தல் மற்றும் வெளி பழுதுபார்த்தல் விடயங்களை மேற்கொள்ளல் |
| B (04) | டிரக்டர் பழுதுபார்த்தல் | B (14) | வளிச்சீராக்கி இயந்திரம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் |
| B (05) | கெப் மற்றும் டிரக் பழுதுபார்த்தல் மற்றும் சேவை விடயங்களை மேற்கொள்ளல் | B (15) | வீதிப் பெயர் பலகை மற்றும் பெயர்ப்பலகை தயாரித்தல் |
| B (06) | முச்சக்கரவண்டி பழுதுபார்த்தல் மற்றும் சேவைகளை பழுதுபார்த்தல் | B (16) | நில அளவையாளர் சேவை |
| B (07) | உருக்கு கெபினட் மற்றும் உருக்கு அலுமாரி பழுதுபார்த்தல் மற்றும் அலுவலக மரத் தளபாடங்களை பழுதுபார்த்தல் | B (17) | தகனசாலை பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் |
| B (08) | ஒட்டு வேலைகள், இரும்பு வேலைகள் மற்றும் பட்டறையாளர்களின் சேவை | B (18) | சட்டத்தரணிசேவை, சிவில் பொறியியல் செயற்றிட்டத்திற்கான ஆலோசனை சேவை |
| B (09) | வாடகை வாகன சேவை வழங்குதல் - (வேன், சிறிய லொறி, முச்சக்கரவண்டி) | B (19) | ஜெனரேட்டர் இயந்திரம் பழுதுபார்த்தல் மற்றும் பராமரித்தல் |
| B (10) | உற்சவம் மற்றும் மாநாடுகளுக்கான உணவு வழங்குதல் | B (20) | மரக்கிளைகளை வெட்டுதல் மற்றும் ஆபத்தான மரம் மற்றும் கொட்டிகளை அகற்றுதல் |

### திவுலப்பிட்டிய பிரதேச சபை

### 2025 ஆம் ஆண்டிற்கான வழங்குநராக பதிவு செய்யும் விண்ணப்பம்

01. விண்ணப்பதாரியின் பெயர் :.....................................................................................
02. வியாபாரப் பெயர் மற்றும் முகவரி:.........................................................................
03. வியாபாரத்தின் தன்மை :.......................................................................................
04. பதிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் உருப்படி :.............................................................
05. தொலைபேசி இலக்கம் (அலுவலக) ...................................... கையடக்க ..........................
06. வெட் வரி பதிவு இலக்கம் (பிரதிகளை இணையுங்கள்) ..................................................
07. இலக்கம் .............. எனும் ரூ.......................... பெறுமதியான காசோலையானது இத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. 2025 ஆம் அண்டிற்காக வழங்குநர்/ஒப்பந்தக்காரராக பதிவுசெய்து கொள்ளுமாறு இத்தால் தயவுடன் கோருகிறேன்.

............................................ ..................................................................
**திகதி** **நிறுவனத்தின் உத்தியோகபூர்வ முத்திரை**
**விண்ணப்பதாரி/முகாமையாளர் கையொப்பம்**

இது பற்றிய மேலதிக விபரங்களை திவுலப்பிட்டிய பிரதேச சபையின் தொ.பெ.இல-031-2246275 மூலம் அலுவலக நேரங்களில் வழங்கல் அதிகாரியை அழைத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**ஐ.ஆர்.சி.எம். குருப்பு**
**திவுலப்பிட்டிய பிரதேச சபையின் செயலாளர் மற்றும் அதிகார செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி,**
**திவுலப்பிட்டிய பிரதேச சபை,**
**திவுலப்பிட்டிய.**

**2024.10.11 ஆம் திகதி**
**திவுலப்பிட்டிய பிரதேச சபையில்**

# நேர்மைப் பண்புகளால் வாழ்வில் உச்சத்தை அடைந்தவர் வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை



முயற்சி, உழைப்பு, நேர்மை, சமூகநேயம். மனிதநேயம் என ஏராளமான சிறந்த பண்புகளை தன்னகத்தே கொண்டு அவற்றின் துணையோடு இலங்கையில் ஒரு தொழிற்றுறை அதிபராகவும், சன்மார்க்கவாதியாகவும் மனிதநலனில் அக்கறை கொண்டவராகவும் திகழ்ந்த தேசபந்து வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை நிறுவிய வி.ரி.வி. நிதியம் பல்வேறு கல்விப் பணிகளை இலங்கையில் மேற்கொண்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் திருநெல்வேலி பன்னம்பாறை கிராமத்தில் 1911 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை பிறந்தார். அவர் பிறந்த திருநெல்வேலிச் சீமைக்கு பல சிறப்புகள் உள்ளன. வீரம் செறிந்த மண், விருந்தோம்பல் சிறப்பு மிக்கவர்கள்.

சான்றோர்களையும் அறிஞர்களையும் அருளாளர்களையும் தந்த அப்பகுதியில் வறுமையில் பிறந்து வளர்ந்து தன் 11ஆவது வயதில் அவர் இலங்கை வந்தார். அவரால் சாதாரண ஆரம்பக் கல்வியைத்தான் கற்க முடிந்தது. தன்னால் கற்க முடியாவிட்டாலும் தன் சந்ததியினராவது கற்க வேண்டும் என்ற உணர்வோடு அவர் தான் வாழ்ந்த வல்லநாட்டில் தமது சொந்தச் செலவில் பல நூறு மாணவர்கள் கல்வி பயிலக்கூடிய ஒரு பாடசாலையை ஸ்தாபித்தார்.

இலங்கையில் இந்திய வாம்சாவளியினருக்கு ஆன்மீகத்துறை, வர்த்தகத் துறை மற்றும் சமூக சேவை ஆகியவற்றுக்கு மாபெரும் தொண்டாற்றியதற்காக அவருக்கு இலங்கை அரசாங்கத்தால் தேசபந்து விருது என்ற அதியுயர் விருது 1993 மே மாதம் வழங்கப்பட்டது.

அவர் சாதாரண மக்கள் பற்றியும், சமூகத்தைப் பற்றியும் சிந்தித்துச் செயலாற்றினார். இதன் காரணமாக இன மத வேறுபாடுகளுக்கப்பால் பல தரப்பு மக்களாலும் போற்றப்பட்டார்.

20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிக்குப் பின்னர் வெளிநாடுகளுக்குத் தொழில் தேடிச் சென்றவர்கள், உயர்தொழில் தேடிச் சென்றவர்கள், உயர்தொழில் வல்லுநர்கள், படித்தவர்கள் என்று வெளிநாட்டு இந்தியர்கள் ஒன்று சேர்ந்து, இந்தியாவிற்கு உதவிட வேண்டும் என்ற முறையில் 'கோபியோ' போன்ற அமைப்பை 1989 இல் ஏற்படுத்தி செயற்பட்டு வருகின்றனர்.

அவர்கள் தமது நாட்டில் கிராமங்களைத் தத்தெடுத்தும் பள்ளிகளை அமைத்தும் சேவைகளை ஆற்றி வருகின்றனர். இத்தகைய வெளிநாட்டு இந்தியர்களுக்கெல்லாம் பிதாமகன் என்று சொல்லக்கூடிய வி.ரி.வி. தெய்வநாயகம் பிள்ளை ஐயா பல சகாப்தகாலத்திற்கு முன்னராகவே இலங்கை அரசாங்கத்தால் மடுமன்றி சகல இன மக்களாலும் பெரிய மனிதராக அங்கீகாரம் பெற்றவர். மற்றைய வெளிநாட்டுவாழ் இந்தியப் பிரமுகர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திகழ்ந்தவர். தமது தலைமையின் கீழ் இருபதுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களை ஏற்படுத்தி ஏராளமானவர்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கி பல துறைகளையும் சேர்ந்த தொழில் நிறுவனங்களை உள்ளடக்கி வி.ரி.வி. குழுமத்தையே நிறுவி அதன் தலைவராகவும் தொழிலதிபராகவும் பணியாற்றினார்.

அவர் ஆற்றிய சாதனைக்காக 1996 இல் அன்னாருக்கு இலங்கை அரசாங்கமானது 'விஸ்வபிரசாதினி' விருதினை முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க அம்மையார் வழங்கி கௌரவித்தார். எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல் பல்துறைகளிலுமம அரும்பெரும் சாதனை செய்தோருக்கு வழங்கப்படும் 'தேசபந்து' எனப்படும் அரசாங்க உயர் விருதினை முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க 1993இல் வழங்கிக் கௌரவித்தார்.

ஒரு சமயத்தொண்டர், அறங்காவர், சமூகசேவையாளர், தொழிலதிபர் என்ற வரிசையில் அவரது சேவை நான்கு சகாப்தங்களுக்கு மேலாக பல்கிப் பெருகியிருக்கின்றது. கடந்த 70 ஆண்டுகாலமாக வணிகத்துறையில் அவர் தனக்கென தனியான முத்திரை பதித்துள்ளார்.

இலங்கையின் சுதந்திரத்துக்கு முற்பட்ட காலத்தில் 1922 ஆம் ஆண்டு தனது தொழில் முயற்சியின் வழிகாட்டியாகவும், குருவாகவும் விளங்கிய அமரர் வீரவாகு பிள்ளையுடன் 11 வயது சிறுவனாக மினுவாங்கொடைக்கு வந்து சேர்ந்தவர் வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை. இந்தக் காலகட்டத்திலேயே தொழில்துறை நுணுக்கங்களை முறையாக கற்றுக்கொண்டு வர்த்தகத் தொடர்புகளையும் விஸ்தரித்துக் கொண்டார். 1924 முதல் 1927 ஆம் ஆண்டுவரை மாத்தறையில் வியாபாரத்துறையில் அனுபவம் பெற்றார்.

அதன் பின்னர் விஜய நகரம் அமரர் எஸ்.ஏ. அருணாச்சலம்பிள்ளையிடம் 1928 ஆம் ஆண்டிலிருந்து 1932 ஆம் ஆண்டு வரை புறக்கோட்டை கெய்சர் வீதியில் அரிசி வர்த்தகத்தில் ஈடுபட்டார். 1942 ஆம் ஆண்டிலிருந்து சொந்தமாகவே வியாபார நிறுவனங்களை ஆரம்பித்து வர்த்தகத் துறையிலீடுபட்டார். படிப்படியாக தொழில் முயற்சிகள் பெருகின. நவதானியம், பலசரக்கு, பல்வேறு உற்பத்திகள் ஏற்றுமதி, இறக்குமதி என்று பெருகி இன்று ஆலவிருட்சமாக வி.ரி.வி. குரூப் நிறுவனம் ஈஸ்வரன் பிரதர்ஸாக வளர்ந்திருக்கிறது.

ஒரு சிறந்த நிறுவனத் தலைவர் தெளிவான தொலைநோக்கைக் கொண்டவர், மற்றவர்களுக்கும், அந்த தொலைநோக்கை வெளிப்படுத்துபவர், தமது செயற்பாடுகளில் நேர்மைப் பண்பினைக் கடைப்பிடிப்பவர், நியாயத் தன்மையும் திறந்த மனப்பாங்கைக் கொண்டவர் என்று தலைமைத்துவப் பண்புகளைப் பட்டியல் இட்டுச் சென்றால் ஐயாவிடம் அந்த அனைத்துப் பண்புகளையும் காணலாம்.

வி.ரி.வியின் தெய்வீகத் திருப்பணிகளுக்கு உதவியாக மூன்று தசாப்தகாலம் அவருடன் இருந்தமையினால் அவர்களிடம் இருந்த இறைபக்தி, சமய நெறிமுறைகள், வாழ்க்கைத் தத்துவங்கள் சிறந்த முகாமைத்துவப் பண்புகள் அனைத்தையும் வளர்த்துக்கொண்டேன் என்று கூறுவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

**எச்.எச். விக்கிரமசிங்க ...**

ரியாத்திலுள்ள

# இலங்கை சர்வதேச பாடசாலை சமூகத்துடன் தூதுவர் சந்திப்பு



ரியாத்திலுள்ள இலங்கை சர்வதேச பாடசாலையின் (SLISR) போசகர் தூதுவர் அமீர் அஜ்வத் அண்மையில் பாடசாலையின் பணிப்பாளர்கள் சபை மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கத்துடன் சந் திப்பினை மேற்கொண்டார். பாடசாலையின் எதிர்கால அபிவிருத்தியை மையப்படுத்தி செயற்திறன் மிக்க கலந்துரையாடல்களை அவர் மேற்கொண்டார்.

குறித்த கலந்துரையாடலின் போது தூதுவர் அமீர் அஜ்வத் அவர்களை, சவுதி அரேபியாவுக்கான இலங்கைத் தூதுவர் என்ற வகையிலும் பாடசாலையின் போசகர் என்ற வகையிலும் சவுதி அரேபிய இராச்சியத்திற்கு வரவேற்ற பணிப்பாளர்கள் சபை கடந்த தசாப்தங்களில் தாம் மேற்கொண்டிருக்கின்ற முன்னேற்றச் செயற்பாடுகள் குறித்தும் பாடசாலை எதிர்கொள்கின்ற சவால்கள் குறித்தும் எடுத்துரைத்தனர். பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் SLISRஇல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான கல்விச் சேவைகளை மேம்படுத்துவது தொடர்பில் தூதுவருடன் கலந்துரையாடியது.

இதன்போது கடந்த பல தசாப்தங்களாக ரியாத்திலுள்ள இலங்கை சர்வதேச பாடசாலை மேற்கொண்டு வருகின்ற சேவைகளைப் பாராட்டிய தூதுவர் அமீர் அஜ்வத், சவுதி அரேபியாவில் வாழ்கின்ற இலங்கைத் தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்குவதன் முக்கியத்துவம் தொடர்பிலும் வலியுறுத்தினார்.

மேலும் தூதுவர் SLISR ஐ சவுதி அரேபியாவில் உள்ள 'இலங்கையின் சொத்து' என்று அடையாளப்படுத்தியதுடன், எதிர்வரும் காலங்களில் பாடசாலையின் அபிவிருத்திக்கான தனது பூரண ஆதரவு கிடைக்கப் பெறும் எனவும் தெரிவித்தார். உலகெங்கும் பரவி வாழ்கின்ற SLISRன் பழைய மாணவர்களை மீள் இணைப்புச் செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்திய தூதுவர், பாடசாலையின் முன்னேற்றம் தொடர்பான முன்னெடுப்புகளுக்கு உதவும் விதத்தில் அவர்களை ஈடுபடுத்துவது தொடர்பிலும் கருத்துரைத்தார்.

ரியாத்திலுள்ள இலங்கை சர்வதேச பாடசாலை (SLISR) சுயாதீனமானதும், இலாப நோக்கமற்றதுமான ஒரு சமூகப் பாடசாலையாக இருப்பதுடன், ரியாத்திலுள்ள இலங்கைச் சமூகத்திற்கு மிகச் சிறந்த கல்வியை வழங்குகின்ற மத்திய தளமாகவும் திகழ்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

**இலங்கை தூதுவராலயம்**
**ரியாத்**

# ஒரே நாளில் பதவியை இராஜினாமா செய்த 200 அரசாங்க மருத்துவர்கள்!

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்திலுள்ள ஆர்.ஜி. கர் மருத்துவமனையில் இளம்பெண் மருத்துவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொல்லப்பட்ட சம்பவம் மீதான எதிர்ப்பு அலை அம் மாநிலத்தில் இன்னும் தீரவில்லை. இந்தச் சம்பவத்தைக் கண்டித்து மருத்துவர்கள் தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

மத்திய கொல்கத்தாவின் ஜன்பசாரில் கடந்த 5 ஆம் திகதி மாலை முதல் இளம் மருத்துவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தொடர்ச்சியாக 5 ஆவது நாளாக உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நீடித்தது. இதனால் மருத்துவர்களின் உடல்நிலையில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் இளம் மருத்துவர்களின் போராட்டத்திற்கு ஆதரவு வழங்கும் விதமாக, மேற்கு வங்கத்தில் அரசு மருத்துவர்கள் 200 இற்கும் மேற்பட்டோர் ஒரே நாளில் இராஜினாமா செய்து பரபரப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

கொல்கத்தா தேசிய அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் 50 சிரேஷ்ட மருத்துவர்களும், என்.ஆர்.எஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 34 மருத்துவர்களும், சாகோர் தட்டா மருத்துவ கல்லூரியில் 30 மருத்துவர்களும், ஜல்பாய்குரி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 19 மருத்துவர்களும் இராஜினாமா செய்தனர்.

அதற்கு முன்னதாக கொல்கத்தா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 70 சிரேஷ்ட மருத்துவர்களும், வடக்கு வங்காள மருத்துவக் கல்லூரி மருத்துவமனையைச் சேர்ந்த 40 மருத்துவர்களும் பணியை இராஜினாமா செய்தனர். மருத்துவர்களின் ஒட்டுமொத்த இராஜினாமாவால், அரசு மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பற்றாக்குறை ஏற்படும் சூழல் நிலவி வருகிறது. இது ஆளும் மம்தா பானர்ஜி தலைமையிலான அரசுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## கேள்வி அறிவித்தல்

### கம்புறுப்பிட்டிய பிரதேச சபை

கம்புறுப்பிட்டிய பிரதேச சபையினால் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 2025.01.01 முதல் 2025.12.31 வரை குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02. கேள்விகள் விநியோகித்தல் - 2024.10.14 முதல் 2024.11.05 மு.ப. 11.00 வரை
03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் - 2024.11.05 ந.ப. 12.00 வரை
04. கேள்விகள் திறத்தல் - 2024.11.05 பி.ப. 12.30 இற்கு
05. தீர்மானிக்கப்பட்டுள்ள கேள்விப்பிணை மற்றும் கேள்விப் படிவக் கட்டணத்தை அலுவலகத்திற்கு செலுத்துவதன் பேரில் தேசிய அடையாள அட்டை மூலம் ஆளடையாளத்தை உறுதி செய்து கொண்டு விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ளலாம். ஏனைய விபரங்கள் மற்றும் கேள்வி நிபந்தனைகளை கேள்விப் படிவத்துடன் பெற்றுக் கொள்ள முடிவதுடன் மேலதிக விபரங்களை 041 2292275/ 041 2293639 என்ற தொ.பே. இலக்கத்தின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.
06. கேள்வி பற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தல் கேள்விகள் குழுவிற்கு உரியது.

2024.10.08
**செயலாளர்,**
**கம்புறுப்பிட்டிய பிரதேச சபை.**

**அட்டவணை**

2025ம் ஆண்டிற்காக கேள்வி மூலம் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ள சொத்துக்கள்

| தொடர் இல. | சொத்து விபரம் | பெறுகைப் படிவக் கட்டணம் (ரூ.) | பெறுகை வைப்பு (ரூ.) | குறைந்தபட்ச கேள்வி ரூ. |
|---|---|---|---|---|
| 1 | கம்புறுப்பிட்டிய ஞாயிறு மக்கள் சந்தைக்கான வரி அறவிடல் | 1000.00 (ஆயிரம்) | 5000.00 (ஐயாயிரம்) | 2200000.00 இருபத்தி இரண்டு இலட்சம்) |
| 2 | கம்புறுப்பிட்டிய நகர எல்லைக்குள் வர்த்தக வாகனங்களிலிருந்து வரி அறவிடல் | 300.00 (முந்நூறு) | 1000.00 (ஆயிரம்) | 140000.00 (ஒரு இலட்சத்து நாற்பதாயிரம்) |

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
## பெருந்தோட்ட அமைச்சு
## வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்

LSC

## விலைமனுக்கோரல்

### வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) நிறுவனத்தின் பெல்வத்த மற்றும் செவனகல பிரிவுகளில் தயாரிக்கப்பட்ட சிவப்பு சீனி விற்பனைக்குரிய விலைமனுக்கோரல்

வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனத்தின் அமைச்சின் கொள்முதல் குழு (MPC) தலைவர் மூலம் பெலவத்த பிரிவின் **2,000 மெ.டொ** மற்றும் செவனகல பிரிவின் **1,000 மெ.டொ** வீதம் இரண்டு தடவைகளில் சீனி **மெ.டொ.6,000** விற்பனைக்காக விலைமனுக்கள் கோரப்படுகின்றது.

01. விலைமனுக்கள் முன்வைக்க விரும்புபவர்கள் பின்வரும் நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

i. குறைந்தபட்சம் 25 மெ.டொ கொள்வனவு செய்ய வேண்டும்.
ii. ஆகக்கூடியது மெ.டொ.750 கொள்ளவனவு செய்ய முடியும்.
iii. கொள்வனவு செய்யப்படும் சீனி மெ.டொ.25 வீதம் பிரிவுகளாக கொள்வனவு செய்ய வேண்டும் (உதா- 25Mt, 50Mt,75Mt, 100Mt, 125Mt…… என்றவாறு)
iv. விலைக்கு கொள்வனவு செய்யப்படும் சீனி **25 மெ.டொ.** க்கு மேற்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் திருப்பிச் செலுத்த முடியாத கட்டணம் மற்றும் மனுப் பாதுகாப்பு **25 மெ.டொ.** பணமாக பெருக்கப்பட வேண்டும். (உதாரணமாக - **50 மெ.டொ.** எனின் திருப்பிச் செலுத்தப்படாத கட்டணம் **ரூ 4,500.00** மனுப் பாதுகாப்பு **ரூ 172,500.00** போன்றவை)

02. கீழே உள்ள அட்டவணையின்படி மீளளிக்கப்படாத கட்டணத்தை பணமாக செலுத்தி வேலை நாட்களில் நேரப்படி 9.00 மணி முதல் 15.00 மணிவரை வறையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல 27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்பு 04 என்ற முகவரிக்கு எழுத்துமூல விண்ணப்பமொன்றினை சமர்ப்பித்து விலைமனு ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்றை விலைமனுதாரரினால் கொள்வனவு செய்ய முடியும்.

| தொழிற்சாலைப் பிரிவு | மனு ஆவணப் படிவம் கிடைக்கும் திகதி | விலைக்கு பெற்றுக் கொண்ட சீனியின் அளவு (மெ.தொ) | மீள்திருப்பிச் செலுத்தப்படும் கட்டணம் | மனுப் பாதுகாப்பு | மனுக்கள் திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|---|
| | 2024.10.11 ம் திகதி முதல் 2024.10.30 ம் திகதி வரை | 25 Mt | 2,250.00 | 86,250.00 | 31 /10/2024 |
| செவனகல | | 1,000 Mt | 90,000.00 | 2,300,000.00 | |
| பெல்வத்த | | 2,000 Mt | 180,000.00 | 4,600,000.00 | |
| | 2024.11.01 ம் திகதி முதல் 2024.11.20 ம் திகதி வரை | 25 Mt | 2,250.00 | 86,250.00 | 21/11/2024 |
| செவனகல | | 1,000 Mt | 90,000.00 | 2,300,000.00 | |
| பெல்வத்த | | 2,000 Mt | 180,000.00 | 4,600,000.00 | |

03. விலைமனுவுடன் மீளளிக்கப்படாத கட்டண வைப்பு பற்றுச்சீட்டு அல்லது வங்கி வரைவை சமர்ப்பித்தல் வேண்டும். இணைக்கப்படாத அத்தகைய விலைமனு நிராகரிக்கப்படும்.

04. விலைமனுக்களை **14.00 மணிக்கு முன்னர்** தாமதிக்காது தலைவர், அமைச்சின் பெறுகைக் குழு, வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம், இல.27, மெல்போர்ன் ஒழுங்கை, கொழும்ப 04 என்ற முகவரிக்கு கிடைப்பதற்கு முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறையில் பதிவுத் தபால், விரைதூதர், நேரடியாக கையளிக்கப்பட வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **“சீனி மெ.டொ அளவு மற்றும் உரிய அலகு”** என்பவற்றை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அதன் பின்னர் விலைமனுக்கள் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் விலைமனுதாரர் அல்லது அவர்தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் பங்கேற்கலாம். தாமதமாக கிடைக்கும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது. கேள்விமனுக் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

05. அனைத்து மனுக்களுக்கும் மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள **“மனுப்பாதுகாப்பு”** உடன் இணைத்திருத்தல் வேண்டும் மேலும் விலைமனுக்கள் திறக்கப்பட்ட திகதியிலிருந்து **21 நாட்களுக்கு** செல்லுபடியாகும்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் வறையக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவன - தலைமை அதிகாரி (பெறுகை) இருந்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி +94112584184, +940710912252, தொலைநகல் +94112500674 (மின்னஞ்சல் : nadeeshanisandamali@gmail.com)

**தலைவர்,**
**அமைச்சின் பெறுகைக் குழு,**
**வரையறுக்கப்பட்ட லங்கா சீனி (தனியார்) நிறுவனம்,**
**இல-27, மெல்போர்ன் ஒழுங்கை,**
**கொழும்பு 04.**

SELACINE

## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள பொருட்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இல | கேள்வியின் பெயர் | விலைமனு பிணைத் தொகை (ரு) | ஆவணக் கட்டணம் (VAT அடங்கலாக) | மூடப்படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/04/ PT/6616(MP) | 08 Nos. Main Trolley Wire Ropes for 65T ZPMC STS Cranes at ECT | 300,000.00 | 3,500.00 | 21/11/2024 10.00 மணி |
| CES/FP/04/ PT/6621(EL) | 50 Nos. of 300W Warm White LED Flood Light Fittings | 75,000.00 | 1,000.00 | 21/11/2024 10.00 மணி |
| CES/FP/06/ PT/6618(MAR) | 01 No. Lamella Clutch Complete Assembly of Port Aquamaster Unit of Tug Gotaimbara | 250,000.00 | 3,500.00 | 21/11/2024 10.00 மணி |
| CMS/LP/23/ PT/11/004 | MS Plates | 78,500.00 | 1,000.00 | 25/10/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/02/059 | 10 Nos. of Brake Cylinders for the Terberg Yard Tractors | 17,500.00 | 1,000.00 | 04/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/08/057 | 04 Nos. 20 Ton Complete Axle (Model DLBC 45/65T/1555REV-02) | 19,500.00 | 1,000.00 | 04/11/2024 13.30 மணி |
| CMS/LP/23/ PT/10/065 | Filters for Cummins Engines | 60,000.00 | 1,000.00 | 04/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/11/060 | Main Hoist Wire Rope Sheaves for J-1/J-2 Mitsui STS Cranes | 35,000.00 | 1,000.00 | 05/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/11/062 | 01 No. of Transmission Oil Cooler for ZF Transmission of the Launch : Pilot 14 | 25,000.00 | 1,000.00 | 05/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/17/055 | Supply, Installation and Commissioning of Radar System for Pilot Station | 60,000.00 | 1,000.00 | 05/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/18/056 | Reel Hose P/N-EZ54V00001F1 | 30,000.00 | 1,000.00 | 06/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/18/052 | Spare Parts for Air Conditioning System for Pilot 17 | 50,000.00 | 1,000.00 | 06/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/19/056 | 05 Nos. Compressor Unit | 17,500.00 | 1,000.00 | 06/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/11/063 | Air Compressors for UD Nissan Prime Movers | 18,000.00 | 1,000.00 | 07/11/2024 13.30 மணி |
| CMS/LP/24/ PT/19/011 | 15 Nos. Steel Rib Bars | 500,000.00 | 12,500.00 | 07/11/2024 13.30 மணி |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான மொத்த ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படும். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு விலைமனுதாரரும் முகவரொருவராக, உபமுகவராக, பிரதிநிதியொருவராக அல்லது எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளரின் அல்லது ஒரு வழங்குநராக பெயர் குறிப்பிடப்படுபவராக செயற்பட விரும்பின், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழை விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான பண்டங்களை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கலுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2024 ஒக்டோபர் 11 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டியுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள் அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் நேரடியாகவே சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்:** **2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்:** **2381652, 2470443**

Trusted Marketplace of Classified Advertisers
Sunday Observer adz Classified
Tuition Vehicle Employment Photo Classifieds Miscellaneous House/ Land Rent or Lease Wanted
For 15 Words Rs. 800/-
* Cost of each additional word Rs. 20/-
077 7 278 948 / 011 2 429 342/ 343 / 011 2 429 383
Fax - 011 2 429 375 - 011 2 429 380 / E-mail - classified@lakehouse.lk
Hand over your Classified Advertisements to Our nearest Branch Office
Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910 / Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291
Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335 / Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Maharagama - TEL : 011 2 828 114 FAX : 011 4 828 114 / Jaffna - TEL : 021 22 25 361 FAX : 021 22 25 361

Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
WE ACCEPT
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# கேள்வி கோரல் – 2025ஆம் வருடம்

## கேகாலை நகர சபை

தங்காலை நகர சபைக்குரித்தான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குத்தகை விடயங்களுக்கு இயைபாக 2025.01.01 முதல் 2025-12-31ஆம் திகதி வரையான நாட்காட்டி வருடங்களுக்காக ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் / வரி சேகரிக்கும் உரிமையை வழங்குவதற்காக பின்வரும் நிபந்தனைகளின் கீழ் கேள்விகள் கோரப்படுகின்றன.

**நிபந்தனைகள்:**

01. விண்ணப்பதாரர் 18 வயதிற்கு மேற்பட்ட இலங்கைப் பிரஜையாகவிருத்தல் வேண்டும் என்பதுடன், வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராம சேவையாளர் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, வருடாந்தம் 240,000.00 ரூபாவிற்கு மேற்பட்ட வருமானம் உள்ளதாக பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழைச் சமர்ப்பித்து, இயைபுடைய கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாதது) மற்றும் கேள்வி பிணை வைப்புத் தொகையை (மீளளிக்கப்படும்) செலுத்தி 2024-10-11ஆம் திகதி மு.ப. 08.00 மணி முதல் 2024-11-04ஆம் திகதி பி.ப. 03.00 மணி வரை தங்காலை நகர சபை அலுவலத்தில் கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் படிவங்களை இரு நகல்களில் தயாரித்து மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியென வெவ்வேறான உறைகளில் இட்டு, அவ்விரு உறைகளையும் ஒரு உறையில் இட்டு அவ்வுறையில் இடதுபக்க மேல் மூலையில் குறித்த குத்தகை விடயத்தைக் குறிப்பிட்டு 2024-11-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகக் கொண்டுவந்து ஒப்படைத்து அல்லது தங்காலை நகர சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு ஒப்படைக்கலாம்.
03. எமது இணையதளத்திலிருந்து விண்ணப்பப் படிவங்களை பதிவிறக்கம் செய்துகொள்வதானால், அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விலைக்கோரல் காப்புறுதி தொகை (மீளளிக்கப்படும்) மற்றும் கேள்விப் படிவக் கட்டணம் எனும் இரண்டினதும் பெறுமதியை மக்கள் வங்கியின் 067100175533192 இலக்க ''செயலாளர், தங்காலை நகர சபை'' எனும் கணக்கிலத்திற்கு வைப்புச் செய்து குறித்த வங்கிப் பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றுடன் விண்ணப்பப் படிவத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
04. 2024-11-05ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் கேள்வி விண்ணப்பதாரர் அல்லது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.
05. தகைமை வாய்ந்த விண்ணப்பதாரரொருவருக்கு குறித்த கேள்வியைக் கையளிப்பதற்கு அல்லது ஏதாவது ஏற்றுக்கொள்ளக்கூடிய காரணம் அல்லது காரணங்களினால் கேள்விகளை நிராகரிப்பதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரத்தை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
06. இது தொடர்பான மேலதிக விபரங்களை 047-2240275 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு அல்லது www.tangalle.uc.gov.lk இணையதளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை**

| தொ. இல. | விடயம் | விண்ணப்பிக்கக் கூடிய ஆகக் குறைந்த கேள்விப் பெறுமதி ரூபா சதம் | கேள்விப் பிணைத் தொகை (கேள்வி காப்பு) (மீளளிக்கப் படும்) ரூபா சதம் | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) ரூபா சதம் |
|---|---|---|---|---|
| 01 | தங்காலை மக்கள் சந்தை, மீன் சந்தையில் வரிகளை அறவிடுதல் மற்றும் நகர சபை எல்லையினுள் மேலதிக வரிகளைச் சேகரிக்கும் உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 5,500,100.00 | 100,000.00 | 1,500.00 |
| 02 | தங்காலை பொதுச் சந்தை மாட்டிறைச்சிக் கடையை குத்தகைக்கு வழங்குதல் | 668,000.00 | 50,000.00 | 500.00 |
| 03 | புதிய பொது மலசலகூடத்தில் வரி அறவிடும் உரிமையை வழங்குதல் | 1,120,000.00 | 50,000.00 | 500.00 |
| 04 | பறைவெல்ல கடற்கரை பூங்காவில் கட்டணம் அறவிடும் உரிமையை குத்தகைக்கு வழங்குதல் | 2,685,000.00 | 50,000.00 | 1,500.00 |
| 05. | தங்காலை தேக்கவத்த மேல் வீதி ஆரம்பிக்கப்படும் இடத்தில் உள்ள வெற்றுக் காணியை அலங்கரித்தல் மற்றும் அறிவித்தல் பலகையை காட்சிப்படுத்தும் உரிமையை வழங்குதல் | 52,000.00 | 5,000.00 | 1,000.00 |

**டீ.டப்.கே. ரூபசிங்க,**
**செயலாளர்,**
**தங்காலை நகர சபை.**
2024-10-11.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# இலங்கை வங்கி

## மீட்கப்படாத அடகு நகைகளின் ஏல விற்பனை

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கிளைகளின் பெயர்களுக்கு எதிரேயுள்ள திகதிகள் வரை அடகு வைக்கப்பட்டு அடுத்த கூட்டிற் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகள் வரை மீட்கப்படாதுள்ள நகைகள் அட்டவணையின் இறுதிக் கூட்டில் உள்ள திகதி மற்றும் இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். (ஏலங்கள் காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்)

| கிளை | நகைகள் அடகு வைக்கப்பட்டுள்ள காலப்பகுதி | மீட்கப்படவேண்டிய இறுதித் திகதி | ஏல விற்பனைத் திகதியும் இடமும் |
|---|---|---|---|
| வெள்ளவத்தை மேற்தரக் கிளை<br>கொள்ளுப்பிட்டி மேற்தரக் கிளை<br>பம்பலப்பிட்டி மேற்தரக் கிளை<br>யூனியன் பிளேஸ் மேற்தரக் கிளை<br>நகர அலுவலகம் (சிற்றி ஒவ்விஸ்) மேற்தரக் கிளை<br>பொரளை மேற்தரக் கிளை<br>றீஜென்ட் ஸ்ட்ரீட் மேற்தரக் கிளை<br>சுதந்திர சதுக்கம்<br>திம்பிரிகஸ்யாய<br>ஹைட்பாக்<br>மிலாகிரிய<br>புதுக்கடை (ஹல்ப்ட்ஸ்ட்ரொப்)<br>மருதானை<br>பிரதான வீதி (மெயின் ஸ்ரீட்)<br>கொட்டாஞ்சேனை<br>லேக்வியூ<br>தெமட்டகொட<br>கிராண்ட்பாஸ்<br>கொழும்பு தங்க நிலையக் கிளை<br>மத்திய பேருந்து நிலையக் கிளை<br>பொரளை இரண்டாம் கிளை<br>லேக் ஹவுஸ் கிளை<br>பழைய சோனகத் தெரு கிளை<br>கொள்ளுப்பிட்டி இரண்டாம் கிளை<br>நாரஹேன்பிட்ட<br>விசாகா<br>கிருலப்பனை<br>லங்கா கொஸ்பிட்டல் கிளை<br>தலைநகரக் கிளை (மெட்ரோபொலிட்டன்) | 2023.07.25 வரை (12 மாதங்களுக்கு) அடகு வைக்கப்பட்ட நகைகள்<br><br>2024.01.25 வரை (06 மாதங்களுக்கு) அடகு வைக்கப்பட்ட நகைகள் | 2024.10.25 | 2024.10.26<br><br>நகர அலுவலகம் (சிற்றி ஒவ்விஸ்) |

மேற்குறித்த ஏலங்களை இரத்துச் செய்யும், பிற்போடும், ஒன்றிணைக்கும் உரிமை இலங்கை வங்கிக்கு உண்டு.

**பிரதிப் பொது முகாமையாளர்**
**அபிவிருத்தி வங்கியியல் மற்றும் கிளைக் கடன் செயற்பாடுகள் - பிரிவு II**
**தலைமை அலுவலகம்,**
**இலங்கை வங்கி**
**கொழும்பு 01**
**தொலைபேசி – 011 2399568 / 011 2204545**

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி
தேசத்தின் வங்கியாளர்

# பெறுகை அறிவித்தல்

## ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்

### 2024, சர்வதேச மிளகு சமூகத்தின் (IPC) 52வது சர்வதேச மாநாட்டிற்கு வாடகை அடிப்படையில் சாரதி மற்றும் எரிபொருள் சகிதம் மோட்டார் வாகனங்களை வழங்குதல்

1. சர்வதேச மிளகு சமூகத்தினால் வருடாந்தம் நடாத்தும் 52வது சர்வதேச மாநாட்டை 2024ஆம் வருடத்தில் இலங்கையில் நடாத்த ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் திட்டமிட்டுள்ளது. பின்வரும் வகையில் சர்வதேச மிளகு சமூகத்திற்கு (IPC) எரிபொருள் மற்றும் சாரதிகள் சகிதமான வாகனங்களை (ஹைபிரிட்/ பெட்ரோல்/ டீசல்) வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சார்பாக சிறியளவிலான பெறுகைக் குழுவின் தலைவர் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அன்புடன் அழைக்கின்றார்.

| தொ. இல. | வாகன விபரங்கள் | வாகனத்தின் நோக்கம் | தேவைப்படும் வாகனங்களின் எண்ணிக்கை | தேவைப்படும் நாட்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | Sport Utility வாகனம் / பலநோக்கு வாகனம் (AC சகிதம்) | IPC செயலகம் | 01 | 04 |
| | | விமான நிலையம் முதல் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் வரை பயணிப்பதற்கு | 02 | 02 |
| 02 | பயணிகள் வேன் (AC சகிதம்) 6 அல்லது அதற்கு மேற்பட்ட ஆசனங்களுடன் | IPC செயலகம் | 01 | 04 |
| | | விமான நிலையம் முதல் கொழும்பு ஹில்டன் ஹோட்டல் வரை பயணிப்பதற்கு | 02 | 02 |
| 03 | பயணிகள் பஸ் (AC சகிதம்) 40 அல்லது அதற்கு மேற்பட்ட ஆசனங்களுடன் | பிரதிநிதிகளின் வெளிக்களப் பயணங்களுக்கு | 02 | 01 |

2. சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலப்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் விலைமனு ஆவணத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சகல மூலப் பிரமாணங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

3. ஆர்வமுள்ள தரப்பினர் இரண்டாயிரம் இலங்கை ரூபா (2,000.00 இல. ரூபா) மீளளிக்கப்படாத கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்துவதுடன் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றையும் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக்கொள்ளலாம். கொடுப்பனவுகளை கீழே வழங்கப்பட்ட முகவரியில் அமைந்துள்ள தலைமை அலுவலகம் மற்றும் கொழும்பு மாவட்ட உதவிப் பணிப்பாளர் அலுவலகத்திற்கு செலுத்துதல் வேண்டும். 2024 ஒக்டோபர் 11ஆம் திகதி முதல் 2024 ஒக்டோபர் 30ஆம் திகதி வரை விலைமனுக்கள் வழங்கப்படும்.

| தொ. இல. | அலுவலகம் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 01 | தலைமை அலுவலகம் - ஏற்றுமதி விவசாயத் திணைக்களம் | ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்,<br>இல. 1095, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை,<br>பேராதனை. | 081-2388651<br>081-2386018<br>081-2386019 |
| 02 | மாவட்ட உதவிப் பணிப்பாளர் அலுவலகம் - கொழும்பு | மாவட்ட உதவிப் பணிப்பாளர் அலுவலகம்,<br>ஏற்றுமதி விவசாயத் திணைக்களம்,<br>9ஆம் மாடி, II கட்டம், செத்சிறிபாய, பத்தரமுல்ல. | 011-2867275 |

